பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 24 செவ்வாய்க்கிழமை (08.03.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :102

# விமானப்படையை புலிகள் அமைப்பு விருத்தி செய்வதாக அரசு ஆத்திரம்!

## காத்திரமான நடவடிக்கை எடுக்க நோர்வேத் தரப்புக்கு அழுத்தம்

கொழும்பு, மார்ச்8

**யுத்தநிறுத்த காலத்தில் அதைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் இயக்கம் தன்னுடைய விமானப் படையை விஸ்தரித்து, விருத்திசெய்து வருகின்றது எனக் குற்றம் சுமத்தியுள்ள இலங்கை அரசு, இந்நடவடிக்கை குறித்து கடும் ஆத்திரம் அடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.**

**இவ்விடயம் குறித்து காத்திரமான நடவடிக்கையை விரைந்து எடுக்குமாறு தனக்கும், புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளில் அனுசரணைப் பணியாற்றும் நோர்வேத் தரப்பை இலங்கை அரசு வலியுறுத்திக்கேட்டிருப்பதாகவும் அறியவருகின்றது.**

விடுதலைப் புலிகள் விமானப்படையை விருத்திசெய்வது யுத்தநிறுத்த காலத்தில் அரசுப் படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் நிலவிவரும் இராணுவச் சமநிலையை மோசமாகப் பாதிக்கும் என்று கருதும் இலங்கை அரசு, இதுவிடயத்தில் நிலைமையைத்திருத்துவதற்குச் சாத்தியமான - புலப்படத்தக்க - சாதகமான - பதில் நடவடிக்கைகளை எடுப்பதற்குப் புலிகள் மீது உரிய அழுத்தம் பிரயோகிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றது என்றும் கூறப்படுகின்றது.

இவ்விடயம் குறித்து - இலங்கை அரசின் அழுத்தம் காரணமாக - விடுதலைப் புலிகளோடு நோர்வேத் தரப்பு ஏற்கனவே கலந்துரையாடியுள்ளது என்றும் தெரிகின்றது.

ஆனால், விமானப்படை தங்களிடம் இருப்பது பழைய கதை என்றும் - விமான ஓடுபாதை புதிதாக அமைக்கப்பட்டதல்ல, ஏற்கனவே உள்ளது தான் என்றும் -

புலிகள் நோர்வேத் தரப்புக்குத் தெரியப்படுத்தினர் என அறிய வந்தது.

ஆனால், இதுவிடயத்தில் புலிகளின் பதில் விட்டேத்தியானது என்று கருதும் அரசு, பய

(16ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் சிவராத்திரிச் செய்தி

சகல இன மக்களும் சௌபாக்கியங்களுடனும் அமைதியாகவும் சமாதானத்துடனும் வாழ்வதற்குச் சிவராத்திரி நாளில் பிரார்த்தனை செய்வோம்.

யாழ்.பாதுகாப்புப் படைகளின் சார்பில் விடுக்கப்பட்ட சிவராத்திரி தினச் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படைகளின் யாழ்.கட்டளை அதிகாரி நேற்று விடுத்த சிவராத்திரிச் செய்தியில் -

மகாசிவராத்திரி தினத்தில் சிவபெருமானைத் தரிசித்து, பலநன்மைகளைப் பெற்றுக்கொள்ள விரதமிருந்து, கண்விழித்து நான்குசாமப் பூசைகளில் கலந்துகொள்வதுடன், இந்த விரதத்தைச் சகல இந்து மக்களும் வயது வேறுபாடுகளின்றிக் கலந்துகொள்வார்கள். இந்த மகா சிவாரத்திரி தினத்தை சகல மக்களும் அனுஷ்த்து சகல சௌபாக்கியங்களுடன் அமைதியாகவும் சமாதானத்துடனும் நீண்டகாலம் நாம் அனைவரும் ஒற்றுமையாக வாழ பாதுகாப்பு படையினராகிய நாமும் பிரார்த்தனை செய்கிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஆளுநர் யாழ். வந்தால் அதைப் பகிஷ்கரிப்போம்

பெற்றோர், பாதுகாவலர் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 8

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோவின் யாழ்ப்பாண விஜயத்தைப் பகிஷ்கரிக்கப் போவதாக வடக்கில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் அறிவித்திருக்கிறது.

ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ நாளை புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தர ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே .

1996-99 காலப் பகுதியில் கைதுசெய்யப்பட்ட பின்னர் காணாமற்போன பல நூற்றுக் கணக்கான அப்பாவித் தமிழ் இளைஞர்களின் கதி என்ன என்பதற்குப் பதில் தராமலே காலத்தை இழுத்தடித்து வருகின்றது சந்திரிகா அரசு. இதே வேளை, ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்குச் சர்வதேச

(16ஆம் பக்கம் பார்க்க)

# போராளிகள், பொதுமக்கள் உயிரிழப்பதை தலைவர் பொறுத்துக்கொள்ளமாட்டார்

## தமிழ்ச்செல்வன் பேட்டி



கிளிநொச்சி, மார்ச்8

தமிழ்மக்கள், போராளிகள் கொல்லப்படுவதை எமது தேசியத்தலைவர் தொடர்ந்தும் பார்த்து சகித்துக் கொண்டிருக்கமாட்டார். நிச்சயமாக எமது தலைமைப்பீடம் இதற்கு ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கும் என நான் எண்ணுகின்றேன்.

இவ்வாறு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

தொடர்ந்தும் விடுதலைப் புலிகள் சகித்துக் கொண்டிருக்கமாட்டார்கள்.

விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு தேசிய விடுதலை அமைப்பாகப் பரிணாமம் பெற்று பலம் வாய்ந்த படைகளைக் கொண்டதாக விளங்குகின்றது. எங்கள் நிலப்பரப்பில் 60 முதல் 70 வீதமான பகுதி எமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது.

இதற்குக் காரணம் தமிழ் மக்கள் தொடர்ச்சியாகக் கொல்லப்பட்டமையும், மக்கள் சொந்த இடங்களில் இருந்து இடம் பெயர்ந்தமையும், தமிழ்மக்கள் மீது பெரியதோர் ஆக்கிரமிப்பு நடவடிக்கையை சிங்களப்படைகள் எடுத்ததுமே. இதனாலே எங்கள் விடுதலைப் போராட்டம் முனைப்புப்பெற்றது.

ஆகவே, தமிழ்மக்கள் மீதான படுகொலைகள் தொடர்ந்தால் விடுதலைப் புலிகள் பொறுமை காத்துக்கொண்டிருப்பார்கள் என்பது எதிர்பார்க்க முடியாததொன்று.

விடுதலைப் புலிகள் ஒருகாலத்தை, ஒரு சந்தர்ப்பத்தை சிங்கள அரசுகளுக்கும், இனவாதிகளுக்கும் வழங்கியிருந்தார்கள். தமிழ் மக்கள் எப்போது இதிலிருந்து சலிப்படைந்து, வெறுப்படைந்து ஓர் உறுதியான முடிவை எடுக்கிறார்களோ, அந்தக்கட்டத்தில் விடுதலைப் புலிகளும் ஒரு தீர்க்கமான முடிவு எடுப்பார்கள்.

நிச்சயமாக பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு. அளப்பரிய தியாகங்களை நாம் செய்துவிட்டோம்.

இதன் அடுத்த கட்டமாகச் சர்வதேச சமூகத்திற்கும் இலங்கை அரசிற்கும் எங்களுடைய செய்திகளை ஆணித்தரமாகக் கொடுத்திருக்கிறோம்.

எதிர்வரும் காலங்களில் இப்படியான போக்குகளில் இருந்து மாற்றங்கள் ஏற்படாவிட்டால் நிச்சயமாக நிலைமை மோசமடையும் என நான் கருதுகின்றேன் என்றார். (8-12)

# படையினரின் அடாவடியை எதிர்த்து யாழ். நகரில் மாணவர்கள் பேரணி

யாழ்ப்பாணம், மார்ச்8

யாழ்ப்பாணத்தில் கடந்த வெள்ளியன்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மீது பொலீஸாரும், இராணுவத்தினரும் நடத்திய தாக்குதலைக் கண்டித்து யாழ். நகரில் நேற்றுக் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது. குடாநாடெங்கும் துக்க தினமும் அனுஷ்டிக்கப்பட்டது. மக்கள், மாணவர்கள் கறுப்புப்பட்டிகளை அணிந்தபடி நடமாடினர்.

கடந்த வெள்ளியன்று யாழ்.வேம்படி உயர்தரப் பாடசாலை மாணவி ஒருவர் இராணுவ டிராக்டர் மோதி உயிரிழந்தார். அதையடுத்து மாணவர்களும், பொதுமக்களும் கொதித்தெழுந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவதினத்தன்று திருநெல்வேலிப் பகுதியில் வைத்து பல்கலைக்கழக மாணவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டமை மற்றும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது யாழ். பல்கலைக்கழகம் முன்பாக வயோதிபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டமை, மாணவர் பேரவை அலுவலகம் தாக்கப்பட்டமை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனின் அலுவலகம் தாக்கப்பட்டமை போன்ற சம்பவங்களைக் கண்டித்தே மாணவர்களால் நேற்றைய பேரணி நடத்தப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், உயர்தொழில்நுட்ப நிறுவன மாணவர்கள், பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞானத்துறைமாணவர்கள் ஆகியோர் இந்த பேரணியில் பங்குகொண்டனர்.

முற்பகல் 11 மணியளவில் நல்லூர்க்கந்தன் ஆலயத்தின் பின் வீதியிலிருந்து பேரணி ஆரம்பமாகியது.

பேரணியில் சென்றோர் அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறு சென்றனர். பேரணி கோயில் வீதியூடாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகத்தைச் சென்றடைந்தது.

அங்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு

(16ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலை வாழ்வுக்கான தடைகளை நீக்கக் கோரி

# பரமேஸ்வராச் சந்தியில் இன்றுமாலை பெண்கள் ஒன்றுகூடிக் குரல் எழுப்புவர்

யாழ்ப்பாணம், மார்ச்8

சர்வதேச மகளிர் தினமான இன்று தமதும் தாம் சார்ந்த சமூகத்தினதும் விடுதலை வாழ்வுக்கான தடைகளை அகற்றக்கோரி நூற்றுக் கணக்கான பெண்கள் ஒன்று கூடிக் குரல் எழுப்ப இருக்கின்றனர்.

இன்று மாலை 7 மணிக்குத் திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்திப் பகுதியில் ஒன்றுகூடவுள்ள பெண்கள், அங்கு கோஷங்களை எழுப்புவர். நியாயமான தமது விருப்பப்படி தாங்கள் செயற்படுவதற்குப் பிரதான தடையாக விளங்கும் காரணிகளை எடுத்துக்காட்டும் அரங்க நிகழ்விலும் அவர்கள் ஈடுபடுவர்.

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி பெண்கள் பண்பாட்டு மையமும், அரங்கச் செயற்பாட்டுக் குழுவினரும் இணைந்து இந்த சிறப்பு நிகழ்வை ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

கிராமப் புறங்களைச் சேர்ந்த பெண்கள் இன்று காலை திருநெல்வேலி ஆத்திசூடி வீதியில் அமைந்துள்ள பெண்கள் பண்பாட்டு மைய அலுவலகத்தில் ஒன்று கூடிக் கலந்துரையாடல்களில் ஈடுபடுவர். அதன் பின்னர் மாலையில் அவர்கள் அங்கிருந்து பேரணியாகப் புறப்பட்டு பரமேஸ்வரா சந்திக்கு வந்து கூடுவர். அங்கு சிறிது நேரம் அமைதியான முறையில் அரங்க நிகழ்வுகள் இடம்பெறும்.

இன்றைய நிகழ்வு தொடர்பாகப் பெண்கள் பண்பாட்டு மையம் விடுத்திருக்கும் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

(16ஆம் பக்கம் பார்க்க)





இராணுவ டிராக்டர் மோதி வேம்படி மகளர் கல்லூரி மாணவி பலியானதுக்குத் எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கையின் போது படையினர் செய்த துப்பாக்கிப் பிரயோகத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தமை, இருவர் வேட்டுக்கு இலக்காகக் காயமடைந்தமை ஆகிய சம்பவங்களைக் கண்டித்து நேற்று யாழ்.நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்ட மாணவர்களையும் மாணவர் பிரதிநிதி ஒருவர் கண்காணிப்புக்குழு உறுப்பினரிடம் மகஜர் ஒன்றைக் கையளிப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்:பிரபா, நவம்)*

# படையினரின் அத்துமீறலுக்கு அதிபர் சங்கமும் கண்டனம்

யாழ்ப்பாணம்,மார்ச்8

கடந்த 4 ஆம் திகதி யாழ்.நகரில் மாணவி ஒருவர் படையினரின் டிராக்டரில் மோதுண்டு மரணமான சம்பவத்தையும் அன்றையதினம் படையினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட தாக்குதல்களுக்கும் வடமாகாண அதிபர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

அதிபர் சங்கம் சார்பில் வெளியிட்டிருக்கின்ற கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்.குடாநாட்டில் அடிக்கடி விபத்துக்கள் என்ற பேரில் பாதுகாப்புப் படையினரால் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் கொல்லப்படுவதும் காயப்படுத்தப்படுவதும் அதிகரித்து வருகின்றது.

அந்தவகையில், வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவி நாகேந்திரம் துளசிகா இராணுவ வாகனத்தால் கொல்லப்பட்டமையையும் எதுவுமே அறியாத அப்பாவிப் பொதுமகன் படையினரால் கொல்லப்பட்டமையையும் வடமாகாண அதிபர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

பாடசாலை மாணவி நெரியுண்டு மரணமான செய்திகேட்டு குடாநாட்டு மாணவர்கள் கொதிபடைந்து எழுச்சியடைவது இயல்பானது. இவ்வெழுச்சியடைந்த மாணவர்கள் அஹிம்சை ரீதியான வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டவேளை பாதுகாப்புப் படையினரும், பொலீஸாரும் கல்வி நிறுவனம் என்றும் பாராது சீருடையணிந்த மாணவர்கள் மீது கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசியமையும் தடியடிப்பிரயோகம் மேற்கொண்டமையும் படையினரின் பொறுப்பற்றதன்மையை எடுத்துக்காட்டுகின்றன.

தங்கள் பிள்ளைகளின் நிலையறிய ஓடிவந்த பெற்றோர், பொதுமக்கள், மீது சட்டத்தையும் நீதியையும் பேணுகின்ற பொலீஸார் தாக்குதல் நடத்தியமை, கொலையுண்ட தடயங்களை அழிக்க முற்பட்டமை தமிழ்மக்களின் நம்பிக்கையைச் சிதறடிக்கச் செய்துள்ளது.

பாதுகாப்புப் படையினரும், பொலீஸாரும் எவ்வித கட்டுப்பாடும் இன்றி திருநெல்வேலியில் வீதியால் சென்ற முதியவரை அநியாயமாகச் சுட்டுக்கொன்றமை, அதே இடத்தில் அமைந்துள்ள சர்வதேச தமிழ் மாணவர் பேரவை அலுவலகத்தினுள் புகுந்து சொத்துக்களைச் சேதமடையச் செய்தமை என்பன கல்விச் சமூகத்தைச் சீற்றமடையச் செய்துள்ளது.

அமைதியையும், சமாதானத்தையும், சகவாழ்வையும் விரும்புகின்ற கல்விச் சமூகத்தின்மீது மேற்கொள்ளப்படுகின்ற பாதுகாப்புப் படையினரின் அத்துமீறிய செயற்பாடுகள் சமாதானச் செயற்பாடுகளுக்கு வேட்டுவைப்பனவாக அமைகின்றன.

இத்தகைய செயற்பாடுகள் மீண்டும் ஏற்படாமல் தடுப்பதும் குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவதும் அரசின் பொறுப்பாகும். இதற்கு அழுத்தம் கொடுப்பது சர்வதேச சமூகத்தின் கடமையாகும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(த)

## இடைத்தங்கல் முகாம்களில் மகளிர்தினம்

யாழ்ப்பாணம்,மார்ச்8

யாழ்.திருமறைக் கலாமன்றத்தினர் சர்வதேச மகளிர் தினத்தை சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள இடைத்தங்கல் முகாம்களில் இன்று அனுஷ்டிக்கின்றனர்.

மணற்காடு, குடத்தனை ஆகிய பகுதிகளில் அமைத்துள்ள இடைத்தங்கல் முகாம்களிலேயே சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

இதற்கென இன்று காலை 10 மணிக்கு திருமறைக் கலாமன்றத்தின் 60 பேர் அடங்கிய கலைக்குழுவினர் அங்கு செல்வர். (8-190)

## லேக் ஹவுஸ் செய்தியாளர் மீதான தாக்குதல்: சுதந்திர ஊடக இயக்கம் கண்டிக்கின்றது

யாழ்ப்பாணம்,மார்ச்8

கடந்த வெள்ளியன்று குடாநாட்டில் இடம்பெற்ற களேபரத்தின்போது 'லேக்ஹவுஸ்' பத்திரிகையின் யாழ்ப்பாணச் செய்தியாளர் தாக்கப்பட்டமை மற்றும் தினக்குரல் பத்திரிகையின் ஊடகவியலாளர் ஒருவரது மோட்டார் சைக்கிள் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டமை தொடர்பான சம்பவங்களை சுதந்திர ஊடக இயக்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது விடயமாக மேற்படி சுந்திர ஊடக இயக்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

கடந்த வெள்ளியன்று யாழ்.நகரில் நடைபெற்ற எதிர்ப்பு ஊர்வலமொன்றில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஊடகவியலாளர் மீது தாக்குதல் நடத்தி காயப்படுத்தியமை மற்றும் தினக்குரல் பத்திரிகையின் ஊடகவியலாளரது மோட்டார் சைக்கிள் தாக்கிச் சேதப்படுத்தியமை தொடர்பான சம்பவங்களைச் சுதந்திர ஊடக இயக்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றைத் தடுப்பதற்காக அரச பாதுகாப்பு பிரிவு மூலம் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. இவ்வாறு தாக்குதலுக்குள்ளான தினகரன் ஊடகவியலாளர் வின்சன்ட ஜெயன் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார். தினக்குரல் பத்திரிகை ஊடகவியலாளரின் மோட்டார் சைக்கிளும் தாக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான, பொதுமக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின்போது செய்தி சேகரிப்பதற்காகச் செல்லும் ஊடகவியலாளர்கள் தம்மைச் சரியாக அடையாளங் கண்டுகொள்ளும் வகையில் தமது கடமைக்கான அடையாள அட்டையை அணிந்திருத்தல் முக்கியமானதுடன், பாதுகாப்புப் பிரிவினரும் ஊடகவியலாளர்கள் மீது விசேட கவனஞ் செலுத்துவதுடன், அவர்களது கடமையைச் சுதந்திரமாக மேற்கொள்வதற்கு உகந்த வகையில் சூழலை ஏற்படுத்திக்கொடுத்தலும் முக்கியமானதாகும்.

இதற்கு முன்னரும், வடக்கிலும் - கிழக்கிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறான தாக்குதல்கள் மற்றும் தடைகள் காரணமாக ஊடகவியலாளர்களுக்குத் தமது கடமையைக் கொண்டு செல்வதற்குத் தடை ஏற்படுவதுடன், அதனால் பொதுமக்களுக்குத் தகவல்களை அறிந்து கொள்வதற்கிருக்கும் உரிமையும், சுதந்திரமும் தடைப்படுகின்றன. அதனால் பாதுகாப்புப் பிரிவுகளிடம் போன்று ஏனைய ஆயுதக் குழுக்களிடமும், சிவில் சமூகங்களிடமும் இவ்வாறான சம்பவங்களைத் தடுத்துநிறுத்துவதற்கு உகந்த நடவடிக்கைகளை எடுக்குமாறு சுதந்திர ஊடக இயக்கம் வேண்டுகோள் விடுக்கின்றது - என்று அதில் உள்ளது.

(எ)

## கற்றல் நடவடிக்கையை மீள ஆரம்பிக்கக் கோரி மருத்துவபீட இறுதிவருட மாணவர் வகுப்பு பகிஷ்கரிப்பு



(படம்:தி.சிவரூபன்)

யாழ்ப்பாணம்,மார்ச்8

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்கள் இடைநிறுத்தப்பட்ட தமது சத்திரசிகிச்சைக்கான கற்றல் நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்குமாறு கோரி நேற்றுத் தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

நேற்றுக்காலை யாழ்.பல்கலைக்கழக நுழைவாயில் முன்பாக ஒன்றுகூடிய மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்கள் தமது எதிர்பைக் காட்டினர்.

இவர்களுடைய போராட்டம் காலை தொடக்கம் மதியம் வரை இடம்பெற்றது.

கற்றல் நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்கக் கோரும் பல சுலோக அட்டைகளை இவர்கள் தாங்கியிருந்தனர்.

இறுதி வருட மாணவருக்கான சத்திரசிகிச்சைக் கற்றல் நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்படும் வரை தமது பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரும் என்றும் -

விரைவாக இதற்கான நல்லதொரு முடிவை பல்கலைக்கழக நிர்வாகம் தராவிட்டால் மருத்துவ பீடத்தின் ஏனைய மாணவர்களும் பகிஷ்கரிப்பில் ஈடுபடுபவர் என்றும் - பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட மாணவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை - இது தொடர்பாகப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்குத் தெரியப்படுத்தியுள்ளதாகவும் - அவர்கள் கூறினர்.

(எ-7-86)

## மிருசுவில் படுகொலை வழக்கு மீண்டும் விசாரணைக்கு வருகிறது!

கொழும்பு,மார்ச்8

மிருசுவில் படுகொலை வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. இந்த வழக்கை விசாரணை செய்த 'ட்ரயல் அட் பார்' நீதிபதிகளில் சிலர் பதவி உயர்வு கிடைத்துச் சென்றுவிட்டதனால் இந்த வழக்கு கடந்த இரண்டு வருடங்களாக விசாரணைகளின்றிக் கிடப்பில் இருந்தது.

இந்த வழக்கைத் தொடர்ந்து விசாரிக்க புதிய நீதிபதிகளைப் பிரதம நீதியரசர் நேற்றுமுன்தினம் நியமித்துள்ளார். 2003 ஆம் ஆண்டு இந்த வழக்கு 'ட்ரயல் அட் பார்' முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சரத் அம்பேப்பிட்டிய அதன் தலைமை நீதிபதியாகக் கடமையாற்றினார். அவருடன் கடமையாற்றிய சரத் ஏக்கநாயக்க, எரிக் பசநாயக்க ஆகியோர் மேன்முறையீட்டு நீதிபதிகளாகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றனர். பின்னர் அந்த இடத்துக்கு உபாலி அபேரட்ண, டி.டி.விஜயசுந்தர ஆகியோர் நியமிக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் பின்னர் பதவி உயர்வு பெற்றுச் சென்றார். தலைமை நீதிபதி சரத் அம்பேப்பிட்டியவும் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதனையடுத்து இவ்வழக்கை விசாரிக்கப் புதிதாக இரண்டு நீதிபதிகளைப் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா நியமித்துள்ளார். மிருசுவில் கொலைகள் தொடர்பாகச் சந்தேகநபர்களான ஐந்து இராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மனிதவுரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் பாதிக்கப்பட்டவர்களின் சார்பாக வாதாட சட்டத்தரணிகளான ரெமிடியேஸ், ரட்ணவேல், குமாரகே ஆகியோரை நியமித்துள்ளது.

இந்த மாதம் முடிவுறுவதற்குள் வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக மேலும் பல சட்டத்தரணிகளை நியமிக்கத் தாம் ஆலோசித்து வருகின்றனர் என மனிதவுரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் இயக்குநர் கந்தசாமி தெரிவித்தார். (க-8)

## ஆதிகோவிலடி குடும்பங்களுக்கு நேற்று வீடுகள் கையளிப்பு

கரவெட்டி,மார்ச்8

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் வீடுகளை இழந்த வல்வை ஆதிகோவிலடி மக்களுக்கு லங்கா சேவா நிறுவனம் தற்காலிக வீடுகளை அமைத்துக்கொடுத்திருக்கின்றது.

விராம்பத்தை சிறிமுருகன் குடியேற்றப் பகுதியில் முதற்கட்டமாக அமைக்கப்பட்ட இந்த வீடுகள் நேற்று உரியவர்களுக்கு வைபவரீதியாகக் கையளிக்கப்பட்டன.

இந்த வைபவத்துக்கு வல்வெட்டித்துறை கிராம அலுவலர் எஸ்.சிவபாலசிங்கம் தலைமை வகித்தார்.

வைபவத்தில் பொதுச்சுடரினை யாழ்மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் தமிழரசன், சிறிமுருகன் குடியேற்றத்திட்டத் தலைவர் எஸ்தேவசிகாமணி, லங்கா சேவா நிறுவன இணைப்பாளர் எஸ்.ஆனந்தராசா ஆகியோர் ஏற்றினர்.

புதிய வீடுகளை யாழ்மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கயல்விழி, துயிலும் இல்லப் பொறுப்பாளர் தமிழரசன், கடற்புலிகளின் வல்வைப் பிரதேசப் பொறுப்பாளர் செழியன் ஆகியோர் திறந்து வைத்தனர். (ஐ-70)

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் மகளிர் தினம்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்தித் திட்டப்பிரிவு 20 கிராம மாதர் சங்கங்கள், மாதர் குழுக்கள் ஆகியவற்றுடன் இணைந்து இன்று காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் சர்வதேச மகளிர் தினத்தை நடத்தவுள்ளது.

இந்நிகழ்வில் 'பெண்களும் தலைமைத்துவமும் - ஒரு வரலாறு' என்னும் தலைப்பில் திருமதி மனோன்மணி சண்முகதாஸ், 'உலக மகளிர் தினத்தின் தோற்றமும் அதன் முக்கியத்துவமும்' என்னும் தலைப்பில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தைச் சேர்ந்த கே.நிக்கே, 'சமாதானச் செயல்முறையால் பெண்களின் பங்கு' என்னும் தலைப்பில் பெண்கள் அபிவிருத்தி நிலையத் தலைவர் திருமதி சரோஜா சிவச்சந்திரன், 'சமூக மீள் கட்டமைப்பில் பெண்கள்' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக சமூகவியற்றுறை விரிவுரையாளர் செல்வி டொறின் அருளானந்தம், 'வாழ்க்கைப் போராட்டத்தில் பெண்கள்' என்னும் தலைப்பில் யாழ்மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி யோ.கலைவிழி ஆகியோர் கருத்துரைகள் வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் தே.தேவானந்தின் நெறியாள்கையில் உருவான 'பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்' என்ற நாடகமும் இடம்பெறவுள்ளது. (8-203)

# லெபனானில் ஆர்ப்பாட்டம் நடத்த ஹிஸ்புல்லா அமைப்பு அழைப்பு!

பெய்ரூட்,மார்ச்8

லெபனான் தலைநர் பெய்ரூட்டில் மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்த ஹிஸ்புல்லா கிளர்ச்சிவாத அமைப்பு அந்நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

சிரியாவிற்கு ஆதரவாகவும், லெபனான் உள் விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிடுவதைக் கண்டித்தும் - எதிர்த்தும் - இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று ஹிஸ்புல்லா கிளர்ச்சிவாத அமைப்பு அறிவித்துள்ளது.

சிரிய நாட்டுத் துருப்புக்கள் ஐக்கிய நாடுகள் சபை கோருவதைப் போல லெபனானில் இருந்து வெளியேறுவதை தாங்கள் எதிர்க்கின்றனர் என்றும ஹிஸ்புல்லா கிளர்ச்சிவாத அமைப்பின் தலைவர் ஷேக் ஹஸன் நஸ்குல்லா தெரிவித்தார்.

சிரிய ஜனாதிபதி உறுதியளித்ததற்கு இணங்க சிரிய - லெபனான் எல்லைப் பகுதிகளுக்கு சிரியத் துருப்புக்கள் நகர்ந்தால் மட்டும் போதுமானது என்றும் நஸ்ருல்லா மேலும் சொன்னார்.

இதேவேளை - சிரிய நாட்டுப் படைகள் பெய்ரூட்டில் இருந்து இன்று முதல் வெளியேறும் என லெபனானில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

சிரிய தலைநகர் டமஸ்கஸ்ஸில் சிரிய மற்றும் லெபனான் அதிபர்களின் சந்திப்பையடுத்தே, படைகள் வெளியேறும் என்ற உடன்பாடு எட்டப்பட்டதாக பதவிவிலகும் லெபனான் பாதுகாப்பு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சிரியா தனது உறுதிமொழியின்படி லெபனானில் உள்ள தனது படைகளை வாபஸ் பெறவேண்டும் என்று முன்னதாக பிரான்ஸ் அழைப்பு விடுத்திருந்தது.

சிரியாவின் இந்த அறிவிப்பு முக்கியமானது என்றும்-

படைகளின் வெளியேற்றம் தொடர்பில் தெளிவான மற்றும் ஸ்திரமான நடவடிக்கையை தமது நாடு சிரியாவிடம் இருந்து எதிர்பார்ப்பதாகவும் - பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவும், பிரிட்டனும் இதேபோன்றதோர் அழைப்பை விடுத்துள்ளன. (ஐ-க)

## ஆப்கான் தேர்தல் மீண்டும் ஒத்திவைப்பு

காபூல்,மார்ச்8

ஆப்கானிஸ்தானில் இந்த ஆண்டு 21 ஆம் திகதி நடைபெறவிருந்த தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஆப்கான் தேர்தல் ஆணையாளர் இதனை அறிவித்துள்ளார்.

ஆப்கானில் மாவட்ட எல்லைகளை மாற்றி அமைக்கும் பணி இன்னும் நிறைவடையாத காரணத்தினால் தேர்தல் பிற்போடப்பட்டதாகத் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்தது.

ஆப்கானில் தாலிபான்களின் ஆட்சி கலைக்கப்பட்டதன் பின்னர் அங்கு நாடாளுமன்றத் தேர்தலைக் கடந்த ஆண்டு ஜூன் மாதம் நடத்த தீர்மானிக்கப்பட்டது பின்னர் அந்தத் தேர்தல் ஒக்ரோபர் மாதத்திற்கு பிற்போடப்பட்டது. ஆனால், குறிப்பிட்ட அந்த தினத்திலும் தேர்தல் நடைபெறாது என்று அறிவிக்கப்பட்டு, இந்த ஆண்டு மே 21 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டது.

எனினும், அத்தினத்தில் தேர்தல் நடைபெறாது என இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது. செப்ரெம்பர் 17 ஆம்திகதி தேர்தலுக்கான புதிய திகதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-க)

## தீவிரவாதிகள் தாக்குதல்களில் ஈராக்கில் 6 பேர் உயிரிழப்பு

பக்தாத்,மார்ச்8

ஈராக் தலைநகர் பக்தாத்தில் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பு மற்றும் துப்பாக்கிச் சண்டைகளில் 6 பேர் உயிரிழந்தனர்; 18 பேர் காயமடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

பக்தாத்தின் வடகிழக்கில் உள்ள பக்குபா மாகாணத்தின் அல் - முராதியா நகரில் தீவிரவாதிகள் திடீரெனத் துப்பாகிச் சூடு நடத்தினர். இதில் 6 ஈராக்கிய படையினர் உயிரிழந்தனர்; 6 பேர் காயமடைந்தனர்.

இதேவேளை, இந்த மாகாணத்தின் மேற்கே உள்ள அல் - முவாலிமீன் நகரில் கார்க்குண்டு ஒன்று வெடித்ததில் 6 பொலீஸார் உட்பட 12 பேர் காயமடைந்தனர்.

ஷியா, சுனி, முஸ்லிம்கள் இணைந்து வாழும் இரு நகரங்களிலேயே இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன எனவும் -

இந்தத் தாக்குதல்கள் சோதனைச் சாவடிகளுக்கு அருகிலேயே நடத்தப்பட்டன எனவும் செய்தியாளர்கள் தெரிவித்தனர். (ஐ-க)

## இந்திய அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தத் திட்டம்!

புதுடில்லி,மார்ச்8

நடப்புநிதியாண்டில் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதன் ஊடாக நூறுகோடி அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான தொகையை சம்பாதிப்பதற்கு இந்திய அரசு திட்டமிட்டிருக்கிறது.

உலக அரங்கில்

ஏப்ரல் முதலாம் திகதி முதல் ஆரம்பமாகும் ஒருவருட காலப்பகுதியில் பல அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தத் திட்டமிடப்பட்டிருப்பதாக நிதியமைச்சர் பழனியப்பன் சிதம்பரம் தெரிவித்தார். தாம் தனியாருக்கு விற்பனை செய்யவுள்ள நிறுவனங்கள் எவை என்பது குறித்து அமைச் சரவையின் அங்கீகாரத்தைப் பெறவிருக்கிறார் என்றும் நிதியமைச்சர் தெரிவித்தார்.

இந்த முயற்சியின் ஊடாகத் திரட்டப்படும் நிதி அரசதுறை செலவீனங்களுக்காகப் பயன்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். எனினும், இடதுசாரிக் கட்சிகள் இதனை ஆதரிக்குமா என்பது சந்தேகமான விடயமாகும்.(ஐ-3)

## மொல்டோ நாட்டுத் தேர்தலில் தோல்வியடைந்தது அரசு!

லண்டன்,மார்ச்8

மொல்டோவில் நடைபெற்ற தேர்தலில் அந்த நாடடு அரசு செல்வாக்கை இழந்துள்ளது. தேர்தல் முடிவுகளின்படி ஆளும் மேற்கத்தைய கம்யூனிஸ்ட் கட்சி எதிர்பாரத பாரிய தோல்வியை எதிர்நோக்கியுள்ளது.

இத்தேர்தலில் ஆளும் மேற்கத்தைய கமயூனிஸ்ட் கூட்டமைப்புக்கு 40 வீதமான வாக்குகளும், எதிர்க்கட்சிகளுக்கு 43 வீதமான வாக்குகளும் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்யாவிடம் இருந்து 1991 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற மொல்டோவாவில் நடைபெற்ற ஐந்தாவது தேர்தல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-க)

# பொருளாதாரத்தடை விதிக்கப்படுமானால் அணுத்திரவப் பொருளைத் தயாரிப்போம்!

## அமெரிக்காவுக்கு ஈரான் எச்சரிக்கை

தெஹ்ரான்,மார்ச்8

"தமது நாட்டின் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைவிதித்தல் அணுவாயுதம் தயாரிப்பதற்குத் தேவையான திரவ எரிபொருளைத் தயாரிப்போம்"

-இவ்வாறு எச்சரிக்கை விடுத்திருக்கிறது ஈரான்.

ஈரான் அணுவாயுதம் தயாரிக்க முயற்சி செய்து வருகிறது என அமெரிக்கா குற்றஞ்சாட்டிவருகிறது, இந்த விவகாரம் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியமும், ஈரானும் சமரசப் பேச்சுக்களை நடத்திவருகின்றன

இந்த நிலையிலேயே மேற்படி எச்சரிக்கையை ஈரான் விடுத்திருக்கிறது.

இதேவேளை-

ஈரான்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லையென அமெரிக்க முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கொலின்பவல் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சிச் சேவையொன்றிற்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே கொலின் பவல் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் கூறியதாவது:-

ஈரான்மீது இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. இருந்த போதிலும், அதைப்பற்றி இப்போது யோசிக்கத் தேவையில்லை. பேச்சுக்கள் மூலம் தீர்வுகாண இப்போது முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அணுவாயுதம் தயாரிக்கக் கூடாது என்று ஈரானை வலியுறுத்தும் முயற்சியில் சர்வதேச சமூகம் ஒன்று கூடியுள்ளது - என்றார்.

அணுவாயுதம் தயாரிப்பதை ஈரான் கைவிட வேண்டுமானால் ஈரானுக்கு நிதியுதவி வழங்க வேண்டும் என்றும் ஐரோப்பிய நாடுகள் யோசனை ஒன்றை முன்வைத்தன. ஆனால், இது தொடர்பான உடன்பாடு ஏற்படுவதற்கு சிலகாலம் தேவைப்படும் என்று அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பில் முடிவொன்று எட்டப்பட யுரேனியத்தைச் செறிவூட்டும் முயற்சியை ஈரான் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-க)

# அல்-கெய்டா தீவிரவாதிகள் 250 பேர் பிரிட்டனைத் தாக்கத் தயாராயுள்ளனர்

## அந்நாட்டு முன்னாள் பொலீஸ் அதிகாரி எச்சரிக்கை

லண்டன்,மார்ச்8

அல்-கெய்டா தீவிரவாத இயக்கத்தில் பயிற்சிபெற்ற 250 தீவிரவாதிகள் பிரிட்டனைத் தாக்க அந்நாட்டில் மறைந்துள்ளனர் என பிரிட்டிஷ் முன்னாள் பொலீஸ் தலைமை அதிகாரி ஜோன் ஸ்டீவன்ஸ் தெரிவித்தார்.

பிரிட்டனின் பெருநகர பொலீஸ் தலைவராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற ஜோன் ஸ்டீவன்ஸ் இதுகுறித்து பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்ததாவது:-

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்காமீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதன் பின்னர் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாமல் வெளிநாட்டவரை சிறையில் அடைத்துவைக்க அனுமதியளிக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டது.

ஆனால், இப்படிக் கைதுசெய்து சிறையில் அடைப்பது சட்டவிரோதம் என்று கூறி கடந்த ஆண்டு நீதிமன்றம் அவர்களை விடுதலை செயதது இது மிகப்பெரிய முட்டாள்த்தனம்.

இந்தச்சட்டம் எதிர்வரும் 14அம் திகதியுடன் காலாவதியாகிறது. இதற்கு முன்பே வெளிநாட்டினரையும் இங்கிலாந்து குடிமக்களையும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாமல் வீட்டுக் காவலில் வைக்க புதியசட்டம் கொண்டுவரப்பட இருக்கிறது இந்தச்சட்டத்தை சிலர் எதிர்க்கின்றனர். அவர்களுக்கு தீவிரவாதத்தின் பயங்கரம் புரியவில்லை.

அல்-கெய்டா தீவிரவாத இயக்கத் தலைவர் ஒஸாமா பின்லேடனிடம் பயிற்சிபெற்ற 250 தீவிரவாதிகள் பிரிட்டனில் தாக்குதல் நடத்தும் எண்ணத்துடன் இந்நாட்டில் குவிந்துள்ளனர்.

அவர்கள் மிகப்பெரிய அளவில் அழிவை ஏற்படுத்தும் வகையில் தாக்கக் கூடிய திறமை கொணடவர்கள்.

இவர்கள் தங்களின் லட்சியத்தை நிறைவேற்றுவதற்காக உயிரையும் கொடுக்கத் துணிந்தவர்கள் எந்த நேரத்திலும் அவர்கள் தாக்குதல் நடத்துவார்கள் என்று ஜோன் ஸ்டீவன்ஸ் கூறினார். (ஐ-க)




## முஸ்லிம் மற்றும் யூதர்களுக்கு பாப்பரசர் நன்றி தெரிவிப்பு

வத்திக்கான்,மார்ச்8

தனது உடல்நலத்திற்காகப் பிரார்த்தனை செய்த முஸ்லிம் மக்களுக்கும் யூத மக்களுக்கும் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் நன்றி தெரிவித்துள்ளார்.

ரோம் நகர வைத்தியசாலையின் 10 ஆவது மாடியில் உள்ள ஜன்னல் வழியாக நேற்று முன்தினம் பக்தர்களைப் பார்த்துக் கையசைத்தார்.

பாப்பரசரைக் காண திரளாகக் கூடியிருந்த பக்தர்கள் அவரிடமிருந்து ஆசிபெற்றனர். கையசைத்ததைத் தவிர அவர் பக்தர்கள் மத்தியில் எதுவும் பேசவில்லை.

பாப்பரசின் உரையை இன்னொரு பாதிரியார் வாசித்தார். தனது உடல்-நலத்திற்காகப் பிரார்த்தனை செய்த யூதர்கள், முஸ்லிம்களுக்கு தனது ஆழந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறார் என்று வாசிக்கப்பட்ட அவ்வுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது. (ஐ-8)

## இஸ்ரேல் - பலஸ்தீன அமைச்சர்கள் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு!

ஜெருசலேம்,மார்ச்8

இஸ்ரேலிய, பலஸ்தீனப் பாதுகாப்பு அமைச்சர்கள் நேற்றுமுன்தினம் சந்திப்பொன்றை நடத்தியுள்ளனர்.

கடந்த மாதம் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் இஸ்ரேலியர்கள் ஐந்துபேர் படுகொலைசெய்யப்பட்டனர். இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற முதலாவது சந்திப்பு இதுவாகும்.

இந்தத் தற்கொலை குண்டுத்தாக்குதல் காரணமாக தேக்கநிலை அடைந்திருக்கும் தொடர்புகளை புதுப்பிப்பதே இச்சந்திப்பின் முக்கிய நோக்கமாக இருந்தது.

இஸ்ரேலிய - பலஸ்தீனத் தலைவர்கள் மத்திய கிழக்கு சமாதான - அமைதி முயற்சிகளில் அக்கறைகாட்டி வருகின்றனர்.

இதேவேளை -

ஒரு நல்லெண்ண முயற்சியாக மேற்குக் கரை நகரங்களின் கட்டுப்பாட்டை பலஸ்தீனர்களிடம் ஒப்படைப்பதற்கு இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினர் தீர்மானித்திருக்கின்றனர். (ஐ-க)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## கார் விற்பனைக்கு

எம்மிடம் 18-xxxx வெள்ளை நிற கார் ஹொண்டா சிவிக், 11 ஸ்ரீ xxxx சிவப்பு நிற கார் லான்ட்சர் - இரண்டும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.884, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம். T.P.: 0777 758147 (42647)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1966 திருவோண நட்சத்திரம் 2இல் சூரியன், செவ்வாயுள்ள Chartad Accountant மணமகனுக்குக் கொழும்பில் வீட்டுடன் A/L படித்த, அழகான மணமகள் தேவை. வயது 30இற்குள் இருத்தல் வேண்டும். தொடர்பு: T.P.: 222 6366. (42828)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1965, நட்சத்திரம் கேட்டை, 12இல் செவ்வாயுள்ள, கொழும்பில் சொந்தத் தொழில் புரிபவருக்கு 1973இற்குப் பின்பு பிறந்த, A/L படித்த, அழகிய மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். தீவகப் பெண்ணுக்கு முன்னுரிமை. தொடர்பு: T.P.: 222 6366. (42827)

## சட்டவிரோதமாக மின்பெற்ற இருவருக்கு தலா 15 ஆயிரம் ரூபா அபராதம்

வலி.தென்மேற்கு,மார்ச்8

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றதாகக் குற்றிஞ்சாட்டி தொல்புரத்தைச் சேர்ந்த இருவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைகைகு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் இருவருக்கும் தலா 15 ஆயிரம் ரூபா அபாரதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

கடந்த 28 ஆம் திகதியன்று இரவுவேளையில் இலங்கை மின்சார சபையின் வட்டுக்கோட்டை மின் அத்தியட்சகர் பணிமனையினர் வட்டுக்கோட்டை பொலீஸாரின் உதவியுடன் தொல்புரம் பகுதியில் மேற்கண்ட திடீர் நடவடிக்கையின்போது மேற்படி இருவரின் வீட்டிலும் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றமை கையும்மெய்யுமாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

தொல்புரம் மேற்கைச் சேர்ந்த வேலு தருமலிங்கம், தொல்புரம் மேற்கு பத்தானைக் கேணி என்ற இடத்தைச் சேர்ந்த அப்பையா தர்மராசா ஆகிய இருவரையும் கடந்த முதலாம் திகத்யன்று மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் பொலீஸார் ஆஜர் செய்தபோது நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் இருவருக்கும் தலா 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பு வழங்கினார்.

வட்டுக்கோட்டை பொலீஸ் நிலைய சார்ஜனட் என்.புஸ்ப்குமார இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். (எ-135)

## பதவி வெற்றிடங்கள்

* இரவு நேரக்காவலாளி
  வயதெல்லை: 18 - 50
* அலுவலக உதவியாளர்
  வயதெல்லை: 18 - 30

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் ஆண்பாலாரிடமிருந்து கோரப்படுகின்றன. தகுதியுடையவர்கள் 10.03.2005 அன்று காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை அலுவலகத்திற்குச் சமுகமளிக்கவும்.

தொடர்புகளுக்கு: இயக்குநர்
IIS
100. மணிக்கூண்டு வீதி.
யாழ்ப்பாணம்.

(C-41355)(34-11-46-26)

## காணி விற்பனைக்கு

கல்வியங்காடு சந்திக்கு அருகில் GPS வீதியில் விளையாட்டு மைதானத்தின் முன்பாக ரம்மியமான சூழலில் அழகிய வனக்கலட்டியும், சுத்தமான தண்ணீரைக் கொண்ட வளமுள்ள பரப்புக்காணி உடன் விற்பனைககுண்டு. விலை நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.

முந்தியவர்கள் முந்தியவர்களே பிந்தியவர்கள் பிந்தியவர்களே.

(சந்திக்கும் நேரம் மாலை 5.30 மணிக்குப் பின்பு)

தொடர்புகளுக்கு: 38.இராச வீதி. சட்டநாதன் கோயிலடி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(42824) T.P.0777- 499284 (39-11-46-26)

## ORGAN

(கீபோர்ட் பயிற்சி)

புதிய பிரிவு ஆரம்பம்

வெள்ளி- சனி- 4.30 p.m.

**தூரிகை**

ம.ம.வி.வீதி.,
நெல்லியடி.

(சி.41360) (39-11-46-26)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட கமநல சேவை திணைக்களத்தில்
பெரும்பாக உத்தியோகத்தராகவும், கமத்தொழில் காப்புறுதிச் சபை
வடபிராந்திய பணிப்பாளராகவும் கடமையாற்றி
விவசாயப் பெருமக்களுக்கு அளப்பரிய சேவையாற்றிய

### சுப்பையா சிவகுரு

அவர்கள் 06.03.2005 அன்று காலமான செய்தியறிந்து ஆழ்ந்த வேதனை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாரின் துன்ப துயரங்களில் கமநல குடும்பத்தினராகிய நாங்கள் பங்கேற்பதோடு. அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உதவி ஆணையாளரும் உத்தியோகத்தர்களும்
கமநல அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்.
உதவிப் பணிப்பாளரும் உத்தியோகத்தர்களும்
கமத்தொழில் காப்புறுதிச்சபை, யாழ்ப்பாணம்.
பெரும்பாக உத்தியோகத்தர்களும்
கமநல சேவைகள் நிலைய உத்தியோகத்தர்களும்
யாழ்.மாவட்டம்.

(12834) (21-11-46-26)

## அரச அறிவித்தல்

### மாகாண பிரதிப் பணிப்பாளரின் சுகாதார சேவைகள் அலுவலகம், யாழ்ப்பாணம்

பின்வரும் விடயங்களுக்கான விண்ணப்பங்கள் எம்மால் கோரப்பட்டுள்ளன. இதற்கான படிவங்களை ரூபா 100/- செலுத்தி எதிர்வரும் 17.03.2005ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3மணி வரை பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 18-03-2005 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்பாக இவ்வலுவலகத்தில் ஒப்படைக்கவேண்டும்.

மேலதிக விவரங்களை இந்த அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

**1.கூறுவிலை கோரல் - 2005**

1. வாகனம் சேவிஸ் செய்தல்
2. வாகனங்களுக்கான ரயர், ரியூப் ஒட்டுதல், மாற்றுதல், காற்றடித்தல்

**2.வழங்குநர் பதிவு - 2005 (உள்ளூர்)**

1. வாகனங்கள் திருத்தம் செய்தல்
2. வாகன உதிரிப் பாகங்கள், ரயர்கள், பற்றறிகள் வழங்கல்
3. கணனி பராமரிப்புச் சேவை
4. கணனியும் இணைந்த சாதனங்களும் வழங்கல்
5. வைத்தியசாலை மலசலகூடக் கழிவு அகற்றல்
6. சித்த மருத்துவ மருந்துப் பொருள்கள் வழங்கல்
7. மேற்கத்தைய வைத்திய உபகரணங்கள், மருந்துப் பொருள்கள் வழங்கல்
8. தளபாடங்கள் திருத்தம் செய்தல்
9. மின் உபகரணங்களை மீள முறுக்குதல் வேலை
10. குளிர்சாதனப் பெட்டி திருத்தம்
11. தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் வழங்குதல்
12. காகிதாதிகள் வழங்கல்
13. மின்சார உபகரணங்கள், பொருள்கள் வழங்கல்
14. பக்ஸ் இயந்திரம், போட்டோப் பிரதி இயந்திரம், தட்டச்சு இயந்திரம், றோனியோ இயந்திரத் திருத்தமும் பாரமரிப்பும்.

வைத்திய கலாநிதி **ஏ.கேதீஸ்வரன்**
மாகாணப் பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள்,
யாழ்ப்பாணம். (சி-41365)(26-11-46)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
18
-
01
-
1970



மறைவு
06
-
02
-
2005

திருமதி

### அருள்வாணி ஆனந்தராசா

*ஞாயிறொன்று சென்றதம்மா தீரவில்லை எம் துயரம்*
*மாதமொன்று ஆனதம்மா மறக்கவில்லை உன்வதனம்*
*ஆண்டுதோறும் மாநிலத்தில் நீர் வாழ்ந்த நாள்களிற்காய்*
*தவிக்கின்றோம்.*

இன்று (08-03-2005) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
**கணவர், பிள்ளைகள், தாய், சகோதரர்கள்.**

*வாணி இல்லம்,*
*ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.* (42835)(21-46-26)

## பிரபல பாதாள நபர் கொலை

தென்பகுதியின் பிரபல பாதாள உலக நபர் என்று கூறப்படும் பள்ளந்தர ஜகத் நேற்றுமுன்தினம் பொலீஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தென் மாகாணசபை அமைச்சர் எம்.கே.ரஞ்சித்தைச் சுட்டுக்கொன்றவர் என்ற சந்தேகத்தின் பேரில் தங்காலை சிறையில் வைக்கப்பட்டிருந்த ஜகத் கடந்த டிசெம்பர் மாதம் அங்கிருந்து தப்பினார். ஆழிப்பேரலையின்போது தங்காலைச் சிறை அதிகாரிகளால் திறந்துவிடப்பட்டதையடுத்து ஜகத் அங்கிருந்து தப்பிச்சென்றார். பொலீஸார் அவரைத்தேடி தீவிரமாக வலை விரித்திருந்தனர். தென்பகுதியின் பிரபல பாதாள உலகத் தலைவர் எனக கூறப்பட்டுவந்த ரட்ணவீரவின் பிரதான சகாவாகச் செயற்பட்டு வந்தவர் ஜகத் கடந்தவருடம் ரட்ணவீரவுடன் இவர் சிறைச்சாலை வாகனத்தில் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது எதிர் பாதாளக் கோஷ்டியினரான வம்பட்டா குழுவினர் ரட்ணவீரவையும் சிறைக் காவலர் உட்பட மூவரையும் சுட்டுக்கொன்றனர். அச்சமயம் ஜகத் எப்படியோ உயிர் தப்பினார்.

தங்காலை பகுதியில் உள்ள வீடொன்றில் இவர் மறைந்திருக்கிறார் என்று பொலீஸாருக்குக் கிடைத்த தகவலொன்றை அடுத்து அந்த வீட்டை பொலீஸார் சுற்றிவளைத்தனர். அப்போது ஜகத் தம்மை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார் என்றும், இதையடுத்து அவரைச் சுட்டுக் கொன்றனர் எனவும் பொலீஸார் தெரிவித்தார். (ப)

## இலங்கை வங்கி /மக்கள் வங்கி போட்டிப் பரீட்சை

### பயிற்சி வகுப்பு

**ஆரம்பம்: இன்று 08-03-2005 (9மணி)**

பாடங்கள் பொது உளச்சார்பு, பொது அறிவு, எண் புலமை, ஆங்கிலம் இப்பாடங்கள் தனித்தனியாக ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். விவரங்களை நேரில் பெறவும்.

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ். (42823)(26-11-46)

## கிளி/தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் - கிளிநொச்சி மாவட்டம்

### பதவி வெற்றிடம்

கிளி/தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தில் பின்வரும் பதவி நிலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆங்கில விரிவுரையாளர்கள்: பகுதி நேரம்

தகைமை: அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் துறைசார்ந்த பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். *அல்லது*

துறைசார்ந்த பயிற்றப்பட்ட ஆசிரியராகவும் மூன்று வருடங்களுக்குக் குறையாத கற்பித்தல் அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

*அல்லது*

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்ட டிப்ளோமா பட்டமும் இரண்டு வருட கற்பித்தல் அனுபவமும் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமையுடையோர் எதிர்வரும் 15-03-2005 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கவும்.

முகவரி: அதிபர்,
தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், கிளிநொச்சி.

(26-11-46) (சி-41358)

## கிளி/தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் - கிளிநொச்சி மாவட்டம்

### பதவி வெற்றிடம்

கிளி/தொழில்நுட்பக்கல்வி நிறுவனத்தில் பின்வரும் கற்கைநெறிகளின் விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. மரவேலைப் பயிற்சி நெறி (Wood Work)
2. மேசன்பயிற்சி நெறி (Masonry)
3. நீர்க்குழாய் பொருத்தல் பயிற்சிநெறி (Plumbing)
4. மின்னொட்டு பயிற்சி நெறி (Welding)

கல்வித்தகைமை: உரியதுறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வழங்கப்பட்ட தொழில்நுட்பச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

*அத்துடன்*

உரிய துறையில் மேலதிக பயிற்சிகள் பெற்றிருத்தல் வேண்டும்.

*அத்துடன்*

ஒரு வருடத்திற்குக் குறையாத கற்பித்தல் அனுபவம் இருத்தல் வேண்டும். மேற்படி தகைமையுடையோர் எதிர்வரும் 15.03.2005ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கவும்.

முகவரி:
அதிபர், தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்,
கிளிநொச்சி.

(சி-41357) (39-11-46-26)

## மரண அறிவித்தல்

### லூக்கேஸ்பிள்ளை அன்ரன் அமலதாஸ் (வைமன்)

(உரிமையாளர், வைமன் ஸ்ரோர்ஸ், கொய்யாத்தோட்டம், யாழ்.)



இல. 03, புதுவீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட லூக்கேஸ்பிள்ளை அன்ரன் அமலதாஸ் நேற்று (07.03.2005) திங்கட்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.

இவர் லூக்கேஸ்பிள்ளை நல்லையா - காலஞ்சென்ற சொர்ணம்மா தம்பதிகளின் அன்பு மகனும் மேரி மாகிரட் (லலிதா) அவர்களின் அன்புக் கணவரும் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்களான விஜித் றொசான் (ஆண்டு 10), கொட்லின் றொகான் (ஆண்டு 9), டர்சன் (ஆண்டு 3) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சேவியர் (அருமைத்துரை), லீலா, லலிதா, சுசீலா, நெல்சன், வயலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பிரான்சிஸ் - சிசிலியா தம்பதிகளின் மருமகனும், கீதபொன்கலன், காலஞ்சென்ற மேரி திரேசா மற்றும் மேரிரீற்றா, மேரி கொலஸ்ரிக்கா, பிரான்சிஸ் சேவியர், பாமா, பொன்கலதாஸ், ஜெரால்ட், சிவா, ஜெனற் கிளசிற்றல், குமார் ஆகியோரின் அருமை மைத்துனரும் மற்றில்டா, பொன்னுத்துரை மாசிலாமணி, ஜெஜிபிளேவியன், சாந்தி ஆகியோரின் சகலனும் காலஞ்சென்ற லவ்ளி மற்றும் லக்ளி மற்றும் பேளி, மெரிலி, யூரிலி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.03.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கொய்யாத்தோட்டம் கிறிஸ்துராசா ஆலயத்திற்கு இரங்கற் திருப்பலிக்காக எடுத்துச்செல்லப்பட்டு பின்பு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*இல.03,புதுவீதி,*
*கொய்யாத்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.* (42829) (39-11-46-26)

தகவல்:
லலிதா (மனைவி),
பிள்ளைகள்.

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# மகளிரை மதிக்க மனங்கொள்வோம்!

மனுக்குலத்தின் வாழ்வுக்கும், வளத்துக்கும் ஊற்றாகவும், உயிர்ப்பாகவும் இருப்பவள் தாய். அந்த மாதர் குலத்தை மதிப்பதற்காய் மானுடன் தேர்ந்தெடுத்த நாளே இன்று - அனைத்துலகப் பெண்கள் தினம்.

'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமை தன்னைக் கொளுத்துவோம்!' - என்றான் நம் மகாகவி பாரதி.

மானுடத்தில் அரைவாசிப் பங்கினரான மாண்புறு மகளிர் தான் இந்நானிலத்தில் நாம் அனைவரும் வாழ்வதற்கான வித்துக்களைத் தாங்கி வளர்த்தவர்கள்.

மானிடத்தின் ஊற்றுக்கண்ணாகவும், மூலச்சக்தியாகவும் ஆரம்பத்தின் ஆதியாகவும் திகழ்ந்து, பரம்பரையைத் தாங்கிவரும் தாய்க்குலத்தை மானுடம் இரண்டாம் தர நிலையில் வைத்து நோக்கும் மடமையைக் கொளுத்துங்கள் என்றான் பாரதி.

ஒரு குடும்பத்தின் - சமூகத்தின் - சமுதாயத்தின் - இனத்தின்-பண்பாடு , கலாசாரம், தனித்துவம், விழுமியம் ஆகியன பேணி, அந்தக் கூட்டமைப்பை ஒன்றிணைக்கும் சக்தியாக - இழையாக - மைய விசையாகத் திகழ்பவள் பெண். ஆனால், குடும்பத்திலும் சரி, சமூகத்திலும் சரி மதித்து, ஏற்றிப்போற்றப்பட வேண்டிய அவள், சம உரிமையோடு - அந்தஸ்தோடு - கௌரவத்தோடு -மதிக்கப்படாத நிலைமை நீடிப்பது வேதனைக்குரியது.

இத்தகைய துர்ப்பாக்கிய நிலைமையை மாற்றி, மகளிர் சம உரிமையோடு மதிக்கப்படவேண்டும் என்ற நியாய நிலையை நிலைநிறுத்துவதற்காகவே சர்வதேச மகளிர்தினம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மானிடத்தில் மகளிருக்கும் சரிசமமான மதிப்பும், மரியாதையும், உரிமையும் அந்தஸ்தும் வழங்கப்பட வேண்டும் என்ற சிந்தனை எழுச்சி இன்று , நேற்று ஏற்பட்டதல்ல. இரு நூறு வருடங்களுக்கு முன்னரே - இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே - அது முளைத்தது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகர நெசவுத் தொழிலாளர்களான பெண்கள், தமக்கு சம உரிமை வேண்டி 1857 ஆம் ஆண்டு மார்ச் 8 இல் வீதிக்கு இறங்கித் தொழிற்சங்கப் போராட்டத்தில் குதித்தனர். அதன் பின்னர் டென்மார்க் தலைநகர் கொப்பன்ஹேகனில் 1910 இல் நடைபெற்ற சர்வதேச பெண்கள் சமவுடைமை மாநாட்டில் நியூயோர்க் நகர நெசவுப் பெண்களின் உரிமைக் கோரிக்கைப் போராட்டம் நினைவு கூரப்பட்டது. அந்தப் போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்த மார்ச் 8 ஆம் திகதியை சர்வதேச மகளிர் நாளாக அனுஷ்டிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி, 1911 ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த 94 வருடங்களாக - இத்தினம் சர்வதேச மகளிர் நாளாகக் கொண்டாடப்படுகின்றது.

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலைமையோடு ஒப்பிடுகையில், பெண்களுக்கு சமவுரிமை அளிக்கும் போக்கில் இப்போது கணிசமான விழிப்புணர்வு ஏற்பட்டிருப்பதை நாம் உணரமுடிகின்றது. ஆனால், நியாயப்படுத்தக் கூடிய - ஆகக் குறைந்தளவுக்கேனும் ஏற்றுக்கொள்ளத்தக்க அளவுக்கு- அது உலகின் பெரும்பாலான இடங்களிலும் எட்டப்படவில்லை என்பதே யதார்த்தமாகும்.

'முறத்தால் புலியை விரட்டிய புறநானூற்றுப் பெண்ணை' ஒருபுறம் புகழ்ந்துகொண்டு, மறுபுறம் மகளிரை நம் சமுதாயத்தின் போதைப் பொருளாகவும் போகம் தணிக்கும் கருவிகளாகவும் அடிமைகளாகவும் கருதி நடத்திக் கொண்டிருந்தோம்.

ஆனால், இது விடயத்தில் இன்று ஈழத் தமிழினம் மூன்றாம் மண்டல நாடுகளுக்கு மட்டுமல்லாமல், முழு உலகுக்குமே முன் மாதிரியாக - மனித சமூகத்தையே வியப்பில் ஆழ்த்தும் வகையில் - புறநானூற்றுக் காலத்தை விஞ்சும் வகையில் - புதிய சரித்திரம் படைத்துக் கொண்டிருக்கின்றது. விஞ்சும் உறுதியோடு - களத்தில் கனல் கக்கும் மெய் வீராங்கனைகளை நிஜத்தில் உருவாக்கி, ஆணுக்கு நிகர் பெண் என்ற புதிய வரலாற்றுக் காவியம் இங்கு பதியப்பட்டுக் கொண்டிருக்கின்றது. புதிய விழிப்புணர்வு இங்கு பிறந்திருக்கின்றது.

சாதி, சமய, பிரதேச, வர்க்க வேறுபாடுகளிலும், முரண்பாடுகளிலும் சிக்கித் திணறிய ஈழத் தமிழர் சமுதாயத்தை விடுதலைப் போர் என்ற பெயரில் வீசிய புயல் இந்த வேறுபாடுகளை எல்லாம் ஒரேயடியாக அள்ளிக் களைய வழி செய்தது. அந்தவகையில், பெண்ணுரிமை என்ற உயரிய இலக்கை நோக்கி நகரவும் அந்த விடுதலைப் போரே வழி செய்தது.

அதனால் - 'பெண்மையை மதிப்போம்; அந்த மென்மையை மதிப்போம்; அந்த மென்மைக்குப் பின்னால் மறைந்திருக்கும் வீரத்தையும், தீரத்தையும் உறுதியையும் தியாகத்தையும் மதிப்போம். தாய்மையைப் போற்றுவோம்; அவர் தம் உரிமையை அங்கீகரிப்போம்!' - என்ற சிந்தனைப் போக்கு நம் மத்தியில் மெல்ல முளைவிட்டுக் கிளம்பியிருக்கிறது.

உலகம் முழுவதும் அந்த எண்ணம் பரவி, வியாபிக்க இன்னும் நம் சமுதாயம் ஆற்ற வேண்டிய பணி அளவிடற்கரியதாக எஞ்சி நிற்கிறது.

# பிரதேச, மாவட்ட, மாகாண மட்டங்களில் தேசிய கலை இலக்கிய விழாவிற்கு ஏற்பாடு

## கலாசார அலுவல்கள் அமைச்சு நடத்தும்

யாழ்ப்பாணம்,மார்ச்8

கலாசார அலுவல்கள் தேசிய மரபுரிமை அமைச்சு நாடளாவியரீதியில் கலை இலக்கிய விழா ஒன்றை நடத்தவுள்ளது.

பிரதேச செயலர் பிரிவு, மாவட்டம், மாகாணம், தேசியநிலை என நான்கு மட்டங்களில் இந்த விழா நடத்தப்படும்.

மேற்படி விழா தொடர்பான முன்னேற்பாடுகள் குறித்து ஆராயும் கலந்துரையாடல் அண்மையில் கொழும்பு செத்சிறிபாயவில்உள்ளகலாசாரஅலுவல்கள்அமைச்சில் நடைபெற்றது.

கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சிசிற பிரியதர்ஷன தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

தேசிய கலை இலக்கிய விழா முதலில் பிரதேச செயலர்பிரிவு ரீதியாக நடத்தப்படும் போட்டிகள், கலை நிகழ்வுகள் என்பவற்றை நடத்துவதற்குத் தேவையான நிதியினை கலாசரா அலுவல்கள் அமைச்சு பிரதேச செயலருக்கு அனுப்பிவைக்கும். பிரதேச கலாசார அலுவலர்கள் நிகழ்வுகளுக்குப் பொறுப்பாக இருப்பர்.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நடத்தப்படும் விழா, போட்டிகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாவட்ட மட்டத்திலான விழா நடத்தப்படும். மாவட்ட மட்ட நிகழ்வுகளுக்கான நிதி, மாவட்டச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படும். மாவட்ட அரச அதிபர் தலைமையில் கலாசார அலுவலர்கள் அடங்கலாக நிறுவப்படும் குழு இந்த விழாவுக்குப் பொறுப்பாக இருக்கும்.

மாவட்ட மட்டப் போட்டிகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாகாண மட்டப்போட்டிகள் நடத்தப்படும். மாகாண சபைகள் இந்தப் போட்டிகளுக்குப் பொறுப்பாக இருக்கும்.

மாகாணமட்டப் போட்டிகளின் அடிப்படையில் தேசிய மட்டவிழா போட்டிகள் நடத்தப்படும். தேசிய மட்டப் போட்டிகளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேற்படி போட்டிகள் விழா தொடர்பான சுற்றறிக்கைகள் விரைவில் அனுப்பி வைக்கப்படுமென கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் இந்தக் கலந்துரையாடலில் தெரிவித்தார்.

பிரதேசமட்டப் போட்டி, விழா என்பவற்றில் பிரதேசக் கலை அம்சங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதுடன், கலாசார அமைச்சினால் அனுப்பிவைக்கப்படும் கலை அம்சங்களும் உள்ளடக்கப்படவேண்டும் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.

கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமை அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி ஆர்.ஜெயவீர, சிரேஷ்ட உதவிச் செயலாளர் எஸ்.சேனநாயக்க மற்றும் கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லைநடராஜா, தொல்பொருள்திணைக்களப் பணிப்பாளர் ஆகியோருடன் கலாசார உதவிப் பணிப்பாளர்கள், மேலதிக அரச அதிபர்கள் ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

மன்னார், செட்டிக்குளம் ஆகிய பிரதேச கலாசார அலுவலர்களுடன் ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் ஆகிய பகுதிகளுக்கான கலாசார அலுவலரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டார்.

(எ)

# வளர்ப்பு நாய்களுக்கு குடும்பப் பதிவு அட்டை!

## வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் விசேட ஏற்பாடு

வலி.தென்மேற்கு,மார்ச் 8

வலி.தென்மேற்குப் பிரதேச சபைப் பிரிவில் வீடுகளில் வளர்க்கப்படும் வீட்டு நாய்களுக்குக் குடும்ப அட்டை வழங்கும் புதிய திட்டம் ஒன்று பிரதேச சபையினால் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தைக் குறைப்பதற்கும், விசர் நாய்க் கடியிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கும் முகமாகவும் இத்திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாகப் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பிரிவில் வசிக்கும் ஒவ்வொரு குடும்பமும் 50 ரூபா செலுத்தித் தமது வீட்டு நாய்களுக்கான குடும்ப அட்டையைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் -

பிரதேச சபையின் மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்புப் பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம் ஆகிய உப அலுவலகங்களில் இந்தக் குடும்ப அட்டையை 50 ரூபா செலுத்திப் பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக இப்பகுதியில் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களிடையே பிரசாரம் செய்யப்பட்டுவருகின்றது. (எ-135).

# மருந்துக் கலவையாளரை நியமிக்குமாறு கோரிக்கை

வலி.தென்மேற்கு,மார்ச்8

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் மருந்துக் கலவையாளர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

இவ் வைத்தியசாலையில் ஓய்வுபெற்ற பின்பு மீள் நியமனம் பெற்றுப் பணியாற்றி வந்த மருந்துக் கலவையாளர் இம்மாதம் முதலாம் திகதி முதல் பதவியிலிருந்து விலகிச் செல்வதை முன்னிட்டு மருந்துக் கலவையாளர் பதவி வெற்றிடமாக உள்ளது.

ஆகவே, விரைவில் இவ் வெற்றிடத்தை நிரப்புவதற்கு மருந்துக் கலவையாளர் ஒருவரை இவ் வைத்தியசாலைக்கு நியமிக்க ஆவன செய்யவும் - என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை - இவ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற வரும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகின்றது. கர்ப்பிணிகள் சிகிச்சை கிளினிக், குழந்தைப்பிள்ளைகளின் கிளினிக், சுகவனிதையர் கிளினிக், பொது மருத்துவ சிகிச்சை கிளினிக் என்பன இங்கு நடைபெற்று வருவது தெரிந்ததே.

(எ-135)

# விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கு புதிய தொழிற்சங்கம் அங்குரார்ப்பணம்

வலி.வடக்கு,மார்ச்8

வடக்கு - கிழக்கில் கடமையாற்றும் விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கான புதிய தொழிற்சங்கம் ஒன்று அண்மையில் திருகோணமலையில் அமைந்துள்ள துளசிபுரம் மனிதவள அபிவிருத்தி நிலையத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் றோகான் இராஜசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில்-

ஏற்கனவே, தற்காலிகமாக உருவாக்கப்பட்டு அமைப்புப் பணிகளை மேற்கொண்ட நிர்வாகக் குழுவை, சங்கத்திற்கான புதிய நிர்வாகக் குழுவாக ஏற்பதெனக் கருத்து முன்வைக்கப்பட்டது.

இதற்கு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. அப்போது கூட்டத்தில் அதிகப் பெரும்பான்மை வாக்குகளுடன் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட நிர்வாகக் குழுவைப் புதிய நிர்வாகக் குழுவாக ஏற்றுக்கொள்ளும் தீர்மானம் வெற்றிபெற்றது.

இதனைத் தொடர்ந்து வவுனியா மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ந.அண்ணாத்துரை தலைவராகவும் திருகோணமலை மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ஜஸ்ரின் பெரேரா செயலாளராகவும், மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் யாக்கத் அலி பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

மாவட்ட ரீதியான பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இத்தொழிற்சங்கத்தில் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள், மாவட்ட விளையாட்டுப் பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(எ-86)

# சுகாதாரப் பகுதி ஊழியருக்கும் சம்பள உயர்வு கிடைக்கும்

குருநகர்,மார்ச்8

பொதுச் சுற்றறிக்கை 02.09.2005 1 இன்படி வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ள ரூபா 2 ஆயிரத்து 500 ஐ தகுதியுள்ள சுகாதாரப் பகுதி ஊழியர்களுக்கும் டிசெம்பர் 2004 தொடக்கம் வழங்குமாறு வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் (நிர்வாகம்) இ.இரவீந்திரன் மாகாணத்தில் இயங்கும் பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தல்கள் அனுப்பிவைத்துள்ளார்.

இந்த அதிகரிப்பை நிலுவையாக மார்ச் மாதச் சம்பளத்துடன் வழங்குமாறும்-

டிசெம்பர் 2004 தொடக்கம் பெப்ரவரி 2005 வரை நிலுவையை வழங்கத் தேவையான கட்டுநிதிக் கோரிக்கையை உடன் தமக்கு அனுப்பிவைக்குமாறும் - அவர் கோரியுள்ளார். (எ-51)

## நாளை

மாசி 25
புதன்கிழமை
09.03.2005
திதி : சதுர்த்தசி
பிற்பகல் 5.37 வரை
நட்சத்திரம் : அவிட்டம்
காலை 6.35 வரை
சதயம்
பின்னிரவு 5.19 வரை
போதாயன அமாவாசை
சுபநேரம் : 04.53 - 06.23
ராகுகாலம் : 12.23 - 01.53
(யாவும் பழைய நேரப்படி)

# ஆழிப்பேரலை பாதித்த குடும்பங்களுக்கு அமைச்சர் பௌசி உதவிப் பொருள்கள்

## ரவிராஜ் எம்.பி. ஊடாக விநியோகம்

தென்மராட்சி,மார்ச்8

சுனாமி ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கவென சுற்றாடல் மற்றும் இயற்கை வளத்துறை அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி ஒரு தொகுதி பொருள்களை வழங்கியுள்ளார்.

இப்பொருள்களை நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் கடந்த வியாழனன்று சாவகச்சேரி, மிருசுவில், வடமராட்சி ஆகிய பகுதிகளில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு வழங்கினார்.

சாவகச்சேரி கச்சாய் வீதியில் தங்கியுள்ள முல்லைத்தீவுப் பகுதியைச் சேர்ந்த 35 குடும்பங்களுக்கான பொருள்களை சாவகச்சேரி புனித விகோரியார் தேவாலய பங்குத் தந்தை அருட்திரு. ரவிச்சந்திரன் அடிகளிடமும் -

மிருசுவில் புனித நீக்கலஸ் திருக்குடும்பக் கன்னியாஸ்திரி மடத்தில் தங்கியுள்ள வடமராட்சி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 50 சிறுமிகளுக்கான பொருள்களைச் சிறுவர் இல்லப் பொறுப்பதிகாரியிடமும்-

வடமராட்சிப் பகுதியில் தங்கியுள்ள குடும்பங்களுக்கான பொருள்களை வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கத்திடமும் - வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிளாஸ்ரிக் பாய்கள், பால்மா, ரின்மீன், வெண்ணெய் கட்டிகள், கடலை, கம்பளிப் போர்வை, பிஸ்கட் வகைகள் நூடில்ஸ், தண்ணீர்ப் போத்தல்கள், மாணவர்களுக்கான சீருடைகள், லாந்தர் விளக்குகள் ஆகிய பொருள்களே இவ்வாறு வழங்கப்பட்டன எனக் கூறப்பட்டது.

(எ-117)

## உதயவாக்கு

பெண்கள் வெற்றிகொள்ள மாத்திரமல்ல வெல்லப்படவும் விரும்புகின்றனர்.

-தாகக்ரே.

# YARL MOBILE (PVT) LTD நிறுவனத்தினர் யாழ்.மக்களுக்கு

# Mobitel GSM உடன் இணைந்து வழங்கும் மற்றுமொரு விசேட சலுகை

## CORPORATE PACKAGE

(Total Income Free)

☆ வியாபார விஸ்தரிப்புக்களுக்கும்

☆ நிர்வாகத் திறன்களை முன்னேற்றிடவும்

☆ நண்பர்களுக்கிடையிலான நட்பினை வளர்த்திடவும்

அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தொடர்பாடல் நுட்பமே

## "CORPORATE PACKAGE"

குறைந்தது 05 இணைப்புக்களைப் பெற்று நீங்கள் இதன் நன்மைகளைப் பெற்றிட எம்மிடம் வரவும்.

### Mobitel Corporate Package

| Subscription (Monthly rent) | 100.00 | 200.00 | 300.00 |
|---|---|---|---|
| Call Charges, | | | |
| Peak, | | | |
| Out going | 10.00 | 6.50 | 6.00 |
| Incoming | Free | Free | Free |
| Off Peak, | | | |
| Outgoing | 6.00 | 4.50 | 3.50 |
| Incoming | Free | Free | Free |
| Mobitel to Mobitel | | | |
| Peek | 4.00 | 4.00 | 3.00 |
| Off Peek | 3.00 | 3.00 | 2.00 |
| Incoming | Free | Free | Free |
| Minimum commitment per Phone | 750.00 | 1500.00 | 2000.00 |
| Minimum No. of phones | 05 | 05 | 05 |
| Features, | | | |
| CLI | Free | Free | Free |
| Detailed Bill (Outgoing only) | Free | Free | Free |
| SMS (2/- per message) | Free | Free | Free |
| GPRS / MMS Subscription (MMS 10/- per message, GPRS 2/- per session + 2 cents per Kb | 50.00 | 50.00 | 50.00 |

உபமுகவர்கள் தேவை

05 இணைப்புகளுக்கிடையேயான தொடர்புக்கு முற்றிலும் இலவசம் out going + incoming

★ அரச திணைக்கள ஊழியர்
★ பல்கலைக்கழக ஆசிரியர்கள்
★ பல்கலைக்கழக ஊழியர்கள்
★ வங்கி ஊழியர்கள்
★ வைத்தியர்கள்
★ தாதி உத்தியோகத்தர்கள்
★ தனியார் நிறுவனத்தினர்
★ அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGO)

✪ குறிப்பு:-பொறுப்புவாய்ந்த அதிகாரியின் உறுதிப்படுத்தல் கடிதம் இணைக்கப்படல் வேண்டும்.

(சி-41362)(38-11-46-16)

| | "NE5" PRE PAID PKG | "NE 100" POST PAID PKG | "NE 300" POST PAID PKG |
|---|---|---|---|
| **Monthly Rental** | NIL | 100 | 300 |
| Call Charges | | | |
| Out going | Rs. 10.00 | Rs. 11.00 | Rs. 8.00 |
| Incoming | Rs. 6.00 (First 2 mins. Free) | Rs. 6.00 (First 2 mins. Free) | Rs. 4.00 (First 3 mins. Free) |
| **O/Peak hours** | | | |
| Out going | Rs. 6.00 | Rs. 6.50 | Rs. 4.00 |
| Incoming | First 2 mins free there after Rs. 2.00 | Rs. 3.00 (First 2 mins. Free) | Free |
| **Mobitel to Mobitel** | | | |
| Peek hours Out going | Rs. 5.00 | Rs. 6.00 | Rs. 4.00 |
| O/Peak Out going | Rs.3.00 | Rs.3.00 | Rs.2.00 |
| **Mobitel to Mobitel** | | | |
| In coming | FREE | FREE | FREE |
| **VAS subscription** | | | |
| SMS | FREE Rs. 2.00 per Message | Rs. 25.00, Rs. 2.00 per Message | Rs. 25.00, Rs. 2.00 per Message |
| CLP | FREE | Rs. 25.00 | Rs. 25.00 |
| GPRS | Rs. 50.00 | Rs. 50.00 | Rs. 50.00 |
| MMS | Rs. 50.00, Rs. 10.00 per Message | Rs. 50.00, Rs. 10.00 per Message<br>However 1 year subscription will be free | Rs. 50.00, Rs. 10.00 per Message<br>However 1 year subscription will be free |
| **Refundable Deposit** | NIL | Rs. 1,500.00 | Rs. 1,500.00 |
| SIM Fee | Rs. 2000 | Rs. 1,000.00 | Rs. 1,000.00 |
| IDD Deposit | NIL | Rs. 2,000.00 | Rs. 2,000.00 |
| Friends & Family | Four nominated numbers will be charged at Rs. 5.00 per minute | Rs. 300.00<br>(3 nominated Mobitel no's one fixed number will be charged at 1.50 per min. out going - These numbers can be changed once a month) | Rs. 200.00<br>(3 nominated Mobitel no's one fixed number will be charged at 1.50 per min. out going - These numbers can be changed once a month) |

**Mobitel Time Bands:** Peak 8.00 a.m. to 8.00 p.m. Monday to Friday. 8.00 a.m. to 2.00 p.m. Saturday.
Off Peak All other times including Sundays & Public Holidays. All Charges are sujected to Government taxes.



PRE PAID SIM POST PAID SIM - 300, 100 PACKAGE
MORE CARD - 350/=, 500/=, 1000/=



இணைப்புகளுடன் கூடிய மேசைத்தொலைபேசிகள், கைத்தொலைபேசிகள்
இவை யாவற்றையும் எமது ஸ்தாபனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
MOBILE LANKA (PVT) LTD நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற யாழ். முகவர்

# YARL MOBILES (PVT) LTD.

(Authorised Dealer of Jaffna Mobile Lanka (pvt) Ltd.)

Pillaiyar Street, Thirunelvely, Jaffna
T.P.: 021 222 3927, 0714 168418, 0714 168412, 0714 168410

# அரசியல் ரீதியான பிரச்சினைகள் கூர்மையடைய வேலையில்லாப் பிரச்சினையும் முக்கிய காரணம்

ஒரு நாட்டின் அபிவிருத்தியை நிர்ணயிப்பதில் வேலையுலகு சார்ந்த வாய்ப்பும் ஒரு காரணியாகும். குறித்த நாட்டில் கிடைக்கப் பெறுகின்ற வேலைவாய்ப்பு வசதியைப் பொறுத்தே அந்த நாட்டின் அபிவிருத்திச் சுட்டெண் கணிப்பிடப்படுகிறது. வேலைவாய்ப்புக்கான ஆள்சேர்ப்பு முறை பல்வேறு தகுதிநிலை மற்றும் அணுகு முறைகள் மூலம் இடம்பெறுகிறது.

**அட்டவணை - 01**

| | வங்காள தேசம் | பூட்டான் | இந்தியா | மாலைதீவு | நேபாளம் | பாகிஸ்தான் | இலங்கை |
|---|---|---|---|---|---|---|---|
| *கல்விக்கான செலவீனம் (1997)* | 2.3 % | 2.4 % | 3.7 % | 6.6 % | 2.9 % | 2.7 % | 3.3 % |

வேலைவாய்ப்புக்கான தயார்ப்படுத்தல் கல்வி என்னும் பாடசாலைச் செயற்பாட்டின் ஊடாக ஒருவரிடையே கட்டியெழுப்பப்படுகிறது. இதற்கான கலைத்திட்டக் கொள்கை தேசிய அடிப்படையில் வகுக்கப்படுகிறது. இதனூடாக நாட்டினது கல்விசார் செயற்பரிமாணங்கள், அபிவிருத்தி நோக்கிய முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. இக்கட்டுரை சமகாலத்தில் தேசிய கல்விக்கொள்கை ஊடாக அபிவிருத்தி என்ற நோக்கில் வேலைவாய்ப்பை வழங்குகின்றதா என்ற விடயத்தை ஆராய்வதாக அமைவதுடன், அதற்காகத் தேசிய அளவில் முன்னெடுக்க வேண்டிய செயல்நிலைகளைக் குறிப்பதாகவும் அமைகிறது.

## சேவை முறையிலான தொழில்முறைமை

தென்னாசிய நாடுகளைப் பொறுத்தமட்டில் கல்வியை வழங்குவதுபோல படித்தவர்களுக்கான வேலைவாய்ப்பை வழங்குவதும் அரசின் பொறுப்பாக இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அரசு தமது நிர்வாகக் கட்டமைப்புகளிலும் திட்டங்களிலும் பல்வேறு நிலைகளில் அதற்கான வாய்ப்பு வசதிகளை வழங்குகின்றது. இந்நிலைமை கடந்த காலத்தைப் பொறுத்தமட்டில் நாட்டில் ஏற்பட்ட இனப்பிரச்சினை காரணமாகவும், பொருளாதார நிலையில் ஏற்பட்ட பின்னடைவினாலும் வேலை வழங்குவதில் அரசு நிதி நெருக்கடியைச் சந்தித்துள்ளமை பெரும் பிரச்சினையாக உள்ளது. வேலைவாய்ப்பின்மை, பொருளாதாரப் பிரச்சினையை வலுப்படுத்துவதாக மட்டுமன்றி அரசியல் ரீதியான பிரச்சினையும் கூர்மையடையச் செய்வதைச் சமகால நாட்டுச் சூழ்நிலை கூட்டிநிற்கிறது.

மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டை உயர்த்தவும், உழைப்பாற்றல் முதலீடு உயர்த்துதல், இலவச சேவையை நிவர்த்தி செய்யவும், இதனூடாகப் பயன்பாட்டைப் பெறவும், சமூக, அரசியல், பொருளாதார, குழப்பத்தைத் தவிர்ப்பதற்கு அரசு வேலைவாய்ப்பை வழங்குவதில் முன்னின்று செயற்பட்டது எனலாம். இதன் காரணமாக அரச சேவைகளில் ஒன்றாக வேலைவாய்ப்புகளை வழங்குதல் இடம்பெறலாயிற்று.

**அட்டவணை - 03**

| *பிரதேச செயலர் பிரிவு* | *எண்ணிக்கை* |
|---|---|
| யாழ்ப்பாணம் | 207 |
| கரவெட்டி | 327 |
| பருத்தித்துறை | 235 |
| நல்லூர் | 437 |
| சங்கானை | 185 |
| சண்டிலிப்பாய் | 212 |
| உடுவில் | 295 |
| கோப்பாய் | 248 |
| தெல்லிப்பழை | 296 |
| சாவகச்சேரி | 351 |
| ஊர்காவற்றுறை | 15 |
| மருதங்கேணி | 34 |
| காரைநகர் | 55 |
| வேலணை | 42 |
| நெடுந்தீவு | 01 |
| மொத்தம் | 2940 |

(மூலம்: உதயன் பத்திரிகை - 13.06.2004)

## வேலை வாய்ப்பும் கல்விச் செலவீனமும்

இலங்கையைப் பொறுத்தமட்டில் கல்வி நடைமுறையினூடாகவும், கல்வித் தரம் மற்றும் தொழில்சார் தகைமையை அடிப்படையாகக் கொண்டும் பல்வேறு அணுகுமுறைகளினூடாக வேலைவாய்ப்பு வழங்கப்படும் முறை நிலவி வருகிறது. இதற்கு முன் அரசியல், மதம், மொழி, சார்பான வகையில் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

வேலைவாய்ப்பை வழங்குவதில் கல்வி மிகவும் அவசியமாகிறது. நாட்டின் அபிவிருத்திக் கல்வி என்ற மையத்தளத்தில் இருந்து விரிவடைந்து இயக்கம் பெறுகிறது. உலகளாவிய ரீதியிலும் கல்விக்கான வாய்ப்புகளும் செலவீனங்களும் அதிகரித்து வருவதைப் பின்வரும் அட்டவணை 01 காட்டி நிற்கிறது.

அட்டவணை 01 இன் ஊடாகத் தென்னாசிய நாடுகளை அடிப்படையாகக் கொண்டு கல்விக்கான செவீனத்தை ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது. இலங்கை 3.3 சதவீதத்தைக் கல்விக்கான செலவீனத்துக்காக ஒதுக்கியுள்ளமையைக் காணமுடிகிறது. இத்தகைய ஒதுக்கீடு நாட்டில் ஏற்பட்ட இனப்பகைசார் பிரச்சினை காரணமாக யுத்தசெலவுக்கான செலவீனத்துக்கு அதிகளவு நிதி ஒதுக்கீடு இடம்பெற்றமை கல்விச் செயற்பாட்டையும், நாட்டின் அபிவிருத்தி செயற்பாட்டையும் பின்னடையச் செய்யக் காரணமாக அமைந்தது. இத்தகைய செலவீனம் ஊடாக அடையப்படுகின்ற இலக்கு எத்தகையது என்பதனை வேலைவாய்ப்பின்மை அதிகரித்தமை கேள்விக்குறியாக்கியுள்ளது.

## வேலை வாய்ப்பின்மை பிரச்சினை

**அட்டவணை - 02**

| வருடம் | வேலையின்மை (வீதம்) |
|---|---|
| 1953 | 16 |
| 1963 | 13 |
| 1973 | 24 |
| 1994 | 14 |
| 1997 | 10 |

(மூலம்: மத்திய வங்கி அறிக்கை - 1998)

எமது நாட்டைப் பொறுத்தமட்டில் வேலைவாய்ப்பின்மை என்ற இடர்பாடு அதிகரித்து வருகின்றமையை யாரும் மறுக்கமுடியாது. நாட்டில் ஆட்சிபீடம் ஏறும் அரசுகள் அரசியல் இலாபம் தேடும் செயற்பாடாக வேலைவாய்ப்பு வழங்குதலைக் கையாண்டு விடுவதைக் காண முடிகிறது. இதற்குக் காரணம் நாட்டில் முக்கிய பிரச்சினையாகவும் சமூகத்தில் செல்வாக்குப் பெற்றுத் தீர்க்கமுடியாத பிரச்சினையாகவும் வேலையில்லாப் பிரச்சினை இருப்பதே அடிப்படை எனலாம்.

அட்டவணை 02 மூலம் நாட்டில் வேலையில்லாப் பிரச்சினை 1997ஆம் ஆண்டு வரை எத்தகைய நிலையில் இருந்தது என்பதனை அவதானிக்கமுடிகிறது.


பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்
ஆசிரியர்,
தீவகக் கல்வி நிலையம்.

மேற்படி வரைபடம் 01 இன் ஊடாகத் தொழிலின்மை அதிகரிப்பு 2000ஆம் ஆண்டில் இருந்து அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகிறது. இந்தத் தரவுகள் இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்றபொழுது வேலையில்லாப் பிரச்சினைப்போக்கை இலகுவாக அவதானிக்க முடிகிறது.

## யாழ்ப்பாண மாவட்டத்தில் வேலையின்மை

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் பல்கலைக்கழகக் கல்வி மற்றும் தொழிற்கல்வி கற்று வேலைவாய்ப்புக்காகக் காத்திருப்பவர்களும், கல்வித்தரத்தில் ஜி.சீ.ஈ. சாதாரண மற்றும் ஜி.சீ.ஈ. உயர்தரக் கல்வி கற்பவர்கள் என்ற அடிப்படையிலும் பலர் வேலைவாய்ப்புப் பெறுவதில் கஷ்டப்பட்டு வருவதைக் காண முடிகிறது.

**அட்டவணை - 04**





(மூலம்: மத்திய வங்கி அறிக்கை - 2001)

அட்டவணை 03 ஊடாக யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்கலைக்கழகப் பட்டப்படிப்புபைப் பூர்த்திசெய்து வேலைவாய்ப்புக்காக 2940 பேர் உள்ளனர் என்பதை அறியமுடிகிறது. இந்த எண்ணிக்கை இன்று அதிகம் என்றே கூற முடியும். அத்துடன், ஏனைய கல்வி மட்டத்தைக் கொண்டவர் உள்ளடக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## வேலையின்மைக்கான காரணங்கள்

அரசு ஒன்றின் பொருளாதாரக் கொள்கை வெற்றிபெறப் பயனுள்ள வேலைவாய்ப்பு எல்லோருக்கும் கிடைக்கக்கூடியநிலை காணப்படல் வேண்டும். மத்திய வங்கியின் 2001ஆம் ஆண்டு அறிக்கையின் பிரகாரம் 6.7 மில்லியன் ஆள்களைக்கொண்ட மொத்தத் தொழிலாளர் அணியில் 6.2 மில்லியன் பேர் தற்போது வேலை செய்பவர்களாக உள்ளனர். இத்தொழிலாளர் அணியில் 5லட்சத்து 28ஆயிரம் பேர் உத்தியோகபூர்வமாக வேலைவாய்ப்பு இல்லாதவர்களாக இருக்கின்றனர். (இதில் வடக்கு - கிழக்கு உள்ளடக்கப்படவில்லை) வெளிநாடுகளில் ஒரு மில்லியன் தொழிலாளர்கள் வேலை

**வரைபடம் - 01**




(மூலம் - தொகை மதிப்பு புள்ளிவிவரத்திணைக்கள அறிக்கை - 2001)

புரிகின்றனர். இவர்களில் 75 சதவீதத்தினர் மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரிகின்றனர்.

இலங்கையில் எதிர்வரும் ஆண்டுகளில் 40 ஆயிரத்துக்கும் 50 ஆயிரத்துக்கும் இடைப்பட்ட, வேலையாளர்கள் வேலைக்காகக் காத்திருப்பார்கள் எனச் சுட்டிக்காட்டப்படுவது வேலையின்மைப் பிரச்சினை அதிகரித்து வருவதைப் புலப்படுத்துகிறது. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 28 லட்சத்து 3 ஆயிரம் இளைஞர், யுவதிகள் ஜி.சீ.ஈ. சாதாரண மற்றும் உயர்தரம் கற்று வேலையின்றிக் காணப்படுகின்றனர்.

வேலைவாய்ப்பின்மைக்கான காரணிகளை இனங்காணுகின்ற பொழுது படித்துப்பட்டம் பெற்று வேலையின்மையில் உள்ளவர் மற்றும் பட்டம் பெறாமல், பல்வேறு கல்வித்தகைமையில் உள்ளவர்கள் என்ற வகைப்பாட்டைக் கவனத்தில் கொள்ளவேண்டும். பொதுவாகக் கல்வி முறையிலுள்ள குறைபாடுகளும் மாணவர்களின் குறைபாடுகளும் வேலையின்மைக்குக் காரணமாக அமைகின்றன எனலாம்.

▲ கலைத்திட்ட ஒழுங்கமைப்பும் கல்விக் கொள்கையும் வேலையுலகை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறாமை.

▲ உலக மாறுதல்களுக்கு ஏற்ற கல்விச் சீர்திருத்த எண்ணக்கருவாக்கம் உள்வாங்கல் இடம்பெறாமை.

▲ செய்முறை சார்ந்த கல்விமுறைமை முக்கியப்படுத்தப்படாமை.

▲ வள அடிப்படையிலான தெரிவுமுறை இடம்பெறுதல்.

▲ பல்கலைக்கழகக் கல்விக்கும் தொழில் துறைக்கும் இடையிலான இடைவெளி அதிகரித்துக் காணப்படுதல்.

▲ மாணவனின் திறன்களையும் பொது விவேகத்தையும் மேம்படுத்தக்கூடிய வழிகாட்டல்கள் காணப்படாமை.

▲ மாணவர்களிடையே போதிய ஆங்கில மொழிப்புலமை காணப்படாமை.

▲ மாணவர்களிடையே உள்ள மாறுபட்ட இலக்குகள்.

▲ சமூக அந்தஸ்து மற்றும் சமூக அமைப்பியலுக்குக் கட்டுப்படுகின்ற வாழ்வியலத தன்மை.

▲ கல்விசார் புறச்செயற்பாடுகளில் பங்கு கொள்ளாமை.

▲ சுயதொழில் முயற்சிகளில் ஈடுபாடு இன்மை காணப்படல்.

▲ தகவல்த் தொழில்நுட்ப அறிவு குறைவாக இருத்தல்.

▲ குறுகிய காலத்துக்கு ஒருமுறை மாற்றம் பெறும் கல்வித் திட்டமிடல்கள்.

போன்ற பல்வேறுபட்ட காரணங்கள் வேலைவாய்ப்பைப் பெறுவதில் சந்தர்ப்பத்தை குறைத்து வருகின்றன எனலாம்.

## வேலைவாய்ப்பை வழங்காத கல்வி முறைமை

நாட்டின் அபிவிருத்தி, செயற்பாடு வெற்றிபெற ஆரோக்கியமான கல்விமுறைமை அவசியமாகிறது. நாட்டில் உள்ள குறைபாடுகளை நிறைவுள்ளதாக்குகின்ற திட்டமிடப்பட்ட கல்வி அமைப்பு வேண்டப்படுகிறது. கல்வி ஊடாகப் பொருளாதார மேம்பாடு அடைதல் அவசியமாகிறது. பொருளாதார மேம்பாடு ஏற்படுவதற்குத் தொழிலாளர் தேவையும் அவர்கள் சார்ந்த பிரச்சினையும் தீர்க்கப்பட வேண்டும். கல்விச் செயற்பாடானது எந்தவொரு மட்டத்திலும் வெற்றியடையவில்லை என்பதை அட்டவணை 04 காட்டிநிற்கிறது. இதனூடாகப் பல்வேறு கல்வித்தர நிலைகளில் கல்வி வீழ்சசி பெறுவதையும் பல்கலைக்கழகத் தெரிவு மிகவும் சொற்ப அளவில் இடம்பெறுகின்றது என்பதையும் காட்டி நிற்கிறது.

அட்டவணை 04 ஊடாகக் கல்வித் திட்ட நடைமுறையில் தோல்வியைக் காணமுடிகிறது. 1998இல் 3 லட்சத்து 53ஆயிரத்து 372 மாணவர்கள் ஆண்டு 11ஐப் பூர்த்திசெய்து ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றி அதில் 37 வீத மாணவர்கள் அதாவது, 131, 143 மாணவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தரத்திற்குத் தகுதிபெற்றிருக்கிறார்கள். பின்னர் 33 வீதம். அதாவது, ஒரு லட்சத்து 3ஆயிரத்து 650 பேர் முதல் தடவையாக 2001 ஆம் ஆண்டில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளதையும் 14 வீதமான 50ஆயிரத்து 526 பேர் பல்கலைக்கழக அனுமதித் தகுதியையும் 2 வீதமானோர் அதாவது, 5ஆயிரத்து 750 பேர் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவுசெய்யப்படுகின்றமையை அவதானிக்கலாம். அத்துடன், பொதுக்கல்வித் தரங்களின் அடிப்படையில் ஏற்படுகின்ற வீழ்ச்சி நிலையையும் அறிந்து கொள்ளமுடிகிறது.

(வளரும்)

# முறைசாரக்கல்வி பயிற்சிகள் ஆரம்பம்

தொல்புரம்,மார்ச்8

வட்டுக்கோட்டை, இந்துக் கல்லூரியில் முறைசாரக் கல்விப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர் வே.சண்முகலிங்கத்தால் நடத்தப்படும் இக்கற்கை நெறிகளில் புகைப்படத்துறையை எவ்வாறு முன்னெடுப்பது என்பது பற்றியும் புகைப்படத்துறையின் நுண்கலைத் தொழில்நுட்பம் தொடர்பாகவும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. (ப-ரி)


## இலங்கை வங்கி /மக்கள் வங்கி

## பயிலுநர் தெரிவுப் போட்டிப் பரீட்சை

07.03.2005 திங்கள் தொடக்கம் வெள்ளி வரை, நேரம் பிற்பகல் 2.00 - 5.30 வரை பாடங்கள் பொது அறிவும், உளச்சார்பும், எண் புலைமை, ஆங்கிலம் வழிகாட்டல் வகுப்பு தனித்தனி ஆசிரியர்களால் போதிக்கப்படும்.

பட்டதாரிப்பிரிவு

யாழ்ப்பாணக் கல்லூரி, (சி-41344)

464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

(26-11-16)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18 - 02 - 1926 | 06 - 02 - 2005 |



### அமரர் நாகமுத்து இராசையா

மனிதருள் மாணிக்காமாய் பாசத்துடன் வாழ்ந்தீர்
இனிய உமது முகத்தை எப்போது நாம் காண்போம்?
ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகிறோம்.

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு உடன் வந்து சகல வழிகளிலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் குறிப்பாக திருநெல்வேலி, யாழ்ப்பாணம் மிருகவைத்திய அலுவலகத்தினர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது இல்லத்தில் இன்று (08-03-2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

92, கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(42813)(46-11-16-26)

## 6ஆம் மாத நிறைவு நினைவஞ்சலிகள்



### அமரர் செல்லையா பஞ்சாட்சரம்

(தர்மகர்த்தா, கருக்குவாச்சி விநாயகர் ஆலயம், பெரியமாவடி)

| உதயம் | அஸ்தமனம் |
|---|---|
| 24-03-1944 | 11-09-2004 |

*ஆறு திங்களிங்கு அகன்றதுவோ ஐயா உம்*
*ஆசை முகம்மறைந்து அவலந்தான் ஆகியதோ?*
*கூறு புகழீந்து குலங்காக்க வாழ்வீந்து*
*குணமலையாய் நின்ற கோபுரமே சாய்ந்தீரோ?*
*பேறு பலதந்து பெருமையொடு வாழ்வமைத்து*
*பெருமை பலதந்தீர்! பெற்றியைநாம் மறப்போமோ?*
*ஆறு தலையந்த ஆண்டவனின் பொன்னடியில்*
*ஐயா நீர்பெறுக! அகநெகிழ அஞ்சலித்தோம்!*

ஆத்ம சாந்திக்கு எம் அஞ்சலிகள்!

பெரியமாவடி,
சாவகச்சேரி.

உள்ளத்தில் நினைவு சுமக்கும்:
- அன்புக் குடும்பத்தினர்.

(42780)(46-11-16-26)

## இடமாற்றம்

வலி.தெற்கு,மார்ச்8

சுன்னாகம் பிரதேசத்தில் நீண்டகாலமாக பொதுச் சுகாதார பரிசோதகராகக் கடமையாற்றி வந்த கே.பத்மகுமார் இந்த மாதம் முதலாம் திகதியில் இருந்து வவுனியாவில் உள்ள நெலுக்குளம் பகுதியின் பொதுச்சுகாதாரப் பரிசோதகராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (ப-152)

## வர்த்தக வங்கி சுன்னாகம் கிளை மாணவருக்குப் பரிசில்

வலி.தெற்கு,மார்ச்8

கடந்த வருடம் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் முதல் இரண்டு இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு இலங்கை வர்த்தக வங்கி சுன்னாகம் கிளை பரிசுகள வழங்கிப் பாராட்டிக் கௌரவித்துள்ளது.

இவ்விரு மாணவர்களும் இலங்கை வர்த்தக வங்கி சுன்னாகம் கிளையில் அருணலு சிறுவர் சேமிப்பு கணக்கைப் பேணி வருவதனால் இவர்களுக்கு வங்கி முகாமையாளர் ஏ.ஆர். குலேந்திரன் பரிசுகள் வழங்கிக் கௌரவித்தார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பாட்சையில் பாடசாலை மட்டத்தில் முதலாம் இடம் பெற்றிருந்த தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மாணவன் செல்வன் சண்முகானந்தன் சந்தோஷன் என்பவருக்கும் இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்த தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்கப் பள்ளி மாணவி செல்வி திரிசூலி ரகுநாதன் என்பவருக்குமே இவ்வாறு பரிசுகள் வழங்கப்பட்டன. (ப-152)

## பணப் பரிமாற்று நிறுவனக் கிளை

தொல்புரம்,மார்ச்8

வெஸ்ரன் யூனியன் பணப் பரிமாற்று நிறுவனத்தின் கிளை நிறுவனம் தொல்புரம் கண்டாமைப் பகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் சிரமங்கள் இன்றி பணப் பரிமாற்றத் தேவைகளைத் பூர்த்தி செய்வதற்கு இப்பகுதி மக்களிற்கு அந் நிறுவனம் வழிவகை செய்து கொடுத்துள்ளது. (ப-ரி)

## 'ஏ.நெகடிவ்' இரத்தம் தட்டுப்பாடு

தொல்புரம்,மார்ச்8

யாழ்.போதனா வைத்தியசாலை இரத்தவங்கியில் 'ஏ நெகடிவ்' வகை இரததத்திற்கு பலதத தட்டுப்பாடு நிலவுகிறது.

அவசர நோயாளர்களுக்கு இவ்வகை இரத்தம் தேவைப் படுவதால் இரத்த தானம் செய்ய விரும்புவோர் யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறு இரத்த வங்கி வைத்தியர் கேட்டுள்ளார். (ப-ரி)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




சங்குவேலி வடக்கைச் சேர்ந்த
*நவரட்ணம் - விஜயஶ்ரீ* தம்பதிகளின்
செல்வப் புதல்வன் சன்ஜெய்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (08.03.2005) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். சன்ஜெய் குட்டியை அப்பா,அம்மா மற்றும் தாத்தா, அம்மம்மா, அப்பம்மா, ஜேர்மனியிலுள்ள குமார் மாமா, துளசி மாமி, பெரியப்பா, பட்டு பெரியம்மா, சர்மிலன் அண்ணா, யஸ்மினி அக்கா, பதுளையில் வசிக்கும் பெரியப்பா குடும்பம், நாரந்தனையில் வசிக்கும் சின்ன பெரியப்பா குடும்பம், உடுவில் மனோ மாமி குடும்பம், மலர் மாமி குடும்பம், ஶ்ரீ மாமி குடும்பம், வேணுகானன் அண்ணா, வேணி அன்ரி, சின்னத் தாத்தா, சின்ன அம்மம்மா, மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் மருதனார்மடம் ஶ்ரீ ஆஞ்சநேயப் பெருமான் துணை பெற்றுப் பல்கலையும் கற்றுப் பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

டச் றோட்,
சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்,

தகவல்: தாத்தா
(எஸ்.வியரத்தினம்)

(42742)(11-16-26)


## இரவு மேற்பார்வையாளர்

கொழும்பில் இயங்கும் பத்திரிகை நிறுவனம் ஒன்றில் இரவு நேரப் பணிகளை மேற்பார்வை செய்வதற்காக இரவு நேர மேற்பார்வையாளர் பதவிக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ✪ கொழும்பில் தங்குமிட வசதி தரப்படும்.
- ✪ உணவுக்கான கொடுப்பனவுகளும் அனுமதிக்கப்படும்.
- ✪ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

### தகைமைகள்

- ★ முப்பது வயதுக்கு மேற்பட்ட ஆண்கள்...
- ★ இரவுக் கடமை புரிவதற்கு ஏற்ற உடல் ஆரோக்கியம்
- ★ இரவு நேரப் பணிகளை முகாமை செய்து நிலைமைக்கு ஏற்ப முடிவுகளை எடுத்துச் செயற்படுத்தும் திறமை -
- ★ பத்திரிகைத்துறைப் பணிகள் தொடர்பான முன் அனுபவம் இருப்பின் முன்னுரிமை -
- ★ விண்ணப்பதாரர் சுயமாகத் தயாரித்த விண்ணப்பப்படிவத்துடன் உறவினர் அல்லாத இருவரது நற்சான்றிதழ்களையும் சேர்த்து அனுப்பவேண்டும்.

விண்ணப்பங்களை விளம்பர இலக்கம் 2515,
மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,
என்ற முகவரிக்கு 11.03.2005இற்கு முன் அனுப்பிவைக்கவும்.

(சி-41347)(26-11-16)

## வட மாகாண மக்களுக்கு ஒரு நற்செய்தி!



செய்மதி தொலைக்காட்சித் துறையில் 14 வருட அனுபவமுள்ள இலங்கையின் ஒரேயொரு நிறுவனமான **Sats - Tech** நிறுவனம் செய்மதி தொலைக்காட்சி உபகரணங்களை நேரடியாக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து உத்தரவாதத்துடன் விற்பனை செய்துவருகின்றது. **Topfield** மற்றும் **DVB SUPER SLIM** றிசீவர்களுக்கான வட மாகாணத்தின் உத்தியோகபூர்வமான முகவர் **Sats - Tech** மட்டுமே என்பதை அறியத்தருகின்றோம்.

**KU BAND DISH SYSTEM**
ரூபா 13,000 இல் இருந்து

- ☆ கடும் மழை, பனிக் காலங்களிலும் தடைப்படாத **Horizontal Offset dish Antenna**
- ☆ ஒரு வருட உத்த்ரவாதம்
- ☆ விற்பனைக்குப் பிந்திய சேவை
- ☆ இலவச தொழில்நுட்ப ஆலோசனைகள்
- ☆ **Free Channel Updating**
- ☆ **Free Software Updating**

✪ குறிப்பு: *உத்தரவாதமற்ற இந்தியன், சீனா றிசீவர்கள் நாம் விற்பனை செய்வதில்லை.*

தொடர்புகளுக்கு:

**SATS - TECH ENGINEER'S**
(M/S National Video Center)
No.182, K.K.S. Road,
(NEAR KULAPITY CHURCH)
KOKUVIL, JAFFNA.
Phone: 021 222 5908 / 0777 710785

(சி-41353) (26-11-16)

# பக்தி சிரத்தையுடன் அனுஷ்டிக்க வேண்டிய விரதம் மகாசிவராத்திரி

சிவபெருமானுக்குரிய சிறப்பு மிக்க விரதங்களில் ஒன்றான மகாசிவராத்திரி விரதம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது. அந்த விர



தத்தை அனுஷ்டிக்கும் முறை விரதத்தின் பலா பலன்கள் பற்றி விரிவாகக் கூறுகின்றது இந்தக் கட்டுரை.

ஈழவளத் திருநாட்டை அருளாளர்கள் முதற் கொணடு பலரும் அனுபவரீதியாக சிவபூமியென்று அழைத்தனர்.

சைவசமயம் சிவசம்பந்தமுடையது. சிவம் என்பது சிவபெருமானைக் குறிக்கின்றது. சிவபெருமானைக் குறிக்கின்ற விரதங்களில் மகாசிவராத்திரி அதிஅற்புதமும் சக்தியும் வாய்ந்ததாகும்.

ஈழத்திருநாட்டின் நான்கு திசைகளிலும் சிவாலயங்கள் உள்ளன. பலஊர்கள், நகரங்கள், கிராமங்கள், தோறும் சிவாலயங்கள் பரந்து செறிந்து காணப்படுவதால் ஈழம் 'சிவபூமி'யென்று அழைககப்படும். இந்த உண்மையைப் பலநூற்றாண்டுகளுக்கு முன்பே அவதரித்த திருமூலர் திருமந்திரத்தில் வலியுறுத்தியுள்ளார்.

ஈழத்திருநாட்டில் பாடல்பெற்ற சிவத்தலங்களில் பெருமையும் அதியற்புதமும் வாய்ந்த சிவத்தலங்கள் பல உண்டு. வடமேற்கில் திருக்கேதீச்சரம், வடக்கே நகுலேச்சரம், கிழக்கே திருக்கோணேஸ்வரம், தென்மேற்கில் முனீஸ்வரம், வடக்கே இந்தியாவின் தென்பகுதியில் இராமேஸ்வரமும் அணிசெய்கின்றன.

இராமேஸ்வரம் ஈழவளத்திருநாட்டிற்கே உரியது. கடல்கோள்அதனைப் பிரித்ததாக மறைமலையடிகள் சங்கத்தமிழில் குறிப்பிட்டுள்ளார்.

சிவராத்திரி விரதகாலத்தில் சைவ மக்கள் சிவாலயங்களில், ஆகம விதிப்படி விரதமிருந்து நித்திரை விழிப்பார்கள்.

நகுலேஸ்வரம் யாழ்ப்பாண நகரின் வடக்கே கீரிமலைக் கடற்கரையில் உள்ளது. மாசிமாத மகாசிவராத்திரியன்று இவ்வாலயத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

கீரிமலையும், நகுலேஸ்வரமும் கி.மு.காலந்தொட்டே இருந்ததாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இங்கு கீரி(நகுலம்) முகமுடைய முனிவர் தவமிருந்து நீராடி நகுலம் நீங்கப் பெற்றுச் சிவனை வணங்கினார். சோழநாட்டு இளவரசியும் குதிரைமுகம் நீங்க இங்குதான் நீராடினாள். உடல, உள நோய் கீரிமலைத் தீர்த்தத்தில் நீராடி நகுலேஸ்வரரை வலம் வர நீங்குமென்ற நம்பிக்கை நீண்ட காலமாக உண்டு. இங்கேயும் சிவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

### புராணங்களில் சிவராத்திரி

சிவராத்திரி தோன்றியதற்குப் பலவிதமான புராணக் கதைகள் உள்ளன. பிரம்மாவும், விஷ்ணுவும் யார் பெரியவர் என்பதில் போட்டி போட்டு சண்டை பிடித்தனர். இதனைக்கண்டு எம்பெருமான் சோதியாக நின்று, எனது அடி, முடியை யார் முதலில் காண்பார்களோ? அவர்களே உலகின் முதற் கடவுளென்றார்.

விஷ்ணு சோதியின் அடியைப் பன்றி வடிவமாக தோண்டிச் சென்றபோது, சோதியின் அடி காணமுடியாத தோல்வியுடன் இறைவன் அருகில் நின்றார். பிரமா அன்ன வடிவமாகச் சோதியின் மேலே மேலே பறந்துசென்று, சோதியின முடியை காணாவிட்டாலும் முடிகண்டதாகப் பொய்கூறி சாபம் பெற்றார். இவர்களால் அடிமுடி காணப்படாத அந்தச் சோதிவடிவமே திருவண்ணாமலையாகும்.

இதைவிட இன்னொரு புராணக்கதையும் உண்டு. ஒரு நாள் நந்தவனத்தில் எம்பெருமானும எம் பெருமாட்டியும் இருந்த போது, உமாதேவியார் கண்ணாம்பூச்சி விளையாட ஆசை கொணடு, சிவபெருமானின் கண்களை இருகைகளாலும் பொத்தினார்.

இதனால், உலகம் முழுதும் இருண்டுவிட்டது. சூரியனின் ஒளியில்லாது. உயிரினங்கள் சோர்வடைந்தன. இதனால், தேவர்கள் சிவலிங்கப் பூசைசெய்து நைவேத்தியம் முதலானவை படைத்து முக்கரண சுத்தியுடன் அர்ச்சித்தனர். அர்த்த சாமத்தில் சிவபெருமான் திடுக்கிட உமாதேவியார் கைகளையெடுத்தார். இந்த நேரத்தில் சிவபெருமான் தேவர்களுக்கு அர்த்த சாமத்தில் லிங்கத்தில் தோன்றி அருள்புரிந்தார். தேவர்கள் எங்களைப் போன்று மாசிமாத மகாசிவராத்திரியில் விழித்து விரதமிருந்தால், நல்ல வரமளிக்க வேண்டுமென எம்பெருமானைக் கேட்க அவரும் அவ்வாறே அருள் புரிந்தார்.

### விரதம் அனுஷ்டிக்கும் முறை

சிவன், மகாசிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கும் முறைபற்றி விஷ்ணுவுக்குப் பின்வருமாறு உபதேசம் செய்ததாக சிவமகாபுராணத்தில் கூறப்பட்டுள்ளது.

உலகத்தில் முத்தியளிக்கத்தக்கவை நான்கு. அவை சிவார்ச்சனை, உருத்திரபாராயணம், அஷ்டமி, பிரதோஷம், சோமவாரம், மகாசிவராத்திரி இவற்றில மகா சிவராத்திரி மிக மிக உன்னதமானது. மகாசிவராத்திரி மூன்று நாள் விரதத்தை ஆகம விதிப்படி அனுஷ்டித்தவர்கள் காசியில் இறந்த புண்ணியத்தை அடைவார்கள். என புராணங்கள் கூறுகின்றன.

இந்த விரதத்தை முதியோர், பெண்கள், ஆண்கள், இளைஞர் சிறுவரென எவரும் அனுஷ்டிக்கலாம்.

நித்திரை விழிக்கும் தினத்தை முதல்நாள் அதிகாலையில் எழுந்து நீராடி அனுட்டான விதிகளின் படி சிவபூசை முதலியனவற்றை முடித்துச் சிவாலயம் சென்று ஆலயத்தைப் பயபக்தியுடன வலம்வருதல் வேண்டும். சிவநாமம் மனம நிறையத் தியானம் செய்து மதியம் ஒருபோது உணவு உட்கொண்டு சிவனுக்காய் நித்திரை விழிக்கும் நாளில் நீராடல முதலியனவற்றை முடிதது சிவன்கோயிலில் பகற்பொழுது இராப்

குப்பிழானூர் **மாதாஜி**

பொழுதும் முதலியனவற்றை முக்கரண சுத்தியுடன் கழிக்கவேண்டும்.

சிவன கோயிலில் நான்கு சாமப் பூசைகளையும் சிவ சிந்தனையுடனும் சிவநாமத்துடனும் கண்விழித்து மறுநாள் நீராடி அனுட்டானம் முடித்து உதயகாலத்தில் பாறணை செய்யவேண்டும் என்பது விதி.

சிலர் சிவராத்திரி நித்திரை விழிப்பை அடாத வழிகளில் விழித்துப் பெரும்பாவம் முதலாகப் பெரும்பழிகளைச் சுமந்து அல்லற்படுகின்றனர். சிவ காரியம் முதல் புண்ணிய காரியம் யாவும் நேர்மையாகவும் உண்மைக்கு விரோதமில்லாமலும் செய்வதால் புகழும், மோட்சமும் உண்டாகின்றன. ❋

# போலிப் பெயர்களுடன் பாக்கு பைக்கற்றுகள் விற்பனை

வலிகாமம் தெற்கு,மார்ச்8

போலிப் பெயருடன் பாக்குப் பைக்கற்றுகள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பரவலாக எல்லா இடங்களிலும் தற்போது விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

இப்போலியான பைக்கற்றுகளை வாங்கி அவற்றில் உள்ள பாக்குகளை உண்பவர்கள் ஒருவித மயக்க நிலைக்கு ஆளாகிறார்கள் எனவும் அறியவருகின்றது.

குறிப்பிட்ட ஒரு வாசனைப் பாக்குபோல அதே பெயரில் தயாரிக்கப்படும் தயாரிப்புகள் விற்பனைக்கு வந்துள்ளதாகவும் அவற்றில் போதைவஸ்துகள் கலக்கப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

பெரும்பாலும் பாடசாலைகள், இராணுவ முகாம்கள் என்பவற்றுக்கு அருகில் சில வியாபாரிகள் இவற்றை விற்பனை செய்துவருவதாகக் கூறப்படுகிறது.

பாட சாலை மாணவர்கள் இவற்றை விருப்புடன் வாங்கிச் சாப்பிட்டபின் வகுப்பறை நேரத்தில் ஒருவித மயக்க நிலையிலும் சோர்வுடனும் காணப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான போதைவஸ்து கலந்த பாக்குகளை சில விஞ்ஞான பாட ஆசிரியர்கள் பரீட்சித்துப் பார்த்ததில் அவைகளில் வித்தியாசமான பொருள் கலந்திருப்பதாகக் கூறியுள்ளனர்.

மாணவர்கள் இதுபோன்ற பொருள்களை வெளியாரிடமிருந்து வாங்கக்கூடாது எனவும் போதைவஸ்துக்கு அடிமையாகி சீரழியாமல் பாடசாலைகளில் இயங்கும் கடைகளில் அல்லது நம்பகத்தன்மையுடையவர்களிடம் இருந்து வாங்கிப் பயன்படுத்துமாறும் ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-152)

## இடைத்தங்கல் வீடுகள் 15ஆம் திகதிக்குமுன் கையளிப்பு


யாழ்ப்பாணம்,மார்ச்8

சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்புற்ற வடமராட்சி மற்றும் வடமராட்சிகிழக்கு பிரதேச மக்களுக்கு எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முனனர் இடைத்தங்கல் முகாமில் அமைக்கப்பட்டுள்ள வீடுகள் கையளிக்கப்பட்டுவிடும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் உதயனுக்கு தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து தற்காலிக குடிமனைகளில் வசிக்கும் 2 ஆயிரத்து 200 குடும்பங்களுக்கு இடைத்தங்கல் முகாமில் அமைக்கப்பட்ட இந்தவீடுகள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்கப்படவுள்ளன.

இந்த வீடுகள் அமைக்கும் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. அந்தப்பணிகள் பூர்த்தியாகியதும் வீடுகள் உரியவர்களுக்கு கையளிக்கப்படும்.

ஒரு பகுதி வீடுகள் அரசினாலும் எஞ்சிய வீடுகள ஐ.நா சார்பு அமைப்புக்களாலும் வெளிநாட்டு சர்வதேச தொண்டர் நிறுவனங்களினாலும் அமைக்கப்பட்டு வருகின்றன. (ப-204)



சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஆதரவுடன் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி மாணவர்களுக்கு இலவசக்கற்றல் உபகரணங்களை வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலயப் பிரதமகுரு சோ.தண்டாயுதபாணிக தேசிகர் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்குவதையும் அருகில் கல்லூரி அதிபர் ந.அரியரத்தினம் நிற்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்: சி.சுந்தரலிங்கம், கரவெட்டிச்செய்தியாளர்)*

# வாசகர் திருமுகம்

## நிவாரணத்தில் நிறைவெட்டு நியாயமா?

அரசினால் வழங்கப்படும் இலவச நிவாரண விநியோகத்தில் நிறைவெட்டு வழமையான ஒன்று. அதிலும் எமது பகுதிக் கிளையில் இந்த நிறைவெட்டானது மிக மோசமாக நடைபெற்று வந்துள்ளது.

நிறைவெட்டு தொடர்ந்து நடைபெறுவதற்கு காரணம், எமதுபகுதி கிராமப்புறம் என்பதும் மக்களை எந்த வகையிலும் ஏமாற்றலாம் என்ற எண்ணமுமே.

கடந்த காலங்களில் இத்தகைய நிறைவெட்டுத் தொடர்பாக பிரதேச செயலரிடமும் அரச அதிபரிடமும் எடுத்துக்கூறியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் எனது குடும்பத்தைப் போன்று வறிய குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

இந்த வேளையில் கடந்த மாத நிவாரணப்பொருள் வழங்கலில் சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் 23ஏ கிளையின் தராசில் இரண்டு கிலோகிராம் இழுவையுடன் ஒரு கிலோ கிராம் நிறைவெட்டு உள்ளதை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினர் கண்டுபிடித்து அவர்களது இருப்பினையும் சரிபார்த்தனர். அப்போது 300 கிலோகிராமிற்கும் அதிகமான அரிசி மேலதிகமாக இருந்ததை அவர்கள் உறுதிசெய்தனர். அத்துடன், அவர்கள் உறுதிசெய்யும் வரையில் வழங்கப்பட்ட நிவாரணத்தில் 117 குடும்பங்களுக்கு 2கிலோ 500கிராம் வீதம் அரிசி வழங்கும் படியும் பணித்தனர். இதனால் குறிப்பிட்ட நிறை அரிசி எமக்கு வழங்கப்பட்டது.

இத்தகைய நடவடிக்கையை மேற்கொண்ட விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினருக்கு எமது பகுதிமக்கள் சார்பாக நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதேவேளை - இது போன்று வேறு பிரதேசங்களிலும் மக்களைச் சுரண்டுபவர் மீதும் நடவடிக்கை மேற்கொண்டு மக்களின் பாதுகாப்பிற்கு பக்கபலமாக இருக்கவேண்டுமென்று அவர்களை மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

ஏழாலைதெற்கு,
மயிலங்காடு.

**அ.பாலேஸ்வரன்**
**அ.சுந்தரலிங்கம்**

## தம்பாலை சனசமூக நிலையம் வாசகர் திருமுகத்துக்கு விளக்கம்

25-02-2005வெள்ளிக்கிழமை 'வாசகர் திருமுகம்' பகுதியில் க.பரணிதரன் என்பவர் வரைந்த 'சட்ட விரோத கல், மண் அகழ்வு' தொடர்பான வாசகர் திருமுகம் தொடர்பாக பின்வரும் விளக்கத்தைத் தருகிறோம்.

மேற்படி மண் அகழ்வு தொடர்பாக கிராம அலுவலர், பிரதேச செயலர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுத் தடைசெய்யப்பட்டுள்ளது. தம்பாலை - கதிரிப்பாய் கிராம அலுவலர் பிரிவுகககு உடபட்ட கதிரிப்பாய் கிராம வீதி புனரமைப்பிற்காகவே மண் அகழ்வு செய்யப்பட்டது. இந்த மண் அகழ்வினால் எமது கிராமத்திற்குப் பெரும்பாதிப்பு ஏற்படும் என்பது உண்மை. ஆனால், தம்பாலை - கதிரிப்பாய் ஜே/282 கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட தம்பாலை கிராம கரையோரப் பிரதேசத்திலேயே மண் அகழ்வு இடம்பெற்றுள்ளது. வாசகர் திருமுகத்தில் குறிப்பிட்டது போன்று இடைக்காடு கிராமக் கிழக்குப் பக்கமல்ல. இடைக்காடு கிராமத்திற்குக் கிழக்கு பக்கமாக எந்தக் கடற்கரையும் இருப்பதாகச் சான்றுகள் இல்லை. கிராமத்தின் அமைவு பற்றிச் சரியாக அறியாமல் எமது கிராமத்தின் பெயரை மறைக்கும் வகையில் பெயரை மாற்றிக் குறிப்பிட்டது தவறானது. இதனால் எமது கிராம மக்கள் பெரும் விசனம் அடைந்துள்ளனர். எனவே, இவ்வாறு பெயர் மாற்றிக் குறிப்பிடுவது தடுக்கப்படவேண்டும்.

எனவே, மேற்படி விடயம் சம்பந்தமாக எமது மறுப்பினை வாசகர் திருமுகம் பகுதி ஊடாக பிரசுரித்து உதவுமாறு தம்பாலை பிரதேச வாழ்மக்கள் சார்பாக பணிவாக வேண்டுகின்றோம்.

தம்பாலை.

**நிர்வாகம்,**
**ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம்.**

## மகளிர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்8

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்தித் திட்டப் பிரிவு, 20 கிராம மாதர் சங்கங்கள், மாதர் குழுக்களுடன் இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர்தின நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. (202)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

**துவராசா நாகம்மா [தங்கம்]**

மலர்வு 12-04-1952 உதிர்வு 19-02-2004

எங்கள் அன்புத் தெய்வமே!
மறைந்தது உங்கள் உடல் மட்டும் தான்
மறையாது எம் நெஞ்சில் உங்கள் நினைவு
நினைவால் எம்முடன் வாழுகின்ற போதும்
உங்கள் ஆத்மசாந்திக்காய் - ஆண்டவன் பாதங்களை
அழுதழுது நாம் அஞ்சலிக்கின்றோம்.

அண்ணாசிலையடி, கரணவாய். (42821)(21-18-34) - குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 27 - 11 - 1932



ஆறுமுகன் அடியில் 20 - 02 - 2001

திருமதி

**குமாரசுவாமி தையல்முத்து**

(நெடுந்தீவு மேற்கு, 5ஆம் வட்டாரம்)

திதி: 08-03-2005

ஊனாய் உயிராய் உடலாய்
நீயாக நின்று
பாசப்பிணைப்புடன் எம்மை வழிநடத்தி
வாழ்விக்கும் உங்கள் நினைவுகள்
எம்நெஞ்சு சுமக்கும் பசுமையான கனவுகள்.

இல.15, சோமசுந்தரம் வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (42636)(46-21-18-34)

அம்மாவின் நினைவுகளுடன்:
அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# குண்டு துளைக்காத ஆடைகளை இந்தியாவிடம் வாங்குவதா?

## திறைசேரி - பாதுகாப்பு அமைச்சு இழுபறி

கொழும்பு,மார்ச்8

இராணுவத்தினருக்கு தேவையான - குண்டுகள் துளைக்காத - ஆடைகளை இந்தியக் கடன்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்வதற்கு பாதுகாப்பமைச்சு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சிற்கும் திறைசேரிக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

உள்நாட்டுக் கைத்தொழில்களில் ஈடுபடும் நிறுவனங்களுடன் கடந்தவாரம் பேச்சு நடத்தியிருந்த திறைசேரியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, உள்நாட்டு உற்பத்தித் துறையை மேம்படுத்தும் வகையில் உள்நாட்டு உற்பத்திகளை பெற்றுக்கொள்ள அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் வெளியிலிருந்து விலை மனுக்கள் கோருவதைத் தவிர்த்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

ஆனாலும், இராணுவத்தினருக்கான சீருடைகளை வழங்கும் உள்நாட்டு நிறுவனமொன்று, இலங்கையில் இராணுவத்தினருக்கு சீருடைகளை வழங்கும் ஒரே நிறுவனமான தனது உற்பத்திகளைப் பெற்றுக்கொள்ள இலங்கைப் பாதுகாப்பமைச்சு மறுத்து வருவதைச் சுட்டிக்காட்டியுள்ளது.

இதுபற்றி திறைசேரியின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் தலைமைக் கணக்காளரிடம் வினவியபோது, மேற்படி குண்டுகள் துளைக்காத ஆடைகளை இந்தியாவிடமிருந்து இறக்குமதி செய்யத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் விவகாரம் அம்பலத்துக்கு வந்தது.

குண்டுகள் துளைக்காத சீருடைகளைக் கொள்வனவு செய்வதற்கான கேள்வி மனுவின் 50 வீதம் இந்தியாவிற்கு வழங்கப்பட்டிருந்தபோதும், மிகுதி 50 வீதத்தை கேள்வி மனுகோராமல் உள்நாட்டு நிறுவனத்திற்கு வழங்குமாறு திறைசேரியின் செயலாளர் அப்போது வேண்டியிருந்தார். எனினும், பாதுகாப்பு அமைச்சு அது தொடர்பில் எதுவித பதிலையும் வெளியிடவில்லையென்று கூறப்படுகிறது.

ஏற்கனவே, ஹெய்ட்டி நாட்டுக்கு சென்ற ஐக்கிய நாடுகள் அமைதிப்படையினருடன் இணைந்துகொண்ட இலங்கை இராணுவச் சிப்பாய்களுக்கு குண்டுகள் துளைக்காத 750 ஆடைகளை இந்த உள்நாட்டு நிறுவனம் தயாரித்து வழங்கியிருந்தது.

எனவே, இவற்றை வழங்கும் ஒரேயொரு உள்நாட்டு நிறுவனத்திடமிருந்து குறைந்த பட்சம் ஆயிரம் குண்டுகள் துளைக்காத சீருடைகள் மற்றும் ஆயிரம் பாதுகாப்பு கவசங்களையாவது கொள்வனவு செய்யுமாறு திறைசேரியின் செயலாளர் பாதுகாப்பமைச்சிற்கு அறிவுறுத்திய போதும், இதுவரை பாதுகாப்பு அமைச்சு அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லையெனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்தியக்கடன் திட்டத்தின் கீழ் பெருமளவான நிதி ஒதுக்கப்பட்டு, குண்டுகள் துளைக்காத சீருடைகளைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டு பல மாதகாலமாகியும் அவற்றை இந்திய நிறுவனம் இன்னமும் வழங்கவில்லையென பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

(எ-க)

யா /சாவகச்சேரி றோ.க.த.க பாடசாலையின் அதிபர்

**திரு.க.தம்பிமுத்து அவர்களின்**

## அகவை அறுபதின் நிறைவின் ஞாபகார்த்தம்



**திரு.கந்தையா தம்பிமுத்து**

(Maths Trd.S.L.T.S. - I)

அவர்கள் 01.01.1996இல் இருந்து எட்டாண்டுகால அளப்பரிய சேவையை இப்பாடசாலைக்கு வழங்கி இன்று (2005.03.08) செவ்வாய்க்கிழமை அகவை அறுபதை நிறைவு செய்து, தமது கல்விச் சேவையில் இருந்து ஓய்வுபெறும் நல்லாசானும் சிறந்த சமூகசேவையாளனுமாகிய திரு.க.தம்பிமுத்து அவர்களைப் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ வாழ்த்துவதுடன், என்றென்றும் இறையருள் கிடைக்கவும் மனமாரப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/சாவ.றோ.க.த.க.பா.
சாவகச்சேரி, தென்மராட்சி.

(சி.41359)(21-18-34)





நீங்களும் இப்படித்தான் நினைக்கிறீர்களா?
திருமணம் ஆனதும், உங்களுக்கு விருப்பமானதை
விரும்பிய நேரத்தில் உங்கள் துணையின்
விருப்பமில்லாமல் செய்யலாம் என்று
நினைக்கிறீர்களா? அவளுடைய விருப்பமில்லாமல்
நீங்கள் அடையும் பாலியல் திருப்தி,
அவளுக்கு நரகவேதனையாக அமையும் என்பதை
நினைத்துப் பார்க்கிறீர்களா?

திருமணமானாலும் பாலுறவுப் பலாத்காரம்
பாரதூரமான குற்றம் என்பதை அறிவீர்களா?

**நீங்கள் சிந்திக்க வேண்டிய தருணம் இதுவே!**
**வாழ்க்கை இனிமையாக வாழ்வதற்கே!**
**சித்திரவதைப் படுவதற்கு அல்ல!**

**உங்களால் மற்றொருவர் மனம்**
**சித்திரவதைப் பட்டுத் துன்பப்படுகிறதா என்பதை**
**யோசித்துப் பாருங்கள்.**
**வன்முறைகள் இல்லாத இல்லத்தை உருவாக்க**
**நீங்களும் உதவுங்கள்**

**இல்லத்து வன்முறைகளை**
**இல்லாதொழிக்க ஒன்றிணைவோம்.**

THOMPSON ASSOCIATES

**எச்சரிக்கை: திருமணம் என்பது பாலியல் துன்புறுத்தலுக்கான அனுமதிப்பத்திரம் அல்ல.**

நாம் இணைந்து
பெண்கள் மீதான வன்முறைகளை ஒழிப்போம்

பெண்கள் மீதான
வன்முறைகளை இல்லாதொழிக்கும்
இலங்கைப் பிரசாரத்திட்டம்
த.பெ. 2006, கொழும்பு.

## இரத்த வங்கிச் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பம்

வட்டக்கச்சி,மார்ச்8

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் இரத்த வங்கியின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனினும், அதிகளவு இரத்தத்தினைச் சேமித்து வைக்கக்கூடிய வசதிகளும் தொற்றுநோய் பரிசோதனை செய்யும் வசதியும் இன்மையால் இரத்தத்தை சேமிக்க முடியாதுள்ளது என்றும்-

இவ்விடயம் தொடர்பாக தேசிய இரத்த மாற்று பிரயோகச்சேவை நிலையத்துக்குப் பல தடவைகள் முறையிட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என வைத்தியசாலையின் இரத்தவங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-405-204)




## வாகன ஓட்டுநர் பயிற்சிக்கு விண்ணப்பம்

புதுக்குடியிருப்பு,மார்ச்8

முல்லைத்தீவுக் கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவு நடைமுறைப்படுத்தும் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறியில் இணைந்துகொள்ள விரும்புபவர்கள் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதிபரிடம் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம் என வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் அறிவித்துள்ளார். (எ-353-204)

# வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் வாகனப் போக்குவரத்துக் குறித்து கருத்தரங்குகள்

கிளிநொச்சி,மார்ச்8

தமிழீழக் காவல்துறையினர் வாகனப் போக்குவரத்து மற்றும் அதனால் ஏற்படும் விபத்துக்கள தொடர்பான கருத்தரங்குகளை வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் நடத்தி வருகின்றனர்.

அந்த வகையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மேற்படி மாவட்டங்களின் பல்வேறு இடங்களிலும் நடைபெற்ற கலந்துரையாடல்களின் தொகுப்பு விவரம் வருமாறு:-

### புதுக்குடியிருப்பு

புதுக்குடியிருப்பு சிவசுப்பிரமணிய வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில், தமிழீழ காவல்துறையின் நடுவப்பணியகக் கண்காணிப்பாளர் சி.மாதவன், புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் பிறையாளன், பாடசாலையின் அதிபர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். விபத்துத் தடுப்புத் தொடர்பான கருத்துக்களைப் புதுக்குடியிருப்பு காவல் பணிமனைப் பொறுப்பாளர் பரிசோதகர் சு.கிருபாகரனும், உபபரிசோதகர் சி.பிரதீப்குமாரும் வழங்கினர்.

### முல்லைத்தீவு

முல்லைத்தீவுப் பகுதியில், முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் தமிழீழ காவல்துறையின் சீர்திருத்தப் பொறுப்பாளர் சொ.நரேன், முல்லை மாவட்டக் கல்விக்கழகப் பொறுப்பாளர் அறிவன்பன், கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.ஜெகநாதன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். தமிழீழ வீதிப் போக்குவரத்துச் சட்டம் தொடர்பான விளக்கங்களை முல்லைத்தீவுக் காவல் பணிமனைப் பொறுப்பாளர், உபபரிசோதகர் ஆகியோர் வழங்கினர்.

### முள்ளியவளை

முள்ளியவளைப் பகுதியில் நடைபெற்ற நிகழ்வில், குற்றப்புலனாய்வுப் பிரிவுக் கண்காணிப்பாளர் தே.கானகன், பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் முல்லைவீரன் ஆகியோர் மக்களுடன் கலந்துரையாடினர். 'விபத்து இல்லாத சாரத்தியம்' என்ற தலைப்பில் முள்ளியவளைக் காவல் பணிமனைப் பொறுப்பாளர் உப பரிசோதகர் கெ.சிவலிங்கம் கருத்துக்களை வழங்கினார்.

### மல்லாவி

மல்லாவிப் பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் மல்லாவிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் புனிதன், தனியார் போக்குவரத்துக் கழகத் தலைவர் மனோகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். அரசியல்துறைப் பிரதேசப் பொறுப்பாளரின் சிறப்புரையைத் தொடர்ந்து துணுக்காய் காவல் பணிமனைப் பொறுப்பாளர் ப.அருள்ஜோதீஸ்வரன் நிகழ்வில் கலந்து கொண்ட உந்துருளி சராதிகளுக்கான அறிவுறுத்தல்களை வழங்கினார்.

### கனகராயன்குளம்

இந்த நிகழ்வுகள் நடைபெற்ற சமகாலத்திலே வவுனியா மாவட்டத்தில் புலிகளால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலும் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. வவுனியா கனகராயன்குள மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாங்குளம் காவல் பணிமனைப் பொறுப்பாளர் மற்றும் உபபரிசோதகர் த.கமலசிறீஸ்கரன், குற்றப்புலனாய்வுப்பிரிவுப் பொறுபபாளர் உபபரிசோதகர் தி.பகீரதன் ஆகியோர் கலந்துகொண்டு பொதுமக்களுடனான சந்திப்பை மேற்கொண்டனர். ஏ-9 வீதியில் கடந்த காலங்களில் வீதிவிபத்துக்களினால் ஏற்பட்ட இழப்பு விவரங்கள் சுட்டிக்காட்டப்பட்டு விபத்துத தடுப்புத் தொடர்பான கருத்துக்கள் வழங்கப்பட்டன.

### நெடுங்கேணி

வவுனியா வடக்கு, நெடுங்கேணிப் பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் நெடுங்கேணிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ஜெயானந்தன், குளவிசுட்டான் வித்தியாலய அதிபர் சிவலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர். நெடுங்கேணி காவல் பணிமனைப் பொறுப்பாளர் மற்றும் உபபரிசோதகர் திரவியநாதன் விபத்துத்தடுப்புத் தொடர்பாகவும், உந்துருளி சாரதிகள் கடைப்பிடிக்க வேண்டிய வீதி ஒழுங்கு விதிகள் தொடர்பாகவும் கருத்துரைகளை வழங்கினர்.

இந்தக் கலந்துரையாடலில் ஆயிரம் பேர் வரையிலான உந்துருளிப் பாவனையாளர்கள் கலந்துகொண்டு பயனடைந்ததுடன், இப்படியான கலந்துரையாடல்களை அனைவரும் பயன்பெறும் வகையில் கிராம மட்டத்திலும் நடத்த வேண்டும் என தமிழீழ காவல்துறையினரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.-

என்று காவல்துறை விடுத்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-203)

# ஸ்கந்தபுரம் பஸ்தரிப்பிடம் சேதம்

ஸ்கந்தபுரம்,மார்ச்8

ஸ்கந்தபுரம் சந்தியிலுள்ள பஸ்தரிப்பிடம் சேதமடைந்து காணப்படுவதால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டி ஏற்படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்தியில் மாவீரர் ஒருவரின் ஞாபகார்த்தமாகப் பயணிகள் தரிப்பிடம் ஒன்று அமைக்கப்பட்டது. அது தற்போது சேதமடைந்து பயன்படுத்தமுடியாத நிலையில் உள்ளது.

இதனால் பயணிகள் தனியார் உணவகம் ஒன்றின் முன் பஸ்ஸுக்காகக் காத்து நிற்க வேண்டியுள்ளது. சேதமடைந்த இந்தப் பஸ்தரிப்பிடத்தைச் சீரமைத்துப் பயணிகளின் பாவனைக்குதவ சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை - கோணாவில், புதுமுறிப்பு, அக்கராயன் பிரதேசங்களிலும் பஸ்தரிப்பிடம் இல்லை. இதனால், இப்பகுதிகளிலும் பயணிகள பெருஞ்சிரமத்தை எதிர்நோக்குகின்றனர் எனச் சுட்டிக்காட்டப்படுகிறது. எனவே இது விவகாரத்தில் உரியவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-381-204)


பாழடைந்து காணப்படும் பஸ் தரிப்பிடம்.


உணவகத்திற்கு முன்பாகப் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் பயணிகள்

# தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் புதிய பயிற்சிகளுக்கு விண்ணப்பம்

வட்டக்கச்சி,மார்ச்8

கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் புதிய பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆறுமாத காலப் பயிற்சியைக் கொண்ட மரவேலை தொழில்நுட்பவியலாளர் பயிற்சி நெறி, கட்டுமான தொழில்நுட்பவியலாளர் பயிற்சிநெறி, மின்னொட்டு தொழில்நுட்பவியலாளர் பயிற்சிநெறி, அலுமினியம் பொருத்துதல் பயிற்சிநெறி, உழவு இயந்திரம் பொருத்துதல் பயிற்சி நெறி, நீர்க் குழாய் பொருத்துதல் பயிற்சி நெறி, முச்சக்கர வண்டி திருத்துதல் பயிற்சிநெறி ஆகிய பயிற்சிநெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் பயிற்சி நெறிக் காலத்தின் போது ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் நாளை மறுதினத்திற்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்பிவைகலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இப் பயிற்சி நெறியைத் தொடர விரும்பும் மாணவர்களின் வசதிகருதி பூநகரி, கண்டாவளை, பளை, ஆனைவிழுந்தான் ஆகிய பிரதேசங்களிலும் இந்தப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் கூறப்பட்டது. (எ-405-204)

## பாடசாலை வளாகம் சிரமதானம் மூலம் துப்புரவு

ஒட்டுசுட்டான்,மார்ச்8

கற்சிலைமடு கிராமசேவை அலுவலர் பிரிவிலுள்ள மக்கள், கற்சிலைமடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வளாகத்தை, உலர் உணவுத் திட்டத்தின் கீழ் சிரமதானம் செய்து வருகின்றனர்.

இந்த வேலைத்திட்டம் கற்சிலைமடு கிராம சேவை அலுவலர் சீ.ஆனந்தராசா தலைமையில் நடைபெற்று வருகிறது. (எ-204-341)

## முல்லைத்தீவு மாணவருக்கு பாடக்குறிப்புக்கள்

கிளிநொச்சி,மார்ச்8

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மகாவித்தியாலய உயர்வகுப்பு மாணவர்களுக்குத் தமிழீழ மாணவர் அமைப்பினர் பாடக் குறிப்புக்களைப் பிரதிசெய்து கையளித்துள்ளனர்.

கடந்த 28ஆம் திகதி நடைபெற்ற இந் நிகழ்வில், முல்லைமாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் மயூரன் வித்தியாலய அதிபா மோகன ஜீவனிடம் கையளித்தார்.

இப்பாடக் குறிப்புப் பிரதிகளை 'யுனிசெவ்' அமைப்பின் அனுசரனையுடன் தமிழீழ மாணவர் அமைப்பினர் தயாரித்துக் கையளித்தனர். (எ-204)

## சிறப்புற நடைபெற்ற மெய்வன்மைப் போட்டி

வட்டக்கச்சி,மார்ச்8

வட்டக்கச்சி மகாவித்தியாலய மாணவர்களின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

பாடசாலை அதிபர் சி.சந்திரராஜா தலைமையில் மாணவர்களின் அணிநடை வகுப்பினைத் தொடர்ந்து விளையாட்டுக்கள் ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் கிளிநொச்சி கல்வி வலய ஆங்கிலப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.தனராஜா, வட்டக்கச்சி பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சுடர் ஆகியோரின் சிறப்புரைகளும் நடைபெற்றன.

தொடர்ந்து விளையாட்டுக்களில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் கேடயங்களும் வழங்கப்பட்டன. (எ-405-204)

# தொழில்நுட்பக் கல்வி நிறுவனப் பயிற்சி முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் விஸ்தரிப்பு

வட்டக்கச்சி,மார்ச்8

கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தால் நடத்தப்படும் பயிற்சி நெறிகள் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் விஸ்தரிக்கப் பட்டுள்ளன.

இத்திட்டத்தின் ஒரு கட்டமாக கடந்த 28ஆம் திகதி போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் வள்ளிபுனத்தில் மரவேலைப் பயிற்சி நெறியும் கைவேலியில் மேசன் பயிற்சி நெறியும ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனைவிட, வாழ்க்கைத் தேர்ச்சி, முதலுதவி, பால்நிலை அபிவிருத்திப் பாதுகாப்பு, சுகாதாரம் போன்ற விடயங்கள் தொடர்பான முன் பயிற்சிகளும் அத்துறை சார்ந்தவர்களால் வழங்கப்பட்டு வருகின்றன என்றும்-

இப்பயிற்சியில் இணைந்து கற்பதற்கு இளைஞர், யுவதியினர் ஆர்வங்காட்டி வருகின்றனர் என்றும் -

தொழில்நுட்பக் கல்வி நிறுவன அதிபர் சி.சோதிமுருகேசு தெரிவித்தார். (எ-405-204)


வடமராட்சி கிழக்கு உடுத்துறை சுமைதாங்கிக் கிராமத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் 18 அடி நீளமும் 12 அடி அகலமும் உடைய 350 வீடுகளை அமைத்து வருகின்றனர். அவர்களால் அமைக்கப்பட்டு வரும் வீடுகளைப் படத்தில் காணலாம்.

*(படம்:பரந்தன் செய்தியாளர்)*

## கிளிநொச்சியில் நடமாடும் இரத்ததான முகாம்

வட்டக்கச்சி,மார்ச்8

யாழ்.போதனா வைத்திசாலையின் இரத்த வங்கியினர் ஈ.எஸ்.பேரம்பலம் சகநிறுவனத்தினர் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட வைத்திசாலை இரத்த வங்கியினரின் ஏற்பாட்டில் நடமாடும் இரத்ததான முகாம் ஒன்றைக் கடந்த சனியன்று கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்ப கல்லூரியில் நடத்தினர்.

இங்கு தொழில்நுட்பக் கல்லூரியின் அலுவலர்கள், விரிவுரையாளர்கள் மாணவர்கள் உட்படப் பலர் இரத்ததானம் வழங்கினர். (எ-405-204)

## சுண்ணாவில் பாடசாலைக்கு பாய்கள் அன்பளிப்பு

கிளிநொச்சி,மார்ச்8

கிளிநொச்சி கல்வி வலயத்துக்குட்பட்ட சுண்ணாவில் அ.த.க. பாடசாலைக்குத் தமிழீழ மாணவர் அமைப்பு நில்விரிப்புகள் மற்றும் பாய்களைக் கையளித்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் கடந்த வியாழக்கிழமை இந்நிகழ்வு இடம்பெற்றது.

இப்பொருள்களைக் கிளிநொச்சி தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன்பன் கையளித்தார்.

மேற்படி பாடசாலை தளபாட வசதிகள் எதுவும் அற்ற நிலையில் இயங்கி வருகின்றது என்றும்-

மாணவர்கள் தரையில் அமர்ந்திருந்து கற்கும் பொருட்டு இப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (எ-204)

அரச அதிபருக்கு மீனவர் சமாசம் மகஜர்

# தொண்டைமானாறு முதல் பருத்தித்துறை வரை வான்குழிகளைப் புனரமைக்கக் கோரிக்கை

## இல்லையேல் போராட்டம் எனவும் எச்சரிக்கை

வடமராட்சி,மார்ச்8

தொண்டைமானாறு முதல் பருத்தித்துறை முனைப் பிரதேசம் வரையான கடற்கரைப் பிரதேசங்களில் வான்களைப் புனரமைத்து கடல் அணை அமைக்கப்படவேண்டும் என்று கோரி வடமராட்சி வடக்கு, வலிகாமம் வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசங்கள் யாழ்.அரச அதிபருக்கென மகஜர் ஒன்றை சனிக்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலகத்திடம் கையளித்தனர். இல்லையேல் போராட்டம் நடத்தப் போவதாகவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

பாக்கு நீரிணைக் கடலான தொண்டைமானாறு முதல் முனைப்பிரதேசம் வரையிலான கடற்கரைப் பிரதேசங்கள் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டமையால் அப்பிரதேசத்தில், 'சேவாலங்கா' நிறுவன உதவியுடன் வான் தோண்டல கடல் அணை அமைக்க முற்பட்டவேளை சுப்பர்மடம் கடற்கரைப்பகுதியில் வைத்து படையினர் தடுத்து நிறுத்தியிருந்தனர்.

இரண்டு அடிக்கு மேல் கடல் அணை அமைக்கக்கூடாது. பிற்பகல் 4 மணிக்குப் பின புனரமைப்புப் பணியில் எவரும் ஈடுபடக்கூடாது. ஒவ்வொரு சங்கத்தினரும் இரண்டு நாள்களுக்கு மேல் புனரமைப்புப் பணியில் ஈடுபடக்கூடாது என படையினர் நிபந்தனைகளை விதித்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து இந்தச் சமாசங்கள் புலோலிமேற்கு எரிஞ்சம்மன் கோயிலடியில் ஒன்றுகூடி சில தீர்மானங்களை எடுத்திருந்தனர். அத்தீர்மானங்களே அரச அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டன அத்தீர்மானங்கள் வருமாறு:-

கரையிலிருந்து அணையை 4 அடிக்கு உயர்த்திக் கட்டுதல், தொண்டைமானாறு முதல் முனைவரையும் உள்ள வான்களை புனரமைத்தல், சுனாமியால் சிதைந்த முருகைக்கற்களை முன்பு இருந்த அணைக்கட்டிற்கு எடுத்துப்போடல், நாவாய்க்கட்டு வானுக்கு கரையாகப் போடப்படும் கட்டு கரையோரப் பாதுகாப்புக்காக குறித்த கரையை அண்டிப் போடல், இப்பிரதேசத்தை ஆழமாக்கல் என்பனவே அந்தத்தீர்மானங்கள்.

வான் புனரமைப்பு, கடல் புனரமைப்பு வேலைகள் நடைபெறும்போது படையினர் பார்வையிடலாம். ஆனால், நிர்வாகம் செலுத்தக்கூடாது என்றும் எமது படகு பெரும் பாதையை படையினர் வரையறுக்கக்கூடாது, படகுகட்டும் இடங்களை படையினர் கட்டுப்படுத்தக்கூடாது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

சமாசங்களின் இக்கூட்டத்தின் போது வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கசமாசத் தலைவர் கடான்பொஸ்கோ வடமாரட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கசமாசத் தலைவர் பயஸ்லோகதாஸ், சமாசங்களின் இணைப்பாளர் க.சூரியகுமாரன் கடற்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பழகன், சுனாமி அனர்த்த செயலணிக் குழுப் பொறுப்பாளர்கள் பாலையா ஆகியோர் கலந்துகொண்டனர். (த-173)

# சகல தொண்டர் ஆசிரியர்களுக்கும் மார்ச் 31இற்கு முன் நிரந்தர நியமனம்

## நடவடிக்கை எடுக்க ஆளுநர்களுக்கு ஜனாதிபதி உத்தரவு

காரைதீவு,மார்ச்8

நாட்டிலுள்ள கஷ்ட, அதிகஷ்டப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர்கள் பற்றாக்குறை நீக்குமுகமாக சகல தொண்டர் ஆசிரியர்களையும் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சகல மாகாண ஆளுநர்களுக்கும் அவசர உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் 31இற்குள் அடிப்படைத் தகுதியுள்ள சகல தொண்டர் ஆசிரியர்களையும் இலங்கை ஆசிரியர் சேவை தரம் 3 என்ற வகுதிக்குள் ஆட்சேர்ப்பு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருப்பதாக தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் த.மகாசிவம் கூறினார்.

இதில் எண்ணிக்கை வரம்பு கிடையாது. க.பொ.த (உ/த) தரத்தில் சித்தி, பல்கலைக் கழக அனுமதிக்கு 'ஆம்' என்ற தகுதியிருத்தல், 2004-01-01வரை தொடர்ச்சியான 3வருட தொண்டர் சேவையிருத்தல் என்பனவே அடிப்படைத் தகுதிகளாகும்.

ஜனாதிபதி அனுப்பியுள்ள அவசர உத்தரவின் பிரதிகள் மாகாணப் பிரதம செயலாளர்களுக்கும் கல்விச் செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை -

143 இடைவிட்ட தொண்டராசிரியர்களுக்கான நியமனம் இவ்வாரம் வழங்கப்படலாமெனத் தெரிகிறது. புதிய உத்தரவுப்படி நாட்டில் 5000 இற்கும் மேற்பட்டோர் ஆசிரியர் சேவைக்குள் வர வாய்ப்பிருக்கிறது. (ப-84)

பிரதேச செயலர் பிரிவுகள் தோறும்

# இரண்டு மையக் கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படும்

வலி.தெற்கு,மார்ச்8

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள பிரதேச செயலகங்கள் ஒவ்வொன்றில் இருந்தும் இரண்டு மையக் கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

'நியாப்' திட்டத்தின் கீழ் மையக் கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பல அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கடந்தவாரம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தின்போது மையக் கிராமங்கள் தெரிவு பற்றி ஆராயப்பட்டது.

குறிப்பிட்ட கிராமத்தில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை, விவசாயிகளின் எண்ணிக்கை, விவசாய நிலத்தின் அளவு, பயிர் செய்கை பண்ணப்படும் நிலப்பரப்பு, சுற்றாடல் பற்றிய விவரங்களை முன்னிலைப்படுத்தி இக் கிராமங்கள் தெரிவுசெய்யப்படவுள்ளன.

வலி.தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் முன்னுரிமை அடிப்படையில் மையக் கிராமங்கள் தெரிவுக்காக. குப்பிளான் தெற்கு, சங்குவேலி, ஈவினை, உடுவில் தெற்கு, புன்னாலைக்கட்டுவன் தெற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகள் சிபார்சு செய்யப்பட்டு மாவட்ட செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ப-152)

### சிறப்புற நடைபெற்ற விடுதித் திறப்பு விழா

வலி.தென்மேற்கு,மார்ச்8

வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலையில் புதிதாக நிறுவப்பட்ட வைத்திய அதிகாரியின் உத்தியோகபூர்வ விடுதியின் திறப்பு விழா கடந்த 28ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் சிறப்பாக நடைபெற்றது.

வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி ச.தம்பிராசா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளர் டாக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளை நாடாவை வெட்டிச் சம்பிரதாய முறைப்படி விடுதிக் கட்டடத்தைத் திறந்துவைத்தார்.

இவ்வைபவத்தில் யாழ்.சுகாதார சேவை முன்னாள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் இ.தெய்வேந்திரன், சுகாதாரத் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் சி.சிவலிங்கம், யாழ். பிராந்திய மலேரியா தடுப்பு இயக்க வைத்திய அதிகாரி டாக்டர் கே.ரி.சிவபாதம், வட்டுக் கோட்டை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் இப்பகுதி அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், வைத்திசாலை அபிவிருத்திச் சபையினர் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டனர். (எ-135)


### இந்தியத் தூதர் எழுதிய கவிதை நூல் வெளியீடு

கொழும்பு,மார்ச்8

இலங்கையிலுள்ள இந்தியத் தூதர் நிருபமா மேனன் ராவ் எழுதிய கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை 9ஆம் திகதி மாலை 5 மணிக்கு கொழும்பு இன்டிபென்டன் அவனியூவிலுள்ள தேசிய நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

நிருபமா மேனன் ராவ் எழுதிய 'றெயின் றைகிங்' என்ற தலைப்பிலான ஆங்கிலக் கவிதை நூல் விஜிதா யாப்பா புத்தசாலையின் ஆதரவில் வெளியிடப்படுகின்றது. (ப)

# கல்விச்சாலைக் காட்சிகள்



சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை பரிசில் நாள் நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன. இந்த நிகழ்வினை தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதனையும் அருகில் அயற் பாடசாலை அதிபர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். *(படம் : தென்மராட்சிச் செய்தியாளர்)*



யாழ். மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாண்வர்களின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. நிகழ்வில் ஆரம்பப் பிரிவுத் தலைவி செல்வி த.இராமலிங்கம் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். கல்லூரி அதிபர் க.இராசதுரை, புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் வண.பிதா ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் மற்றும் விருந்தினர்களும் படத்தில் உள்ளனர். (எ)



யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற தரம் I மாணவர்களுக்கான கால்கோள்விழாவின் போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கலாபூஷணம் தாவடியூர் தேவார இசைமணி கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் உரையாற்றுவதையும் மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். பாடசாலை அதிபர் திருமதி தனரஞ்சினி துரைசிங்கமும் படத்தில் உள்ளார். (எ)



மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் பாடசாலையில் இடம்பெற்ற ஒளிவிழா நிகழ்வில் கலந்துகொண்ட புனித சவேரியார் குருத்துவ மாணவ விரிவுரையாளர் வண.பிதா பி.ஜே.ஜெயரட்ணம், மானிப்பாய் உதவிப் பங்குத்தந்தை எம்.ஜே.அருள்தாசன் ஆகியோர் பாடசாலை அதிபர் அருட்சகோதரி அழகேஸ்வரி செபஸ்ரியாம்பிள்ளை மற்றும் ஆசிரியர்களால் மாலை சூட்டி வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம். *(படம்: நவாலிச் செய்தியாளர்)*

# எங்கள் பெண்கள் என்ன சொல்கிறார்கள்...?

## நாம் உலகப் பெண்களுக்காகக் குரல் கொடுப்போம் உலகப் பெண்கள் எமக்காகக் குரல் கொடுக்க வேண்டும்



**திருமதி பத்மினி சிதம்பரநாதன்**
(யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்)

மகளிர் தினம் இலங்கையில் நினைவு கூரத் தொடங்கி இன்றுடன் 25 வருடங்களாகிவிட்டது. ஆயினும், பெண்கள் மத்தியல் ஏற்பட்ட விழிப்புணர்வு திருப்திகரமாக இல்லை என்றாலும் பல முன்னேற்றங்களும் நம் பெண்களிடம் ஏற்பட்டுத்தான் உள்ளன.

பெண்கள் மாற்றம் பெறவேண்டுமானால் இருவழிகளில் தயாராக வேண்டும். புறரீதியாகவெனில் பொருளாதாரம், சமூகநிலை என்பவற்றில் தன்னைத் தயார்படுத்தவேண்டும். அகரீதியாகவெனில் சமூகத்தின் அழுத்தங்கள், குடும்பத்தின் அழுத்தங்கள் என இரட்டைச் சுமையைத் தாங்கக் கூடிய வலிமை தயார்படுத்தலில் இருக்கவேண்டும். முகாமைத்துவ ரீதியாகப் பெண்கள் வளரவேண்டும்.

இன்றைய நாளில் ஒவ்வொரு பெண்களும் நாங்கள் இன்னும் என்ன செய்யவேண்டும் என்ற கேள்வியுடன் தேசத்தின் நிர்மாணப் பணிக்குத் தயாராகும் நாளாக இருக்கவேண்டும்.

இன்று 'சர்வதேச' மகளிர் தினம். சர்வதேச - உலகப் பெண்கள் அனைவரும் ஒன்றாகக் கரம் கோர்க்கும் நாள். உலகப் பெண்கள் அனைவரினதும் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்து அதன் மூலம் அவர்களுக்கும் எங்களுக்கும் விடுதலை கிடைக்கவேண்டும் என்று கரம் கோர்த்து நிற்கும் நாள்.

இனரீதியாக இங்கு நடக்கும் பிரச்சினை தீர்ந்தால் தான் எமக்கு- பெண்களுக்கு - விடிவு கிடைக்கும். அதற்கு உலகப் பெண்கள் அனைவரும் ஒன்றிணைந்து எமக்காகக் குரல் கொடுக்க வேண்டும். நாமும் உலகப் பெண்களுக்காகக் குரல் கொடுக்கவேண்டும். செயற்பாட்டு ரீதியாக நாம் முன்னின்றுசெயற்படவேண்டும்.

இங்கு பெண்கள் பண்பாட்டு மையத்தின் உயிர்ப்பூக்குனர்கள் கிராமங்கள் தோறும் சென்று அங்குள்ள பெண்களிடம் அவர்களின் பிரச்சினைகள் பற்றிக் கலந்தாராய்ந்து அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றியும் ஆலோசிக்கின்றோம். அதனூடாகப் பல பெண்கள் தம் பிரச்சினைகளை வெளிப்படுத்தி உள ஆற்றுப்படுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஒவ்வொரு பெண்களையும் தன்னம்பிக்கையின்றி இந்தச் சமூகமே வளர்த்துள்ளது. பெற்றோர், சகோதரர்கள் எனப் பெண்களைத் தம் கட்டுக்குள் வைத்திருக்கப் பாடுபடுகின்றார்கள். இதை மாற்றுமுறைக்கு உட்படுத்தவேண்டும்.

இவை தவிரப் பெண்கள் பொருளாதாரத்தால் அடக்கப்படுவதிலிருந்தும் விடுபடவேண்டும். தாம் சுயமாக முன்னின்று தமது பொருளாதாரத்தை வளப்படுத்த வேண்டும்.

இதற்கென எமது பெண்கள் பண்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் 5 கோட்டங்களிலும் கைவினைப் பயிற்சி நிலையங்களை ஆரம்பித்து தலா 20 மாணவர்களுக்குக் கற்பித்து வருகின்றோம். இதன் மூலம் பெண்கள் சுய பொருளாதாரத்தில் வளரவேண்டும். அதனூடாகத் தமக்கான விடுதலையைப் பெற்றுக்கொள்ளவேண்டும். ◆

## சர்வதேச மகளிர் தினம்

## ஆளுமையை வெளிப்படுத்துவதன் மூலம் எமக்குரிய இடத்தை எடுக்க வேண்டும்



**கலைவிழி**
(யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்)

பெண்கள் முன்னேற்றம் அடைவதற்குத் தமது ஆளுமையை வெளிப்படுத்துதல் வேண்டும். ஆளுமையை வெளிப்படுத்துவதன் மூலம் எங்களுக்குரிய இடத்தை நாங்களே எடுத்துக் கொள்ளவேண்டும். ஆளுமையைப் பெறுவதற்கு நிறைய வாசிக்க வேண்டும்; தேடவேண்டும்.

பெண்கள் அன்று தொடக்கம் இன்று வரை போராடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். விடுதலைக்காகப் போராடுவதை நாம் போராட்டம் என்று கூறவில்லை. உணவு, உடை, உயிர்வாழ்தல் போன்ற ஒவ்வொரு விடயத்திலும் பெண் போராடிக் கொண்டுதான் இருக்கிறாள். இந்தப் பெண்கள் குழுவாக இருந்து ஒவ்வொரு குடும்பத்திற்குள்ளும் சென்றபின் அவர்களுக்குக் 'கற்பு' என்ற பெயரில் ஒரு கட்டைப் போட்டுச் சட்டம் விதித்தனர்.

ஆனால், தற்போது சில தேவைகள் ஏற்படும் போது சமூகம் அவளுக்கெனப் போடப்பட்ட சில கட்டுகளை மட்டும் அவிழ்த்து விட்டுள்ளது. உதாரணமாக ஆரம்ப காலங்களில் பெண்கள் சைக்கிள் ஓடக்கூடாது; வேலைக்குப் போகக் கூடாது என்ற கட்டுகளைப் போட்ட சமூகம் இன்றைய பொருளாதாரத் தேவைகள் காரணமாக அவற்றை ஏற்றுக்கொள்கின்றது.

பெண் ஒருத்தி தனது குடும்பத்திற்காக இறக்கும் வரை போராடிக்கொண்டே இருக்கின்றாள். அந்த நிலையில் பெண்ணுக்குள்ளும் மனிதம், மனது உள்ளது என்று எவராவது அவளை மதித்தால் அந்த நிமிடமே பெண் வெற்றியடைந்து விடுகின்றாள்.

சமூகத்தில் எமக்கான ஓர் இடம் தானாகக் கிடைக்க வேண்டும். சமூகம் தனது தேவைக்கேற்ப பெண்ணின் கட்டுகளைத் தளர்த்தும் போது, அவற்றைப் பயன்படுத்த வேண்டும். பொருளாதாரம் ஒரு நாட்டின் நிலையைத் தீர்மானிக்கின்றது. சமூகத்தில் உள்ள ஒவ்வொரு பெண்ணும் தனது குடும்பத்திற்கான பொருளாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் போது அவளை அச்சமூகமே ஏற்றுக் கொள்கின்றது. இந்நிலைகளில் பெண்களின் ஆளுமைகள் வெளிக்கொண்டு வரப்படுகின்றன.

இந்த மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் பெண்களுக்குப் பயன்தரக் கூடிய சட்டங்களை வெளிப்படுத்தவுள்ளோம். கிராம மட்டத்தில் இருந்து இந்தச் சட்ட முறைகளை அறிமுகம் செய்யவுள்ளோம். ◆

## எமக்குரிய இடத்தை நாமே பெற்றுக்கொள்ள வேண்டும்

**நடேசமூர்த்தி பமிலா** (பாடசாலை மாணவி)

பெண்கள் முன்னேற்றம் அடைவதற்கு நிறைய வழிகள் இருக்கின்றபோதிலும் அவர்கள் அதுபற்றிச் சிந்திப்பதேயில்லை. ஏனோதானோ என்று சோம்போறிகளாகச் சில பெண்கள் இருந்து விடுகின்றார்கள். அவ்வாறு இருந்துவிட்டு எங்களுக்குச் சுதந்திரம் கிடைக்கவில்லை, சமவுரிமை கிடைக்கவில்லை என்று கூறுகின்றார்கள்.

சுதந்திரம், பெண்உரிமை என்பது பிறரால் எமக்குத் தரப்படவேண்டியவை அல்ல. அவற்றை நாமே பெற்றுக்கொள்ள வேண்டும். எங்களுக்குரிய இடத்தை எங்களுக்குரிய அந்தஸ்தை நாமே பெற்றுக்கொள்ள வேண்டும்.

எந்தத் துறையானாலும் எங்களாலும் செயற்படமுடியும், சாதிக்க முடியும் என்று உறுதி பூண்டு நடக்க வேண்டும். ஆரம்ப காலங்களில் பெண் என்பவள் இவ்வாறுதான் இருக்க வேண்டும் என்று போடப்பட்ட கட்டுகளுக்குள் இருந்து வெளியே வந்து செயலாற்ற வேண்டும். அந்த நிலையிலும் நாம் எமது பண்பாட்டுடன் செயற்படவேண்டும்.

எங்களது பண்பாடு, கலாசாரத்துடன் எமக்குரிய உரிமையை நாம் பெற்றுக்கொள்வோமேயானால், அந்த இடத்தில் எமக்கான பூரணமான சுதந்திரம், உரிமை கிடைத்துவிட்டது என்று நாம் எண்ணுவதற்குத் தயங்கவேண்டிய அவசியம் இல்லை.

இன்று கிட்டத்தட்ட எல்லாத்துறைகளிலும் பெண்கள் தமது காலை ஊன்றி விட்டார்கள். தொடர்ந்தும் அவர்கள் தமது திறன்களை வெளிப்படுத்துவதில் முன்நிற்பார்களேயானால் நிச்சயமாகப் பெண்களுக்கென்றொரு எதிர்காலம் உண்டு; உரிமை உண்டு. அதை யாராலும் மாற்றமுடியாது. ◆

## மகளிர் தினத்தைச் சாதனையின் நாளாக மாற்றவேண்டும்



**கலாநிதி**
**திருமதி மனோன்மணி சண்முகதாஸ்**

இன்று உலக ரீதியில் சர்வதேச மகளிர் தினம். ஆனாலும், எங்கள் நாட்டில் பெண்களுக்குக் குறிப்பாகத் தமிழ்ப் பெண்களுக்கு இந்தத் தினத்தில் என்ன நன்மை விளைந்தது; அவர்களுக்குள் என்ன முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்பதை நாம் ஆராயவேண்டும்.

ஒரு குறிப்பிட்ட நாளில் மகளிர் தினத்தைக் கொண்டாடிவிட்டுப் போவதில் எவ்வித பயனும் இல்லை. இந்த நாளை நாம் சாதனையின் நாளாக மாற்றவேண்டும். எமது பெண்களின் தேவைகளை இனங்கண்டு பகுத்தாய்ந்து அதற்கு வேண்டிய உடனடித் திட்டங்களை வகுத்துச் சாதனையாக மாற்றவேண்டும்.

இதற்கு இப்பொழுது நல்லதொரு சந்தர்ப்பத்தை இயற்கை எமக்குத் தந்துள்ளது. சுனாமியால் பாதிப்படைந்த பெண்களைக் குறிப்பாகக் குடும்பத் தலைமைத்துவத்தை ஏற்கும் பெண்களுக்கான திட்டத்தை நாம் உருவாக்க வேண்டும்.

இந்த இடத்தில் எனது மனதில் உள்ள திட்டத்தை விவரிக்கலாம் என்று நினைக்கின்றேன்.

குடும்பத் தலைமைத்துவத்தை பெண்கள் வகிக்கும் குடும்பங்களுக்கென்று முன்னேற்றகரமானதும் பாதுகாப்பானதுமான ஓர் (புது) குடியிருப்பை உருவாக்க வேண்டும். இந்தக் குடியிருப்பை அமைக்கும் திட்டத்திற்கு பல்வேறு பின்புலங்களிலும் வாழும் ஆற்றல் மிக்க பெண்கள் - வைத்தியர், அமைப்புத் தலைவர், கல்வியலாளர் - ஒன்றாக இணைந்து செயற்படவேண்டும்.

இந்தக் குடியிருப்பில் அந்தக் குடும்பங்களைக் குடியமர்த்தி அவர்களுக்கென ஒரு சமூகக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும். அதாவது எமது பண்பாட்டுத் தளங்களில் எவ்விதத்திலும் மாற்றம் ஏற்படுத்தாது அவர்களுக்கு வேண்டிய பொருளாதாரத்தை அவர்களே தேடிக் கொள்ளத் தக்க வகையில் சுய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இவை தவிர போக்குவரத்து, வைத்தியம், பொதுமண்டபம் போன்ற வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்து, பொறுப்புக்களை ஏற்று வழிநடத்தக் கூடிய பண்புகளை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு பல்வேறு திட்டங்களுடன் அமைக்கப்படும் அந்தக் குடியிருப்புகளுக்குப் பல்வேறு கொடையாளர்களின் உதவிகளும் வேண்டியுள்ளது.

தேங்கி நிற்கும் வளங்களை இதற்கென நாம் பயன்படுத்த வேண்டும். அதாவது, ஆலயங்களுக்கும் தர்மகாரியங்களுக்கும் உதவும் நல்லன்பர்கள் இவ்வாறு பெண்களின் வாழ்வை மேம்படுத்தும் திட்டங்களுக்கும் தங்கள் உதவிகளை வழங்குவதற்கு முன்வர வேண்டும்.

இந்தக் குடியிருப்புத் திட்டத்திற்கு உதாரணமாக நாம் ஜப்பான் நாட்டை எடுத்தக் கொள்ளலாம். அவர்கள் அழிவின் பின் எவ்வாறு தம் பெண்களின் பொருளாதாரத்திலும் வாழ்வு நிலையிலும் மேம்பாட்டைக் கொண்டு வந்தார்களோ அவ் வாறு நாமும் செயற்படுத்த வேண்டும். ◆

## சகோதரிகளே! நாம் அறிந்திருக்க வேண்டியவை.......

**தீபா, கங்கா**

இன்றைய தினம் பெண்களாகிய நாம் ஒன்றுபட்டு நிற்க வேண்டிய தினம். எமக்காக நாமே குரல் கொடுத்து எம் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள வலியுறுத்தும் தினம்.

ஆம்,இன்று சர்வதேச மகளிர் தினம்.

இத்தினத்தைக் கொண்டாடுவது மட்டுமா எமது கடமை. எமக்கான உரிமையை யார் தரவேண்டும்? நாமே பெற்றுக் கொள்ள வேண்டும்.

எனவே, ஒவ்வொரு பெண்களும் தமக்கான உரிமைகள் பற்றி அறிந்திருக்க வேண்டிய தேவையுள்ளது. இத்தேவையைக் கருத்தில் கொண்டு இன்றைய தினத்தில் பெண்கள் உரிமைகள் தொடர்பான ஐ.நா.சாசனத்தின் உறுப்புரிமைகளில் சிலவற்றைத் தொகுத்துத் தருகின்றோம்.

**பெண்கள் உரிமை தொடர்பான பெண்களுக்கெதிரான பேதங்காட்டலின் அனைத்து வடிவங்களையும் ஒழித்தல் சார் இணக்க உடன்படிக்கை**

**உறுப்புரைகள்**

தொழிற்பரப்பில் பெண்களுக்கு எதிரான பேதங்காட்டலை ஒழிப்பதற்குப் பொருத்தமான அனைத்து நடவடிக்கைகளையும் ஆண், பெண் சமத்துவ அடிப்படையில் ஒரே உரிமைகளைக் குறிப்பாகப் பின்வருவனவற்றைப் பெண்களுக்கு உறுதிப்படுத்த வேண்டும்.

(அ) அனைத்து மனிதர்களினதும் பிராதீனப்படுத்தமுடியாத உரிமையாக வேலை செய்வதற்கான உரிமை.

ஆ) தொழில் விடயங்களில் தெரிவுக்கான ஒரே கட்டளை விதிகளின் பிரயோகம் உட்பட ஒரே தொழில் வாய்ப்புகளுக்கான உரிமை.

இ) உயர்தொழில், தொழில் ஆகியவற்றைச் சுதந்திரமாகத் தெரிவு செய்வதற்கான உரிமை, பதவிஉயர்வு, வேலைப் பாதுகாப்பு, சகல சேவை நலன்களும் நிபந்தனைகளும் என்பவற்றுக்கான உரிமை, தொழில் பயிலுநர் பயிற்சி, உயர்வாழ்க்கைத் தொழிற் பயிற்சி, மீண்டுவரும் பயிற்சி என்பவை உட்பட தொழில் பயிற்சிகளையும் மீள் பயிற்சிகளையும் பெற்றுக்கொள்வதற்கான உரிமை.

ஈ) சமநலன்கள் உட்பட சம ஊதியத்திற்கான உரிமையும் சம பெறுமானமுடைய வேலை தொடர்பில் சம நடத்துகைக்கான உரிமையும் அத்துடன், வேலையினது பண்புத்தர மதிப்பீட்டில் சமத்துவமான நடத்துகையும்.

உ) ஓய்வுபெறல், தொழிலின்மை, சுகயீனம், நோய்வாய்ப்பட்டநிலை, வயோதிபம் அத்துடன் வேலைசெய்ய இயலாமை எனும் குறிப்பான சந்தர்ப்பங்களில் சமூக பாதுகாப்புக்கான உரிமையும் மேலும் வேதனத்துடன் லீவு பெறுவதற்கான உரிமையும்.

ஊ) இனப்பெருக்கத் தொழிற்பாட்டைப் பாதுகாத்தல் உட்பட உடல் நலப் பாதுகாப்பிற்கும் வேலை நிலைமைகளில் இடர் காப்பிற்குமான உரிமை.

**விவாகம் அல்லது தாய்மைப் பேற்றின் அடிப்படையில் பெண்களுக்கெதிரான பேதங்காட்டலைத் தடுப்பதற்கும் வேலை செய்வதற்கான பயனுறுதி வாய்ந்த உறுதியை; உரிமையை உறுதிப்படுத்துவதற்குமாக அரசுகளாம் கட்சிகள் பின்வருவனவற்றுக்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும்.**

அ) கர்ப்பநிலை அல்லது பிரசவ லீவு காரணமாக வேலைநீக்கஞ் செய்யப்படுவதையும் திருமணஞ்சார் நிலையின் அடிப்படையில் வேலை நீக்கத்தில் பேதங்காட்டலையும் நீக்க பிரமாணங்களை விதித்தலுடன், அவைகளை தடைசெய்தல்.

ஆ) முன்னைய தொழில், சிரேட்ட நிலை அல்லது சமூகச் சலுகைகள் என்பவற்றின் இழப்பின்றி வேதனத்துடன் ஒப்பிடத்தக்க சமூகநலன்களுடன் பிரசவ லீவை அறிமுகப்படுத்தல்.

இ) பெற்றோர் குடும்பக் கட்டுப்பாடுகளை வேலைப் பொறுப்புக்களுடன் இணைப்பதற்கும் பொதுவாழ்வில் பங்கு பற்றுவதற்கும் உதவுவதற்கு அவசியமான சமூகசேவைகள் வழங்கப்படுதலை, குறிப்பாக குழந்தைக் கவனிப்பு வசதிகளின் வலையமைப்பொன்றைத் தாபித்து விருத்திசெய்வதனூடாக ஊக்குவித்தல்.

ஈ) கர்ப்ப காலத்தில்பெண்களுக்குத் தீங்குபயப்பதாக நிறுவப்பட்ட வேலை வகைகளில், அவர்களுக்குச் சிறப்பான பாதுகாப்பை வழங்குதல். ✲




யாழ். சைவ பரிபாலன சபையின் தலைவரும் சபையின் பரீட்சைச் செயலாளருமான சைவப் புலவர் வ.கந்தசாமியின் பணிநலம் பாராட்டுவிழா நேற்றுமுன்தினம் நீராவியடி நாவலர் ஆச்சிரமத்தில் நடைபெற்றது.

நிகழ்வு பாராட்டு விழா நாயகருடன் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ ஐ.மகேஸ்வரக் குருக்கள், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் அ.சிறிக்குமரன், கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் சுடர் இ.மகேந்திரன், யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறைத் தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: பிரபா)*

# சிவராத்திரிதின நிகழ்வுகள்

தொல்புரம்,மார்ச்8

சித்தன்கேணி சிவன் ஆலயத்தில் இன்று மகாசிவராத்திரி பூசை நடைபெறவுள்ளது.

பூசைகளின் இடையில் சிவராத்திரி தொடர்பான சொற்பொழிவுகள் இடம்பெறும். (எ-ரி)

★ ★ ★

தொல்புரம்,மார்ச்8

தொல்புரம் கொட்டியம்பதி ஸ்ரீ ஆறுமுத்து மாரி அம்மன் ஆலயத்தில் இன்று மாலை 6 மணி தொடக்கம் சிவராத்திரி திருவிழா நடைபெறவுள்ளது.

நான்கு சாமப் பூசைகள் நடைபெற்று பூசைகளுக்கு இடையில் "சிவனின் மகிமை" என்னும் தலைப்பிலான கதாப்பிரசங்கம் இடம்பெறும். (எ-ரி)

★ ★ ★

சுழிபுரம்,மார்ச்8

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணி தொடக்கம் குடாநாட்டிலுள்ள பல இந்து ஆலயங்களிலும் பன்னிரு திருமுறைப் பாராயணம், திருவாசகப் பாராயணம் போன்ற நிகழ்வுகளை நடத்தவுள்ளனர். (எ-28-202)

★ ★ ★

யாழ்ப்பாணம்,மார்ச்8

ஊரெழு, சக்திபுரம் சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலையின் மகா சிவராத்திரிவிழா இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு மன்றத்தின் திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

மன்ற அதிபர் ஞ.து.ஜெயதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், குப்பிளான் அறிவொளி சனசமூக நிலையம், மயிலங்காடு ஸ்ரீமுருகன் முன்பள்ளி, ஊரெழு கலைவாணி முன்பள்ளி ஆகிய முன்பள்ளிகளின் மாணவர்கள் இணைந்து வழங்கும் 'சிறுவர் சோலை' நிகழ்வு, ஊரெழு ஸ்ரீ சத்திய சாயி மண்டலியின் கலைநிகழ்வுகள் மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு என்பனவற்றுடன் பல்வேறு கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (எ-202)

★ ★ ★

பருத்தித்துறை பர்வதவர்த்தினி சமேத பசுபதீஸ்வரர் ஆலயத்தில் (சிவன்கோயில்) சிவராத்திரி தினத்தை முன்னிட்டுவிசேட பூசைகள் ஆராதனைகள் இடம்பெறவுள்ளன.

இரவு நிகழ்ச்சிகளாக சமயம் சம்பந்தமான பிரசங்கங்களும், தெய்வீக உரைகளும், பாடசாலை மாணவர்களின் நாடகங்கள், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

இரவு நான்குசாமப் பூசைகளும் நடைபெறும். (எ-15)

★ ★ ★

துன்னாலை தெற்கு ஸ்ரீ பூதேஸ்வர தேவஸ்தானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை 4 சாமப் பூசைகளுடன் சிவராத்திரிவிழா நடைபெறவுள்ளது. (எ-202)

★ ★ ★

குடத்தனை,மார்ச்8

மகாசிவராத்திரி தினமான இன்று குடத்தனை கிழக்கு மாளிகைத்திடல் கண்ணகை அம்மன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. (எ-78)

★ ★ ★

சுழிபுரம்,மார்ச்8

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் சிவராத்திரி நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன. விசேட கூட்டுப் பிரார்த்தனைகளுடன் மாலை, இரவு அபிஷேகங்களும் இடம்பெறும். (எ-202-28)

★ ★ ★

சுழிபுரம்,மார்ச்8

பண்ணாகம் விசவத்தனை முருகப் பெருமான் ஆலயத்தில் சிவராத்திரி விழா இன்று நடைபெறவுள்ளது.

நான்குசாமப் பூசைகளுடன் விசேட நிகழ்வுகளும் இடம்பெறும். (எ-202-28)

★ ★ ★

குடத்தனை,மார்ச்8

மகாசிவராத்திரி தினமான இன்று பருத்தித்துறை புலோலி மத்தி அவ்வொல்லைப் பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

ஆலய முன்றிலில் இரவு 9 மணிக்கு "மாலைக்கு வாதாடிய மாரியின் மைந்தன்" என்னும் சரித்திர புராண நாடகம் மேடையேற்றப்படவுள்ளது. (எ-78)

★ ★ ★

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் இன்று சிவராத்திரி விழா நடைபெறவுள்ளது.

அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகள் நிகழ்த்துவர். (எ)

★ ★ ★

கிராஞ்சி ஸ்ரீமுருகன் ஆலயத்திலும், ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்திலும் சிவராத்திரி நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை நான்கு சாமப் பூசைகளுடன் நடைபெறவுள்ளன. (எ-323-202)

★ ★ ★

வேரவில் ஸ்ரீ வெள்ளப் பள்ளத்து ஸ்ரீ வீரகத்தி ஆலயத்தில் இன்று சிவராத்திரி விழா நடைபெறவுள்ளது.

விசேட பூசைகளுக்கு இடையில் சிவராத்திரி புராணப் படிப்பும் இடம்பெறும்.

## மந்திகை ஆஸ்பத்திரியில் வெளிநாட்டு வைத்தியக் குழுக்கள்

சுனாமிப் பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென சிகிச்சை அளிக்க முன்வந்த ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ஹியூமெடிக்கா நிறுவன வைத்தியர் குழு, போர்த்துக்கல் வைத்தியகுழு ஆகிய இரு அணிகளும் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சைகளை அளித்து வருகின்றன.

ஹியூமெடிக்கா வைத்திய குழு வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவிலும், உள்ளக சிகிச்சைப் பிரிவிலும் போர்த்துக்கல் வைத்தியக் குழு அதிதீவிரசிகிச்சைப் பிரிவிலும் சத்திர சிகிச்சைப் பிரிவிலும் சிகிச்சைகளை நோயாளர்களுக்கு மேற்கொண்டு வருகின்றன. (எ-173)


விசேட கழிவு விலையில்

கொழும்பு - சென்னை - கொழும்பு

| | | |
|---|---|---|
| 5 பேர் கொண்ட குழு | - | 12,100.00 |
| வரி | | 3,000.00 |
| | | 15,100.00 |
| 10 பேர் கொண்ட குழு | - | 10,100.00 |
| வரி | | 3,000.00 |
| | | 13,100.00 |

சென்னையில் உங்கள் திருமண வைபவங்களை நடத்துவதற்கான சகல வசதிகளும் எம்மால் செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு:

Aero Lanka New way to Flying (General Sales Agent)

air SAHARA EMOTIONALLY YOURS Passenger Sale Agent

MANOJ EXPRESS
THE FINEST EXPRESS SERVICE IN THE FIELD

1) 32, CLOCK TOWER ROAD, JAFFNA. 021 - 222 - 3916

2) 6, NEW MARKET bld., HOSPITAL ROAD, JAFFNA. 021 - 222 - 7916

HOT LINE : 0777 517019 (C/61366) (24-22-11-18)



05.03.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 300109046 இலிருந்து 300137178 வரை

சீட்டிழுப்பு இல. 1587

02 59 63 67 சுப்பர் எண் 16

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.90,95,700/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 90,95,700/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 37 | 5,000/- | 1,85,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 481 | 1,000/- | 4,81,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,500 | 500/- | 7,50,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 23,475 | 40/- | 9,39,000/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 22,288 | 20/- | 4,45,760/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,32 769 | 10/- | 33,27,690/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ.86,28,450/-

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 99,84,850/-

தொடர் இல. 200134076 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுக்கள் 2005 மார்ச் 9 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

300120957-5-28
300116811-7-59
300114513-1-60
300116635-6-46
300113926-1-69

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.


# மரண அறிவித்தல்

## சதாசிவம் இரவீந்திரன்

சுண்டுக்குழியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கு, விழிசிட்டியை வசிப்பிடமாகவும் லண்டன் Tootingஇல் வசித்தவருமாகிய சதாசிவம் இரவீந்திரன் (S.S.Ravi) 03-03-2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் - அன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற இராசையா - சந்திரவதனா தம்பதிகளின் அன்பு மருமகனும் தயாநிதியின் (குஞ்சு) பாசமிகு கணவரும் சுஜன், சுஜந்தா, சுமன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் பிரதீபன், குகலட்சுமியின் அன்பு மாமனாரும் நிலேஷின் பாசமிகு தாத்தாவும் இந்திரா, மனோகரன், தெய்வேந்திரம, சந்திரா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் போதலிங்கம், புவனேஸ்வரி, சந்திர காந்தன், ஜெயந்திமாலா, சிவநிதி, இந்திரகாந்தன், பத்மநிதி, கலாநிதி, உமாநிதி, சிறீகாந்தன், ஜீவகாந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெயமலர் இரவீந்திரராஜா, இராஜேஸ்வரன், இரஞ்சிதமலர், இராசரட்ணம், ஜெகதீஸ்வரன், காலஞ்சென்ற சோதிராஜா, வனஜா, சோகலைவாணி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டன் Tooting இல் நாளை (09-03-2005) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*ஏழாலை மேற்கு,*
*ஏழாலை.*
தொடர்புகளுக்கு:
*0208 6722365.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

(42839) (26-22-11-18)

# ஆள்பதிவுத் திணைக்கள நடமாடும் சேவை ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்

சுனாமிப் பேரலை அனர்த்தத்தின்போது தேசிய அடையாள அட்டைகளை இழந்தோருக்கான அடையாள அட்டை வழங்குவதற்கான இடம் பெயர்சேவை (நடமாடும் சேவை) கடந்த சனி, ஞாயிறு தினங்களில் வடமராட்சி வடக்கிலும், வடமராட்சி கிழக்கிலும் நடைபெற்றபோது ஆயிரக்கணக்கானோர் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தனர்.

வடமராட்சி வடக்கில் பருத்தித்துறை சிவன் கோயில்மண்டபத்தில் ஆள் பதிவுத் திணைக்கள உதவி ஆணையாளர் மகேஸ் கருணா நாயக்கா தலைமையிலான திணைக்கள உத்தியோகத்தர்களும் - வடமராட்சி கிழக்கில் உடுத்துறை மகா வித்தியாலயத்தில் ஆள்பதிவுத் திணைக்களத்தின் மற்றொரு குழு உத்தியோகத்தர்களும் இடம்பெயர் சேவைகளை நடத்தினர். இதன்போது வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு பிரதேசசெயலர்களும், கிராம உத்தியோகத்தர்களும் இச்சேவைக்கு வேண்டிய உதவிகளை வழங்கினர். இச்சேவையின்போது அடையாள அட்டைகோரி விண்ணப்பித்தோருக்கு 21 தினங்களுக்குள் அடையாள அட்டை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-173)


**திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு**

★ திருமண வைபவங்கள் [அலங்காரத்துடன்]
★ விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்
போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.



T.P.: 077-3086939, 0777-246117, 077-6018467. (42842)

தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.



**மனோகரா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு ஜனாதிபதி விஜய் (சிறப்புத் தோற்றம்). நமிதா, ரவிகிருஷ்ணா, ரம்பா நடிக்க
**சுக்ரன்** (சீல்ஸ்) காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30
அடுத்த வெளியீடு: 11.03.2005 முதல் சூர்யா, ஜோதிகா (மாறுபட்ட வேடங்களில்) நடிப்பில் **மாயாவி**
மகா சிவராத்திரியை முன்னிட்டு விசேட காட்சியாக நள்ளிரவு 12.30 இற்கு **சுக்ரன்** காண்பிக்கப்படும்.

**லக்சுமி சினிமா**
இன்று முதல் விஜய், திரிஷா நடித்த
**கில்லி**
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
சிவராத்திரியை முன்னிட்டு இரவு விசேட காட்சிகள் காண்பிக்கப்படும். (C/40667)

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம். குளிரூட்டப்பட்டது.
சிவராத்திரி தினத்தை முன்னிட்டு 07.03.2005 முதல் விஜய் - சங்கவி, சுபலட்சுமி நடித்த
**நிலாவே வா** (சீல்ஸ்)
காட்சி நேரங்கள்: 10.30, 2.30, 6.30, 9.30, 12.00, 3.00 (பு.நே.)
பலருடைய பாராட்டுக்களைப் பெற்ற இத்திரைப்படம் முதல் முதலாக இலங்கையில் திரையிடப்படுகின்றது.

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
ஜெயம்ரவி, அஸ்வினி, நதியா, பிரகாஷ்ராஜ் நடித்த
**M. குமரன் Son Of மகாலட்சுமி**
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
சிவராத்திரியை முன்னிட்டு விசேட காட்சி விஜய், திரிஷா நடித்த
**திருப்பாச்சி** 9.30, 12.30 (பு.நே). (C/40667)

**ராஜா** யாழ்ப்பாணம்
சிம்பு (இருவேடம்), ஜோதிகா, கவுண்டமணி நடித்த
**மன்மதன்** (சீல்ஸ்)
சிவராத்திரியை முன்னிட்டு இன்று 10.30, 2.30, 6.30, 9.30 நள்ளிரவு 1.30 காட்சிகள் காண்பிக்கப்படும்.

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்
சரத்குமார், நமிதா, வடிவேல், கபாலி நடித்த
**ஏய்** (சீல்ஸ்)



தினசரி 11.00, 3.00, 7.00
சிவராத்திரியை முன்னிட்டு விசேட காட்சிகள் நள்ளிரவு, 10.00, 1.00 (பு.நே).


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 09.07.1941 — ஆண்டவன் அடியில் 18.02.2004



அமரர்
**இராமசாமி பரராஜசிங்கம்**
(உரிமையாளர்–சிங்கம்ஸ் ரெக்ஸ்ரைல், யாழ்ப்பாணம்

திதி : 08.03.2005

ஆண்டு ஒன்றாகிப் போனதப்பா!
எமது மனங்கள் இங்கு கலங்குதப்பா!
கலகலக்கும் உங்கள் குரல் ஓய்ந்ததப்பா!
கண்முன்னே மலை ஒன்று சரிந்ததப்பா!
இன்னும் ஆறவில்லையே எம் மனம்!
ஆறுதல் கிடைக்காமல் தவிக்கின்றோம்!
வையகத்தில் இல்லாவிடினும் வானகத்தில் நீங்களிருந்து
தெய்வமாய் எம்மை வழிநடத்தி வாருமப்பா!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

170, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

-குடும்பத்தினர். (42807)

## அனுராவுக்கு பதில்தரும் அவசியம் பிரதமருக்கில்லை!

அனுரா பண்டார நாயக்க போன்றவர்களின் அர்த்தமற்ற உளறல்களுக்குப் பதில் சொல்லவேண்டிய அவசியம் பிரதமருக்கு இல்லை. ஜனாதிபதிப் பதவி என்ன அனுராவின் 'பொக்கட்'டிலா இருக்கின்றது?

இப்படிக் கேள்வி எழுப்புகின்றன பிரதமரின் அலுவலக வட்டாரங்கள். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஒரு பயந்தாங்கொள்ளி. தைரியம் இல்லாத மனிதர் இப்படியான ஒரு மனிதரிடம் நாட்டின் தலைமைப் பொறுப்பை எப்படி ஒப்படைக்கமுடியும்? கட்சியின் பெரும்பான்மையானவர்கள் என்னைத்தான் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக ஒப்படைக்கமுடியும்? கட்சியின் பெரும்பான்மையானவர்கள் என்னைத்தான் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்க வேண்டும் என வலியுறுத்துகின்றனர் என்று அமைச்சர் அனுரா பண்டார நாயக்க பேட்டி ஒன்றில் கூறியிருந்தார்.

இந்த விடயம் தொடர்பாகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் தொடர்புகொண்டு அவருடைய கருத்தை அறிய முற்பட்டோம். அவருடன் தொடர்பு கிடைக்கவில்லை. எனினும், அவரது அலுவலக வட்டாரங்கள் இது குறித்துத் தெரிவித்ததாவது:-

பிரதமருக்குப் பல்வேறு பொறுப்புகள் இருக்கின்றன. ஆழிப் பேரலை அனர்த்தத்தால பெரிதும் பாதிப்புக்குள்ளானது பிரதமரின் தொகுதியான அம்பாந்தோட்டை மாவட்டம். அப்பிரதேச மக்களுக்குப் புனர்வாழ்வளிக்க வேண்டியதும் அதனை மீளக்கட்டியெழுப்ப வேண்டியதும் பிரதமரின் கடமை எனப் பிரதமர் வட்டாரங்கள் தெரிவித்தன. (க-8)

## இரத்தினக்கற்களை கடத்த முயன்ற வர்த்தகர் சிக்கினார்

'தாய்' விமான சேவைக்குச் சொந்தமான விமானமொன்றில் பாங்கொக்கிலிருந்து இலங்கை வந்த இலங்கைப் பிரஜையொருவரிடமிருந்து 2 கோடி 50 லட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக்கற்கள் கைபற்றப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை வந்த இந்த விமானத்தில் வந்திறங்கிய மொரட்டுவைப் பகுதியைச் சேர்ந்த பிரபல வர்த்தகரொருவரே இரத்தினக்கற்களுடன் கைதுசெய்யப்பட்டார் எனக் கட்டுநாயக்க விமானநிலைய உதவி சுங்க அத்தியட்சகர் மாலி பியசேன தெரிவித்தார்.

35 இரத்தினக்கற்களைத் தனது பயணப் பையிலும் 7 கற்களை சிறிய பெட்டி ஒன்றிலும் மறைத்து வைத்து எடுத்துவரும்போதே சந்தேகநபர் பிடிபட்டுள்ளார். இந்த இரத்தினக்கற்கள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன. அத்துடன், சந்தேகநபருக்கு ஐந்து லட்சம் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வர்த்தகர் தாய்லாந்து, மடகாஸ்கார் ஆகிய நாடுகளுக்கு அடிக்கடி சென்று வருபவர் என்பதும் விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளதாகக் கூறப்பட்டது. (க-8)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தனபாக்கியம் பொன்னம்பலம்

காரைநகர், குழுலாங்குழியைச் சேர்ந்த திருமதி தனபாக்கியம் பொன்னம்பலம் நேற்று (07.03.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா பொன்னம்பலத்தின் மனைவியும் காலஞ்சென்ற கதிர்காமவாசன் மற்றும் மகேஸ்வரி (ஜேர்மனி), மோகனாங்கி (சுன்னாகம்), காலஞ்சென்ற சிவஞானம், ஞானச்சந்திரன் (நீர்ப்பாசனத் திணைக்களம்), றஜனி ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகராஜா (ஜேர்மனி), குமாரலிங்கம் (சுன்னாகம்), தனலக்சுமி ஆகியோரின் அன்பு மாமியும் கிருசாந்தி, பிரசாந்தி, சாந்தினிவாசன், கஜேன், கேமா, மயூரன், கஸ்தூரி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2005) புதன்கிழமை காலை 11 மணியவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குழுலாங்குழி, காரைநகர்.*
தகவல்: பொ.ஞானச்சந்திரன் (மகன்).
(42850)(29-14-17)

## திருமதி அல்பிரட் மரியம்மா (மணி)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் நாரந்தனையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அல்பிரட் மரியம்மா (மணி) அவர்கள் 03.03.2005 வியாழக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிலிப்புப்பிள்ளை அல்பிரட் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு.திருமதி அந்தோனிப்பிள்ளை அந்தோனியாப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி பிலிப்புப்பிள்ளை மதலேனாப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற மேரிமாகிறெட், காலஞ்சென்ற பெர்னாண்டோ, H.A. ஞானப்பிரகாசம் (Retaid labour Officer) சபீனம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வில்பிறட், காலஞ்சென்ற மேரிமாகிறெட், திரேசா, இம்மானுவல் ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற சறோஜா, யூஜினா, சந்திரா, யூஜின் பிரான்ஸில் வசிப்பவர்களான அன்ரனி (ஜஸ்ரின்), இந்திரா, ஜெனின் லியோனிஸ் (பெலார்மின்), றொபின், ஜகிலா (ஜகி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் றோச், இம்மானுவல், பாஸ்கரன், விஜயராணி (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனாவைத்தியசாலை விடுதி 07), பிரான்ஸில் வசிப்பவர்களான சாந்தி, குலன், ராதிகா, பிளேவியன், மதி ஆகியோரின் அன்பு மாமியாரும் றொஜிதா, றொஜிவ், றொமிஷா, டெலான், தனுஷா, நிருஷா, ஹட்டன் (தரம் 08, வவுனியா இந்துக் கல்லூரி), செல்ரன் பிரஜாந் (கனடா), வித்தியா (A/L 2005, யாழ்.சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), தர்சிகா (A/L 2006, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), சுனித்தா (A/L 2007, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), எரிக்பிரதாப் (தரம் -08, யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி), பிரான்ஸில் வசிப்பவர்களான ஜெறா, ஜெறோம், மார்க், எரிக், கார்ல், பிறேடி, பிறிஜெடா, ஹறி, கத்தியா, புறுணோ ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஷாலினி, யதுர்சன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளைமறுதினம் (10.03.2005) வியாழக்கிழமை Gagny புனித ஜேர்மனார் தேவாலயத்தில் 4.30 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு (St.Germain 12 rue de General Leclerc Gagny - 93220) பின்னர் Gagny சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். (Cimetiere due Centre 113 Rue du General Leclerc) இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் நினைவாக இரங்கல் திருப்பலி 10.03.2005 மாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாணம் யுவானியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பங்குபற்றி இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இல.38, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.*
தகவல்: யூஜின் (மகன்).
(42849)(29-14-17)

## இராசையா ஆச்சிப்பிள்ளை

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் தற்போது புளியம்பொக்கணையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா ஆச்சிப்பிள்ளை 06.03.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் செல்லம்மா, காலஞ்சென்ற கந்தையாவின் அருமைச் சகோதரியும் கனகாம்பிகை (புளியம்பொக்கணை), மகேஸ்வரி (பிரான்ஸ்), பாக்கியநாதன் (மட்டுவில்), வன்னியசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.03.2005) திங்கட்கிழமை புளியம்பொக்கணையில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாகதம்பிரான் கோயிலடி, புளியம்பொக்கணை.*
தகவல்: க.கனகாம்பிகை (மகள்).
(42847)(29-14-17)

## இராமு ஆனந்தசுந்தரம் (இளைப்பாறிய ஆசிரியர்)



ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமு ஆனந்தசுந்தரம் 06.03.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமு சிவக்கொழுந்துவின் மகனும் சரஸ்வதியின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி சேதுப்பிள்ளையின் மருமகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, பொன்னம்மா மற்றும் செல்லம்மா, தர்மலிங்கம் (இளைப்பாறிய தபால் அதிபர்), நடராஜா, விசுவலிங்கம், சுப்பிரமணியம் (இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர்), தனபாலசிங்கம் ஆகியோரின் சகோதரனும் ஆனந்தவதனி, மோகானந்தன் (பிரான்ஸ்), தயானந்தன் (ஹொலண்ட்), தேவானந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அம்பிகைநாதன், டோறிஸ் (பிரான்ஸ்), சிறிவிஜயா (ஹொலண்ட்), நந்தரூபி ஆகியோரின் மாமனாரும் தர்சனா, தர்சாந், தர்சானந், கோபி, ஜனார்த்தனன், சுயாநந்தி, பிரபானந், பிரமிலன், நிஷானந்தி, கிருபானந் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, பாலசிங்கம் மற்றும் பரிமளம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2005) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணிக்கு ஏழாலை காடகடம்பை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை தெற்கு, சுன்னாகம்.*
*T.P. : 077 3068751*
*0031226340580 (தயா - ஹொலண்ட்)*
*0033148674009 (மோகன் - பிரான்ஸ்)*
தகவல்: மனைவி, மக்கள், மருமக்கள்.
(42845)(29-14-17)

# மன்னார் மணல்திட்டில் விடப்பட்ட அகதிப் பெண் மீது வல்லுறவு!

இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பும் வழியில் மன்னார் கடற்பரப்பில் மணல்திட்டில் கைவிடப்பட்ட பெண் அகதிகளுள் ஒருவரை இனந்தெரியாதோர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

-இச்சம்பவம் கடந்த சனியன்று இரவு இடம்பெற்றுள்ளது.

அகதிகள் இறக்கப்பட்ட இடத்துக்குப் படகில் வந்த இனந்தெரியாத மூவர் குறித்த பெண்ணை வேறொரு மணல்திட்டிற்குக் கொண்டுசென்று அவரைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு, அப்பெண்ணிடம் இருந்த தங்க நகைகளையும் பணத்தையும்கூட அபகரித்துச் சென்றுள்ளனர்.

நிர்க்கதியாகி நின்ற அகதிகள் ஐம்பது பேரும் ஞாயிறன்று மன்னார் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். அப்போதே இவ்விடயம் நீதிவானிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிவான், மன்னார் வைத்தியசாலையில் அப்பெண்ணை சேர்ப்பிக்க உத்தரவிட்டதோடு, உடனடியாக மருத்துவ அறிக்கையையும் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

தாயகம் திரும்பிய ஐம்பது அகதிகளுள் இருபத்தைந்து பேர் பெண்கள் என்றும் - அவர்களுள் பெரும்பாலானோர் யுவதிகள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(க-8)

# வெலிகந்த படுகொலைச் சம்பவம் 6 இளைஞர்களை தேடுகிறது பொலீஸ்

வெலிகந்த - கொலனவாடிய பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற படுகொலைச சம்பவங்களுக்கு முன்பு இப்பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடினார்கள் என்று கூறப்படும் ஆறு இளைஞர்களை வெலிகந்தப் பொலீஸார் தேடிவருகின்றனர்.

சம்பவதினம் வரை இவர்கள் இப்பகுதியில் நடமாடியுள்ளனர் எனவும் அதன் பின்னர் இவர்கள் தலைமறைவாகிவிட்டனர் எனவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக வெலிகந்த உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ஆனந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதேவேளை, கொலகனவாடிய சூட்டுச் சம்பவத்தில் கொலையுண்டவர்களுக்கிடையில் விவசாயக் காணித் தகராறுகள் இருந்துள்ளன எனவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இதுதொடர்பாக வெலிகந்த பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றும் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த விவசாயக் காணியிலிருந்து கொலையுண்ட குடும்பத்தவர்களை வெளியேறுமாறு கூறி எழுதப்பட்ட கடிதமொன்றையும் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதுதொடர்பான மேலதிக புலன்விசாரணைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள தடயங்களில் இருந்து இந்தக் கொலைச் சம்பவத்துக்கான காரணத்தையும் கொலையாளிகளையும் கண்டறிய முடியும் என்றும் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் நம்பிக்கை தெரிவித்தார். (க-8)

# ஜே.வி.பியின் கருத்துக்களுக்கு உலக வங்கி பிரதிநிதி மறுப்பு

கொழும்பு, மார்ச் 8

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் வடக்கு - கிழக்கின் பெரும்பாலான பகுதிகளில் உத்தியோகப்பற்றற்ற அரசொன்று இருக்கிறது எனத் தாம் கூறவில்லையென்று தெரிவித்திருக்கிறார் உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் பீற்றர் ஹெரல்ட். உலக வங்கியின் நிலைப்பாட்டுக்கு மாறாக ஜே.வி.பி. மற்றும் ஊடகங்கள் விடுத்த அறிக்கைகள் நிராகரிக்கப்பட வேண்டியவையென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆங்கில வார இதழொன்றுக்கு உலக வங்கியின் பணிப்பாளர் தெரிவித்திருந்த கருத்துக்களை ஆட்சேபித்து ஜே.வி.பியும் அதன் சார்பான அரசியல் இயக்கங்களும் கடுமையான எதிர்ப்புகள் வெளியிட்டிருந்தன.

இதனையடுத்து, நேற்றுப் பிற்பகல் உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி பதில் அறிக்கையொன்றை விடுத்தார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்றே நான் அந்தப் பேட்டியில் கூறியிருந்தேன். இலங்கையின் இறையாண்மையுள்ள ஓர் அரசுடன் உலக வங்கி செயலாற்றுகிறது. அதில் சந்தேகத்திற்கிடமில்லை. ஆனாலும் உலக வங்கியின் நிலைப்பாட்டை விமர்சித்து ஜே.வி.பியும் சில ஊடகங்களும் வெளியிட்டுள்ள கருத்துக்களை ஏற்கமுடியாது. கடந்த அரசினால் கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தைத் தற்போதைய அரசும் முன்னெடுக்கின்றது. மறுபுறம், விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கையில் தடை செய்யப்படாத இயக்கமாகவும் உள்ளது. ஆழிப்பேரலையின் பின்னரான செயற்பாடுகளுக்காகப் பொதுக் கட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கான பேச்சுக்கள் நடைபெற்று வருவதாக அரச மற்றும் புலிகளின் சமாதானச் செயலகங்கள் குறிப்பிடுகின்றன. அரசு வரையறுத்துள்ள கொள்கைத்திட்டத்தின்படியே உலக வங்கி செயற்படுகிறது.

முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உலகவங்கி நீண்டகாலமாகச் செயற்பட்டு வருகின்றுது. இந்த மக்களில் ஒரு பகுதியினரே ஆழிப்பேரலையாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வறுமையை ஒழிப்பது உலக வங்கியின் பிரதான செயற்பாடாகும். வடக்கு - கிழக்கின் பெரும்பாலான மாவட்டங்களில் வறுமை நிலையிருப்பதை அந்த நேர்காணலில் நான் கூறியிருந்தேன்.

இந்தச் செயற்பாடுகள் கடந்தகால மற்றும் தற்போதைய அரசின் கோரிக்கைக்கு இணங்கவே மேற்கொள்ளப்பட்டன. அண்மையில் கூட தற்போதைய அரசின் கீழ் வடக்கு - கிழக்கு வீடுகள் புனரமைப்புத் திட்டத்திற்கு 7 கோடி 50 லட்சம் டொலர்களையும் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணக் கடனாக 7 கோடி 50 லட்சம் டொலர்களையும் வழங்க நாம் இணங்கினோம். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் இது வழங்கப்பட்டது.

உலக வங்கியின் வடக்கு - கிழக்கிற்கான அனைத்து நிதியுதவிகளும் அரச நிறுவனமான வடக்கு- கிழக்கு மாகாண சபையினூடாகவே வழங்கப்படுகின்றன. இதை நாம் பல முறை கூறியிருந்தோம்.

அதேவேளை, புலிகளுக்கு நாம் நேரடி நிதியுதவிகளைச் செய்வதில்லை. இந்தக் கொள்கையில் மாற்றம் செய்யும் நோக்கமுமில்லை. இதைக் குறிப்பிட்ட நேர்முகத்தின்போதும் நான் கூறியிருந்தேன்.

இலங்கை அரசு வழங்கிய அங்கீகாரத்தின் பிரகாரம் உலகவங்கி விடுதலைப் புலிகளுடன் சில சந்திப்புக்களை நடத்தியிருந்தது.

அந்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் இந்தச் சந்திப்புப் பற்றி அரசிற்கும் கூறப்பட்டது .

இந்த முயற்சிகள் சமாதான முன்னெடுப்புக்களில் நல்ல பயன்களைத் தருமென்பதே சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-8)

## படையினரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வின் யாழ்.மாவட்டத் தலைவர் றொனி பேர்சனிடம் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

மகஜர்களைப் பெற்றுகொண்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்டத் தலைவர் றொனி பேர்சன், இது பற்றித் தமது தலைமையகத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளார் எனவும் -

தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளைத் தாம் ஆரம்பித்துள்ளனர் எனவும் - தெரிவித்தார்.

நேற்றைய பேரணியில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்துகொண்டனர். சுலோக அட்டைகளையும், பதாதைகளையும் அவர்கள் தாங்கியிருந்தனர்.

சுலோக அட்டைகளில் காணப்பட்ட வாசகங்களில் சில வருமாறு:-

"பாடசாலை வீதிகளில் படையே குடியிராதே!", "உன் அரக்க குணத்தைத் தமிழர் கல்வியில் காட்ட நினைக்காதே!", "வெறித்தன அரசே பணத்தை வழங்கித் தமிழர் உணர்வை மழுங்கடிக்காதே!", அரக்க அரசே! ஓர் உயிரின் விலை 5 லட்சமா?" கொடிய மிருகமே மாணவர்களை சீண்டினால் மடிந்துபோவாய், கொடிய இராணுவமே எம் வீட்டு முற்றங்களா உன்வீட்டு இருப்பிடங்கள்?", நீ சிந்தித்துப் போ இல்லையேல் சிதறிப்போவாய்!". (க-8)

## ஆளுநர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதவிகள் சரியாகப் பகிர்ந்தளிக்கப்படவில்லை. தமிழ் மக்களைப் புறக்கணிக்கும் செயலில் அரசு தொடர்ந்து ஈடுபட்டுவருகிறது.

இந்நிலையில், மீண்டும் போர் திணிக்கப்பட்டால் இன்னும் பல்லாயிரம் தமிழர்கள் காணாமற்போய்விடுவர் என்பது உண்மை. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் தீர்க்கப்பட்டாலே அவர்கள் இந்த நாட்டில் சுதந்திரமாக வாழமுடியும். அதுவரை, அரசுப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்துக்கு வருவதைத் தமிழ்மக்கள் விரும்பவில்லை. இந்நிலையில், தாங்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தால் தங்கள் வருகையை எதிர்த்துப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடுவோம் இவ்வாறு கைதாகிக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் ஆளுநருக்குக் கடிதம் மூலம் அறிவித்திருக்கிறது.

இதற்கிடையில் -

ஆளுநர் நாளை யாழ்ப்பாணத்துக்கு மேற்கொள்ளவிருந்த விஜயம் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக ஒரு தகவல் தெரிவித்தது. (ஜ-75)

## பரமேஸ்வரா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் பெண்களாகிய நாம் மனிதப் பிறவிக்குரிய சகல உரிமைகளுடன் கூடிய தலைநிமிர்ந்த ஒரு வாழ்வை வாழ்வதற்கான விருப்பம் கொண்டுள்ளோம். அந்த வாழ்வை அடைவதற்காக உழைப்பதற்கான இறுகக் கரம் கோர்த்துள்ளோம்.

இன்றைய தினத்திலே பெண்கள் உரிமைக்காக உலகம் எங்கும் போராடும் சகல உறவுகளையும் எம்முடன் இணைந்துக் கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

பெண்களை அவர்களுடைய பிரச்சினைகளில் இருந்தும் அவர்கள் மீதான ஒடுக்குமுறைகளில் இருந்தும் விடுவித்து, ஆளுமையுள்ளவர்களாக்கி, எமது தேச நிர்மாணத்தில் பங்கெடுக்கக் கூடிய பெரும் ஆற்றல் மிக்கவர்களாக உருவாக்கும் செயற்பாட்டில் பெண்கள் பண்பாட்டு மையம் ஈடுபட்டு வருகின்றது. அந்த வகையில், சர்வதேச மகளிர் தினமான இன்று ஆத்திசூடி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்தில் கிராமங்கள் தோறும் செயற்பட்டுவரும் பெண்கள் பண்பாட்டு மையத்தின் அனைத்துச் செயலாளிகளும் ஒன்று கூடும் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

காலையில் ஒன்று கூடும் செயலாளிகள், நியாயமான தமது விருப்பப்படி, தாம் செயற்படுவதில் உள்ள தடைகள் பற்றியும் தமது முழு ஆற்றலையும் வெளிப்படுத்தி, தேச நிர்மாணத்தில் பங்கெடுப்பதில் உள்ள நெருக்கடிகள் பற்றியும் கலந்துரையாடுவர்.

இறுதியாக தமதும், தாம் சார்ந்த சமூகத்தினதும் விடுதலை வாழ்வுக்கான தடைகளை அகற்றக்கோரி அனைவரும் ஒன்று திரண்டு குரல் எழுப்பும் நிகழ்வு மாலை 7 மணிக்கு பரமேஸ்வரா சந்தியில் நிகழ்த்தப்படவுள்ளது.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ - 7-190)

# இளைஞர் சுடப்பட்டார்

கொழும்பு, மார்ச் 8

மட்டக்களப்பு, வாழைச்சேனையில் நேற்று திங்கட்கிழமை இரவு இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுடப்பட்டுக் காயமடைந்தார்.

பொலன்னறுவை குடாப் பொக்கனையைச் சேர்ந்த சிவராசா ரவீந்திரன் (வயது 20) என்பவரே காயமடைந்தவராவார்.

வெலிகந்தையிலிருந்து வாழைச்சேனைக்கு பஸ்ஸில் வந்திறங்கிய இவர், டிப்போவிற்கு அருகில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டே சுடப்பட்டுள்ளார்.

தலையிலும் கையிலும் காயமடைந்து வாழைச்சேனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இவர், பொலீஸ் பாதுகாப்புடன் பொலன்னறுவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்றுவருகிறார்.

(க-8)

## விமானப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னுள்ள பதில் நடவடிக்கையை எடுக்குமாறு நோர்வேத் தரப்பை உயர் மட்டத்தில் வலியுறுத்திக் கேட்டிருப்பதாகவும் தெரிகின்றது.

இந்த விடயத்தில் விசேட சிரத்தை எடுத்து பயனுள்ள பெறுபேற்றைத் தருமாறு நோர்வேப் பிரதமருக்கு இலங்கை ஜனாதிபதி நேரடியாகக் கடிதமென்றை அனுப்பி வைத்திருக்கின்றார் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து நோர்வேப் பிரதமரின் பணிப்புக்கு அமைய இவ்விடயம் குறித்துப் புலிகள் தரப்போடு விளக்கமாகவும் விரிவாகவும் பேச்சு நடத்துவதற்காக நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் ஓரிரு நாள்களில் லண்டன் செல்லவிருக்கின்றார் என்றும் -

அவர் லண்டனில் விடுலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துடன் இவ்விடயம் குறித்துக் கலந்துரையாடுவார் என்றும் நோர்வேத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாளை வன்னியிலிருந்து கொழும்பு வரும் விடுதலைப் புலிகளின் அரசில் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் அரசியல் குழு, நாளைமறுதினம் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து மேற்கு நாடுகளுக்கான - சுமார் ஒருமாத கால - சுற்றுப் பிரயாணத்தை ஆரம்பிக்கின்றது.

இக்குழு நோர்வேயில் தங்கியிருக்கும் சமயமும் புலிகளின் விமானப்படை விவகாரம் குறித்தும் அதுதொடர்பான இலங்கை அரசின் முறைப்பாடு குறித்தும் இக்குழுவினரோடு நோர்வேத் தரப்பு பேச்சு நடத்தும் எனக் கூறப்படுகின்றது.

(க-8)


## திருமணக் கார் வாடகைக்கு

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட (முற்றிலும் குளிரூட்டப்பட்ட) திருமண வைபவங்களுக்கு ஏற்ற கார் மிகககுறைந்த கட்டணத்தில் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு:
T.P. : 0776 258204,
0777 747095.

(42786)(14-17-29)

**COLLEGE OF ENGLISH** பிறவுண் வீதி, யாழ்.

ENGLISH By: T.THANENDRAN (S.L.T.S.2-II, B.Com, H.N.D.A., P.G.Dip in Edu.)

| Time | Wed. | Tur. | Fri. | Sat. | Sun. |
|---|---|---|---|---|---|
| 6.30 P.m. | 10 | 9 | 9 | O/L | O/L |

★ Paper Class O/L (42848)

## யாழ். மக்களுக்கு மீண்டும் ஓர் அரிய வாய்ப்பு
### விமானக் கட்டணத்தில் விலைக் குறைப்பு

கொழும்பு - பாரிஸ் - கொழும்பு ரூபா 61, 200/=
கொழும்பு - றோம் - கொழும்பு ரூபா 59, 300/=
கொழும்பு - பிராங்பேர்ட் - கொழும்பு ரூபா 61, 000/=
கொழும்பு - சுவிஸ் - கொழும்பு ரூபா 60, 600/=
கொழும்பு - லண்டன் - கொழும்பு ரூபா 63, 500/=

கொழும்பு – சென்னை – கொழும்பு
5 பேருக்கு அதிகமாயின் ரூபா 15,100/=
15 பேருக்கு அதிகமாயின் ரூபா 13,100/=

இச்சலுகை இம்மாதம் 31 வரை மட்டுமே!

எற்கின் ஸ்பென்ஸ் ஓவர்சீஸ் ரவல்ஸ்பிறைவேற் லிமிட்
56/15, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
☎ - 021 222 3771, 0777 915 824, 0777 270 452.

(சி-41363)

| கணக்கீடு | Paper Class A/L 2005 |
|---|---|
| S.சயந்தன் (42852) | ஆரம்பம்: 09.03.2005 Wed. Fri. } 6.00 p.m. |

NAVALAR ஆனைப்பந்தி, யாழ்நகர்.


## மரண அறிவித்தல்

### செல்லத்தம்பி இராசையா

2 ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டியை வதிவிடமாகக் கொண்ட செல்லத்தம்பி இராசையா நேற்று (07.03.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*2 ஆம் வட்டாரம்,*
*அல்லைப்பிட்டி.*

தகவல்:
இ.சிவராஜா
(ருமணன் -மகன்).

(42851)(29-14-17)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.